# கருணைக்கடலில் சில அலைகள்

ரா.கணபதி

திவ்ய வித்யா பதிப்பகம்
Flat No.6, No.22, கில்கிரிஸ்ட் அவென்யு,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

திவ்ய வித்யா முதற்பதிப்பு - ஜூன் 2005

உரிமை : ஆசிரியருக்கே

விலை - ரூ.30/-

அச்சிட்டோர் :

வேதா அகாடமி
5, வள்ளுவர் நெடுஞ்சாலை
குரோம்பேட்டை
சென்னை – 600 044.

# பொருளடக்கம்

பக்கம்


1. கருணைக் கடலில் சில அலைகள் ...1

2. நவரத்தினக் களஞ்சியத்தில் சில பொறுக்குமணிகள் ....27

3. காவிய ஜீவிதச் சோலையிலே கால் போன போக்கினிலே ...57

4. காஞ்சி சந்திரசேகரரும் சிருங்கேரி சந்திரசேகரரும் ...82

5. தடுத்தாட் கொண்ட புராணம் ...107

@Page 1

# 1.

# கருணைக் கடலில் சில அலைகள்*

நிற்கவே தள்ளாடும் எண்பத்து நாலாம் பிராயத்தில், காஞ்சி ஸ்ரீ மஉறா பெரியவாள் ஒரு நாள் முன்னறிவிப்பேதுமின்றி வெளியே புறப்பட்டார். புறப்பட்டவர் போய்கொண்டே... ஏ....ஏ... இருந்தார். தமிழகம் தாண்டினார். கர்நாடகத்தில் ஸஞ்சாரம் செய்தார். அப்புறம் மகாராஷ்டிரத்தில், பின்னர் ஆந்திர தேசத்தில். முழுக்க முழுக்கப் பாதயாத்திரையாகவே நிலத்தை நலம் செய்து அவர் காஞ்சி திரும்புகையில் பிராயம் தொண்ணூறு. புறப்பட்டது காளயுக்தி (1978) தமிழ்ப் புத்தாண்டு நன்னாள். திரும்பியது ரக்தாக்ஷி (1984) தமிழ்ப் புத்தாண்டு நன்னாள். சரியாக ஆறாண்டுகள் நடைபெற்ற அந்த இதிஉறாஸ யாத்திரா மார்க்கத்திலே...

பெல்காமிலிருந்து வனசங்கரி போகும் வழியில் ஒரு சிற்றூரிலிருந்து புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றாயிற்று.

வேகுவேகு என்று வந்து ஒரு பக்தர் நடுச்சாலையில் பெரியவாளைப் பிடித்தார். சென்னைவாசியாம். ஏதோ

*1996 'கல்கி' தீபாவளி மலரில் வெளிவந்த கட்டுரை

@Page 2

பெயர் சொல்லி நாயுடு வகுப்பு என்றார். தமது வேண்டுதல்களை விண்ணப்பித்தார்.

அருள்மயமாகக் கண்மூடி கை தூக்கி ஆசி நல்கிய ஸ்ரீசரணருக்கு அவர் வேண்டாத ஒன்றிலேயே கருத்து ஊன்றியிருந்தது. தமக்கே உரிய அபிநய நயத்தில் சாப்பிட்டாயிற்றா என்று 'கேட்டார்'.

"இல்லை" என்று பதில் வந்தது.

பெரியவாளின் பார்வை உடன் வந்த பணியாளர்களில் ஒருவரான பிரம்மசாரி ராமகிருஷ்ணனின் புறம் திரும்பியது. "இவரை அழைச்சுண்டு நாம தங்கியிருந்த ஜாகைக்கே போ. சமையல் பண்ணி இவருக்கு போட்டு அனுப்பி வை. நாங்க இந்த வழியாவேதான் போயிண்டிருப்போம். அடுத்த ஊர்ல வந்து சேந்துக்கோ" என்றார்.

ஹோட்டல் வசதியில்லாத குக்கிராமங்களிலுள்ள மக்களையெல்லாமும் தேடித் தேடிப் போய்ப் பார்த்து அநுக்ரஹம் பொழியவேதானே ஸ்ரீசரணர் இப்படிச் சரணகமலம் நோகப் பாதயாத்திரை செய்தது? அப்போது அவரைத் தேடித் தேடி வெளியூரிலிருந்து வந்தோரிடம் இப்படித்தான் கருணை பொழிவார். 'கரிசனம்' என்று சொல்லக்கூடிய கருணை.

சதாராவிலிருந்து பண்டர்பூர் போகும் வழி. நடுச்சாலையில் ஒருவர் பெரியவாளைப் பிடிக்கிறார்.

அந்த ஒருவர் 'வெளி' பக்தரல்ல. பணியாளர்களிலேயே ஒருவர். தியாகராஜன் என்ற அவரை, ஊர்ப்பெயரை வைத்து 'தாமரைப்பாக்கம்' என்றே சொல்வார்கள்.

தாமரை நயனங்கள் தாமரைப்பாக்கத்தை ஏற இறங்க வருடுகின்றன. அந்த வருடலிலேயே அந்தப் பாரிஷதரின் வயிறு காலி என்று புரிந்து கொள்கின்றன.

@ Page3

டப்பென்று அந்தச் சாலையிலேயே சைக்கிள் ரிக்ஷாவின் பக்கம் அமர்ந்து விட்டார் 'ஜகத்குரு பீடாதீச்வரர்' என்ற பேரந்தஸ்துக்காரர்.

அதென்ன சைக்கிள் ரிக்ஷா என்றால் பாதசாரியாக வரும் ஆசாரக் காவலரின் மீது எதிர்வருவோர் படாமல் சற்றேனும் விலகியிருக்க வேண்டுமல்லவா? அந்த எளிய துறவியின் முரட்டுக் கதராடை முதலான சொற்ப 'உடைமை'களையும் பரிவாரப் பாரிஷதர்களின் வஸ்திரங்களையும் ஊர் ஊராக எடுத்துச் செல்லவும், செல்வழியில் பக்தர்கள் அர்ப்பணிக்கும் பழம், தேங்காய் முதலியவற்றை வாங்கிப் போட்டுக் கொள்ளவும் ஏதேனும் சாதனம் வேணத்தானே வேணும்? இவ்விரு நோக்கங்களையும் பூர்த்தி செய்வதாகப் பெரியவாள் 'கண்டு பிடித்த'தே அந்த சைக்கிள் ரிக்ஷா. (மூடி போடாத ஒரு பெரிய பெட்டிக்குச் சக்கரங்கள் பூட்டிய சைக்கிள் ரிக்ஷா. அதை முன்புறம் ஒரு பாரிஷதர் தள்ளிச் செல்ல, பெட்டியின் பின் புறத்தைப் பிடித்தவாறு பெரியவாள் நடந்து செல்வார். எதிர்வருவோர் விலகியிருக்க உதவியதோடு, பெரியவாள் கண்மூடி ஜப–த்யானம் செய்தவாறேகூட யந்திரகதியில் சென்று கொண்டிருக்க சௌகரியமாக அவர் கண்டு பிடித்த உத்தி. பெட்டிக்குள் இந்த எளியோர் குழாத்தின் உடைமைகளும், அடியார்களின் கையுறைகளும் இடம் பெற்றன.)

பசித்து வந்த பணியாளரைப் பார்த்தவுடன் நட்ட நடுத்தெருவில் உட்கார்ந்து கொண்ட கரிசன யஜமானருக்கு அப்பணியாளரைச் சமைத்துப் போடும் நாழிகை காக்க வைக்கலாகாதென்று இருந்தது.

"சட்னு அவனுக்கு மோர் குடுங்கோ" என்று உடன் வந்தோரிடம் கூறினார்.

@Page 4

மோர் வழங்கப்பட்டது.

வெந்த உணவே புசிக்காத துறவி வேந்தரின் தொண்டர்களுக்கும் சமைத்த சாப்பாடுதான் தேவை என்றில்லை. எனவே, தயிரில் பொரி ஊற வைத்து அதுவும் சிறிதே பொழுதில் தாமரைப்பாக்கத்துக்குத் தரப்பட்டது. (ஸ்ரீசரணரின் மாமூல் பிக்ஷையும் இதுதான்.)

பணியாளர் பசியாறினார். அதைவிட, யஜமானர் மனம் ஆறினார்.

அதன்பின்பே நடையைத் தொடர்ந்தது நடமாடும் தெய்வம்.

சதாரா போகும் வழியில் ஓர் ஊரில் முகாமிட்டிருக்கையில்.

வந்த பக்தர்களில் ஒருவர் கர்ப்பிணி. பெரியவாளைப் பார்க்கும் தாபத்தில் பெங்களூரிலிருந்து தனியே வந்துவிட்டாள்.

அவளை நல்லபடி வீட்டில் சேர்க்க வேண்டும் என்பதில் பெரியவாள் கொண்ட தாபம்!

அவளது விருப்பங்கள் 'ஸபலம்' ஆகவேண்டுமென்று போலும், வாழைப்பழம், சாத்துக்குடி, ஆப்பிள் என்று பழங்களாக நிறையக் கொடுத்தார்.

வந்திருந்த வசதிபடைத்த அடியாரொருவரிடம் "இந்த அம்மாளை கார்ல அழைச்சுண்டு ஸ்டேஷனுக்குப் போய், டிக்கெட் வாங்கிக் குடுத்து ரயிலேத்திவிடு" என்று உத்தரவிட்டார்.

"என்ன அநுக்ரஉறம், என்ன அநுக்ரஉறம்! தெய்வம்னா இதுதான் தெய்வம்!" என்று அந்த அம்மாள் கண்ணீரிடை சொல்லிக்கொண்டே விடைபெற்றாள்.

@Page 5

கடுங்கோடை அதிலும் பாவனரின் பாதயாத்திரை தொடர்கிறது.

பெரியவாளைப் பெரியவாள் என்று தெரிந்து கொள்ளாமல் ஓர் ஏழைக் கிழவர் தன் பாட்டுக்குத் தட்டு தடுமாறிக் கொண்டு போகிறார்.

கண்ட கருணை நெஞ்சு கரைகிறது.

அவரை அழைத்துப் பிரியமுடன் விசாரிக்கிறார்.

பக்கத்துக் கிராமத்தில் அவரது பெண் வீடாம். அதற்குப் போகிறாராம். கையில் காசு கிடையாதாம். கஷ்டமோ நஷ்டமோ பட்டுக் கொண்டு நடந்து போய்த்தான் அங்கே விழ வேண்டுமாம்.

பெரியவாள் அவருக்குக் கனிவகைகள் கொடுத்து உண்ணச் செய்கிறார்.

அப்பக்கமாக ஒரு பஸ் வருகிறது. அதை நிறுத்தச் செய்கிறார்.

ஸ்ரீசரணருக்கு எங்குமே பக்தி மரியாதை உண்டுதான். எனினும் தமிழகத்தை விடவும் பிற மாநிலங்களில் அது பரம பக்தியாகவே ஸகல மக்களிடையும் நிலவியதைச் சொல்லாமலிருக்க முடியாது.

டிரைவரும், கண்டக்டரும் பெரியவாளைக் கும்பிடுகிறார்கள். ஏவலுக்குக் காத்து நிற்கிறார்கள்.

ஏழைக் கிழவரை பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு ஜாக்கிரதையாக அடுத்த ஊரில் இறக்கிவிடுமாறு பெரியவாள் பணிக்கிறார்.

பாக்கியமாகக் கருதி அந்த அதிருஷ்டசாலியை அவர்கள் ஏற்றிக் கொள்கிறார்கள்.

இது ஒரு முறைதான் நடந்த நிகழ்ச்சி அல்ல.

@Page 6

தம்மைப் போலவே தமது பாரிஷதர்களும் கையில் செல்லாக்காசு இல்லாமல் தான் உடன் வரவேண்டும் என்று அவர் விதித்து, அவ்வாறே நடந்த நம்பவொண்ணா அற்புதம் அந்த ஆறாண்டு யாத்திரை! இந்தக் கோஷ்டி மட்டுமே உடனுள்ள போது பெரியவாள் பஸ் அமர்த்திக்கொடுக்கும் ஏழையை இலவசமாக அழைத்துச் செல்லப் பணிப்பார். வெளி பக்தர்கள் உடனுள்ளபோதோ அவர்களிடமிருந்து பஸ் கட்டணம் வசூலித்துக் கொடுத்து விடுவார், நீதியுருவர்.

இன்னோர் இடத்திலிருந்து பெரியவாள் புறப்படும் சமயத்தில் சேரி வாழ் ஹரிஜனங்கள் தரிசனத்திற்காகக் கூடியிருந்தனர். அவர்களின் ஒரு பெண்ணின் இடுப்பிலிருந்த குழந்தை ஒரேடியாக அழுது அமர்க்களம் செய்தது.

கூட்டத்தினர் அந்தத் தாயையும் சேயையும் அப்புறப்படுத்த முயன்றனர்.

தாயிதய தயாமயர் அக்கிராமப் பஞ்சாயத்துத் தலைவரும் கூட்டத்தில் இருப்பதைத் தெரிந்து கொண்டார். அவரை அழைத்து, அழும் குழந்தைக்கு உடனே பசும்பால் தருவித்துத் தரச் சொன்னார்.

பெரியவாள் உத்தரவு என்றபின் கேட்பானேன்? குழந்தைக்குப் பால் வார்க்கப்பட்டது. அதன் தாய்க்கும் வயிற்றிலே பாலை வளர்த்த மகிழ்ச்சி.

"கடவுளே!" என்று பெரியவாளைக் கும்பிட்டாள்.

அந்தக் கந்தர் புடைவைக்காரிக்கு நூறு ரூபாய் கொடுக்கச் சொல்லி அருகிலிருந்த ஒரு தனிகரிடம் கூறினார் பெரியவாள். கண்ணீரும் கம்பலையுமாக அவள் அதைப் பெற்றுக்கொண்டாள்.



கூடியிருந்த எல்லா ஹரிஜனக் குழந்தைகளுக்கும் கல்கண்டு, வாழைப்பழம் விநியோகிக்கச் செய்தார். அதன் பின்பே புறப்பட்டார்.

"கேள்வி வருகிறது என்றாலே அங்கே நிஜ அன்பு இல்லை என்று அர்த்தம். கேள்வி–பதில் (தலையைத் தட்டிக் காட்டி) இந்த இடத்தின் ஸமாசாரம். அன்பு (இதயத்தைத் தொட்டு) இந்த இடத்தின் ஸமாசாரம். தகுதி பார்ப்பது, அவசியந்தானா

என்று பார்ப்பது, நியாய அநியாயம் பார்ப்பது கூடத்தான் – நிஜமான அன்புக்குத் தெரியாது" என்று ஸ்ரீசரணர் கூறுவார். அவரே அந்த நிஜ அன்பின் நிஜ வடிவமாக இருந்தார்.

போகும் வழியில் ஒரு குடுகுடுப்பாண்டி. அவனைப் பார்த்ததில் பெரியவாளுக்கு ஏனோ (ஏனோவா ? கேள்வியல்லவா வந்து விடுகிறது, இங்கே) ஒரு தனி மகிழ்ச்சி.

"குடுகுடுப்பாண்டியைக் கம்பளக்காரன்–றது, தெரியுமோ ? கம்பளி இல்லாட்டாலும் வந்திருக்கறவாள்ளாம் தலா அவனுக்கு ஏதாவது ஒரு வஸ்திரம் குடுங்கோ" என்கிறார்.

மூட்டையளவுக்கே அன்று அவனுக்கு வேட்டை!

"பாஞ்சஜன்யம், பாஞ்சஜன்யம்!" பெரியவாள் சந்தோஷம் பொங்கக் கூறுகிறார். சங்கூதும் பிச்சைக்காரனின் அபஸ்வர சங்கநாதம்தான் பெரியவாளுக்குப் பரந்தாமன் சிங்கநாதமாக கோஷிக்கும் பாஞ்சஜன்யமாக ஒலித்திருக்கிறது.

சலவைத் தொழிலாளி ஒருவனின் தலையிலிருந்த பொதி, மழைநீரில் கரைந்து அவன் உடம்பெல்லாம் உவர்மண் வெள்ளை வெளேரென்று பரவியிருந்ததாம். பவனி வந்து கொண்டிருந்த மன்னரான சேரமான் பெருமாள் நாயனாருக்கு அவன் முழு நீறு பூசிய



சிவமுனியாகவே காட்சி கொடுத்தானாம். அவர் யானையிலிருந்து இறங்கி ஓடிப்போய் அத் தொழிலாளியின் காலில் விழுந்தாராம். இக்கதையைக் கூறிய பெரியவாள், "ஸமீபத்திலேயே நடந்ததாக ஒண்ணு கேள்விப்பட்டிருக்கேன். மகுடிப் பிடாரன் ஒத்தன் நெத்தி நெறய விழுதி பூசிண்டு, பாம்பைத் தோள்ல போட்டுண்டு போயிண்டிருந்தானாம். அவனைப் பாத்துட்டு ஒரு பெரியவர், 'பரமேச்வரா!'ன்னு கத்திண்டு நமஸ்காரம் பண்ணினாராம்" என்றார்.

செல்வநாயகியின் மணாளனை நினைவூட்டிய சங்கு ஊதிக்குச் செல்வம் சேர்த்துத் தர அவரது உள்ளம் விரும்பியது. உடனிருந்த பக்தர்களிடம் அவனுக்குப் பொருள் கொடுக்குமாறு பணித்தார். அன்று நிறையவே பக்தர்கள் சேர்ந்திருந்ததால் சங்கு ஊதிக்கு யதேஷ்டமாகவே சங்கநிதி சேர்ந்தது!

சௌடாபூரிலிருந்து செல்கையில் ராஜஸ்தாணி லம்பாடிகளைக் குடியமர்த்தியிருந்த குடிசைப் பகுதியைப் பார்வையிட்டுக் கொண்டே சென்று அங்கேயே ஒரு பொது ஸ்தலத்தில் அமர்ந்து விட்டார். பார்வை மழுங்கியதாகவே பக்தர்களை நினைக்கச் செய்த எண்பத்தைந்தாண்டுக் கிழவர், "ஒவ்வொரு குடிசையிலேயும் Goddess பாத்தேளா ?" என்று நகைமுகத்தராகப் பாரிஷதர்களைக் கேட்டார். குடில்தோறும் மாட்டப்பட்டிருந்த இந்திராகாந்தியின் படத்தைக் குறித்துத்தான் அவர் அப்படிச் சொன்னது. அந்த லம்பாடிகளுக்குப் புது வாழ்வு அளித்த தேவி என்று சொல்லித்தானே புத்தமைப்புத் துறையினர் அவரது படத்தை மாட்டியிருப்பார்கள் ?

இன்று பெரியவாளே, தமது சாந்நித்திய மாத்திரத்தாலேயே, அந்த லம்பாடிகள் விழுந்து விழுந்து பணிந்து,

@Page 9

லபோ, லபோ மொழியில் வேண்டுதல்களைச் சொல்லிக்கொள்ளும் God ஆக நின்றார்.

தமது பரிவாரத்திலிருந்த தாடிபத்தி சுங்கு சுப்பலக்ஷ்மையா என்ற தனிகரான வைசியரை அழைத்தார். அத்தனை லம்பாடிகளுக்கும் அறுசுவை விருந்து படைக்கச் சொன்னார்.

அவ்வடியாரும் ஆயிரக்கணக்கில் செலவிட்டுப் பெரியவாளின் காருண்ய இச்சையை நிறைவேற்றினார்.

எப்போதுமே குறவர்களிடம் நமது குரவருக்கு ஒரு விரேஷமான ப்ரியம். இது போல் அவர் செய்திருப்பது பலமுறை.

பல இடங்களில் போலீஸார் தாங்களாகவே துணை வந்ததுண்டு.

போஜன காலத்தில் ஸ்ரீ சரணர் மறவாது அவர்களது சாப்பாட்டுக்கான ஏற்பாட்டைப் பற்றிக் கேட்பார்.

தங்களையும் வயிறு–வாயுள்ள மகா மக்களுடனேயே வைத்து இப்படிக் கேட்கும் பெரிய ஸ்தானக்காரர்கள் அபூர்வம் என்று அவர்களில் பலர் தழுதழுத்துக்

கூறியதுண்டு.

அத்தனை உள்ளங்களையும் எப்படித் தொட்டுவிட்டார் தமது தூய அன்பினால்! தொட்டா? பிசைந்தே விட்டார்! ஒவ்வொரிடத்தையும் விட்டு அவர் புறப்படும்போது சேரி மக்களிலிருந்து வைதிக சிரேஷ்டர் வரையிலும், பிச்சைக்காரரிலிருந்து பெரிய தனக்காரர் வரையிலும் அனைவரும் பிரிவுத் துயரில் தவித்துக் கொண்டுதான் விடை தரக் குழுமுவார்கள். கண்ணீர்விட்டே கதறுவோரும் பலர் இருப்பார்கள். எத்தனையோ இடங்களில் அடுத்த முகாம் வரை கூட ஒரு பெரிய பட்டாளமே உடன் சென்றதுமுண்டு.

@Page 10

அந்த ஆறாண்டு பாத யாத்திரையின் போது மட்டுந்தானா? நூற்றாண்டு ஜீவ யாத்திரையிலுமே மைல்கல்களாக இல்லாமல், அடிக்கு அடி கருணைக்கு ஜயஸ்தம்பங்களாக நாட்டிக்கொண்டே சென்றவர் அல்லவா அவர் ?

விதவிதமான அவரது கருணைப் பாலிப்புகளுக்குக் கொஞ்சம் கொஞ்சம் ஸாம்பிள் பார்க்கலாம்.

ஒரு சமயம் பெரியவாள் திருத்தணியை அடுத்த பொன்பாடியில் முகாமிட்டிருந்தார். ஒரு ஸென்ட் தொழிற்சாலைக் காம்பவுண்டுக்குள்ளேயே இருந்த அதன் அதிபரான தெலுங்கர் வீட்டில் முகாம்.

புஷ்பச் செடிகளையெல்லாம் சுற்றிப் பார்த்து மஉறா புஷ்பமாக மலர்ந்தார் ரஸிக சிரேஷ்டர்.

அப் புஷ்பங்களின் நுணுக்கங்களை விரித்துக் கூறி அறிவுத்திறனால் அதிபரை மலைக்க வைத்தார்.

பெரியவாளுக்குத் தாம் திரவிய கைங்கரியம் செய்ய விரும்புவதாகவும் அதன் பொருட்டாகத் தமக்கு ஏதேனும் பணி உத்தரவிட வேண்டும் என்றும் அதிபர் கேட்டுக்கொண்டார்.

"ஒன் ஃபாக்டரித் தொழிலாளிகளுக்கெல்லாம் நல்ல சாப்பாடு பண்ணிப் போடு" என்றார் பெரியவாள்.

அந்த அருட்திறத்தில் மலைத்தார் ஆலையதிபர்.

தமது ஊழியர்களிடம் அந்த மடாதிபர் காட்டிய கருணை! வெளிப்பட அதிகம் காட்ட மாட்டார். ஆனால் உரிய சமயத்தில் அது பிதிர்ந்து வந்து அதன் ஆழத்தைக் காட்டிவிடும். நடுத் தெருவில் உட்கார்ந்து கொண்டு தாமரைப்பாக்கத்துக்குப் பசி தணித்தது பார்த்தோமே. அது போல், 'வெளி' பக்தர்களிடம் கருணையாலேயே இவர்களை நன்றாக வேலையும் வாங்குவார். தனிப்பட

@Page 11

இவர்களிடமுமே அக்கருணையைக் கொட்டவும் செய்வார்.

கும்பகோணம் பட்டுப் பாட்டி ஸ்ரீமடத்திடமும் மடாதிபதியிடமும் பக்தி மிக்கவள். பிள்ளை குட்டி இல்லாத அவள், வியாஸராய அக்ரஉறாரத்திலிருந்த தன் இரண்டு வீடுகளை மடத்திற்கே எழுதி வைத்தவள். சாமர்த்தியசாலினி, உறிந்தி, மராட்டி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் எல்லாம் பேசுவாள். யாவரிடமும் ப்ரியமாய்ப் பழகுவாள்

அவர் சதாராவுக்கு வந்திருந்தபோது குளிர்காலம். ஒரு நாள் காலை ஸ்ரீசரணர் அணுக்கத் தொண்டர் ஸ்ரீ பாலுவிடம் ஒரு கம்பளிப் போர்வை கொடுத்து, "இதைப் பட்டுப் பாட்டிக்குக் கொடு" என்றார்.

அன்று நள்ளிரவு. சற்று முன்புதான் கண்ணயர்ந்த பெரியவாள் எழுந்திருந்தார். பாலுவையும் எழுப்பி, "பட்டுப் பாட்டிக்குப் போர்வை குடுத்தியோ ?" என்று கேட்டார்.
பாலு துணுக்குற்றார். மறந்தல்லவோ விட்டார் ?

"ஸரி. இப்பவே, போய் அவ எங்கே இருந்தாலும் தேடிக் கண்டுபிடிச்சுக் கம்பளியை அவகிட்டே சேத்துட்டு வா" என்றார் ஸ்ரீசரணர்.

நடுராத்திரி. அதோடு குளிரான குளிர். எனவே, "காலம்பற குடுக்கறேனே" என்றார் பணியாளர்.

"இல்லை இப்பத்தான் சேர்த்தாகணும். ராவுலதானே குளிர் ஜாஸ்தி ?" என்று கொடுமை பண்ணினார் அதிபர்.

பாலுவும் அலைந்து திரிந்து கபிலேச்வர் என்ற மராட்டியக்காரர் வீட்டில்

குளிரில் முடக்கிக் கொண்டு கிடந்த பாட்டியைக் கண்டுபிடித்து அவளிடம் போர்வையைக் கொடுத்தார்.

@ Page 12

அவள் பெற்ற மகிழ்ச்சி! பெரியவாளின் பட்டு இதயமாக்கும் கம்பளியாக அந்தப் பட்டுப் பாட்டியை இதமாகப் போர்த்தியுது!

இதே பாலு பின்னொரு நாள் ஸம்போட்டி என்ற ஊர்க் கோயிலின் திறந்த வெளித் திண்ணையில் ஒரு மார்கழி இரவில் படுத்துறங்கி மறுநாள் காலை விழித்தெழுந்த போது தம் மீது ஒரு சால்வை போர்த்தியிருப்பதை உணர்ந்தார். சக பாரிஷதர்களான வேதபுரியோ ஸ்ரீகண்டனோ போர்த்தியிருக்க வேண்டும் என்று நினைத்தார். இது சகஜ நிகழ்ச்சிதான். எனவே இது பற்றி அவர் எவரிடமும் விசாரிக்கவில்லை.

நாலு நாள் ஆயிற்று.

"போர்வை நன்னாயிருக்கே, ஏது!" என்று ஸ்ரீசரணர் கேட்டார்.

பாலு தாம் ஊகித்ததைச் சொன்னார்.

பெரியவாள் அப்படி இல்லை என்று ஜாடை செய்து, தம் மார்பில் தட்டிக் காட்டிக் கொண்டார், கள்ளச் சிரிப்புடன்!

தூங்கும் பணியாளருக்கு யஜமானரேதான் சால்வை உபசாரம் செய்திருக்கிறார்!

"நல்ல பணியில் நீ பாட்டுக்குக் கீழேயும் ஒண்ணும் போட்டுக்காம, போத்திக்கவும் போத்திக்காமப் படுத்துண்டிருந்தியா? ஓங்கம்மா பாத்தா எப்படி நெனச்சுண்டிருப்போன்னு தோணித்து" என்றார், ஆயிரம் தாயின் அங்கலாய்ப்பை உள்ளே பதுக்கி வைத்திருந்தா 'தாயிற் சிறந்த தயாவான தத்துவர்'.

"வேதபொறே! வேதபொறே! வேதபுரி என்ற தம்புத்திரனின் பெயரை அப்படித்தான் ஓர் அவசரத்துடன் சொல்லிக் கூப்பிடுவார் தகப்பனார் ஸீதாராமய்யர்.

@ Page 13

நாகரிகர்களின் ஒப்பனைகள், வாயசைப்பு நகாசு, ஒலி நயம் அறியாக எளியவர். நல்ல

மநுஷ்யர்.

தாயை இழந்து சிறு வயதிலேயே ஸ்ரீசரணரிடம் வந்த வேதபுரி, நீண்ட நெடுங்காலம் அவருக்கு அத்யந்த கைங்கர்யம் செய்து இன்று அடியார் வட்டம் வேதபுரி சாஸ்திரிகளாக அறிந்திருப்பவர்தாம். ஸ்ரீசரணரே தமது அந்திம நாள்களில் அவரை "ப்ரஉற்மஸ்ரீ" என்று குறுநகை தவழ அழைப்பது வழக்கம்.

பெரியவாள் பணிக்கு அவர் வந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பகற்பொழுதில் நெடுநேரமாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அவரை எழுப்புவதற்காகத்தான் அந்த 'வேதபொறே!' மீண்டும் மீண்டும் ஒலித்தது.

"வேதபொறே!" பெரியவா உத்தரவாறதுடா! தூங்கிண்டே இருக்கிறே!"

வேதபுரி புரண்டார். ஓயாப்பணியின் களைப்பு பட்டவருக்குத்தானே தெரியும்!

மீண்டும் தந்தையார் பெரியவா உத்தரவாறதைச் சொல்லி உசுப்ப, "என்னப்பா நீ!" என்று அலுத்துக் கொண்டு எழுந்தார் வேதபுரி.

அப்பாவா ? "எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படி கால் தொடங்கி வந்து வழி வழியாட் செய்த" சாசுவத அப்பனாகப் பெரியவாளல்லவா எதிர் நிற்கிறார் ?

ஸீதாராமய்யரை அப்படியே 'மிமிக்' செய்த மாயக் குறும்பராகச் சீடர் முன் சிரித்து நின்றார் குரு ஜகத்குருவின் ஸௌலப்யம் அப்படி!

"வேதபொறே! வேதபொறே!" – பல்லாண்டுகளுக்குப் பின் ஒரு நள்ளிரவில் குரல் எழுகிறது.

@ Page 14

காலம் ஓடிவிட்டதில் குரலில் நடுக்கம் கண்டுவிட்டது. அதைவிடக் கோளாறாக ஸீதாராமய்யரின் இரு கண்களும் வெகுவாகப் பார்வை இழந்து விட்டன.

இரவு நடுவிலே அவருக்கு ஒரு முறை நீர் இறக்கிக் கொள்ள வேண்டும். பிள்ளையை எழுப்புவார். பிள்ளை அவருக்கு ஊன்றுகோல் கொடுத்து, அருகாக

உடன் சென்று, கொல்லைப்புறம் அழைத்துப் போய்த் திரும்பக் கொண்டுவந்து விடுவார்.

"வேதபொறே! வேதபொறே!"

வேதபுரி எழுந்த வரும் அரவம் மெலிதாகக் கேட்கிறது. பெரியவாள் வெகு அருகிலேயே நித்திரை கொண்டிருப்பதால் போலும், முடிந்தமட்டில் ஓசைப்படாமல் வருகிறார்.

ஸீதாரமைய்யரைத் தொடுவது போல் பக்கத்தில் கைத்தடி நாட்டப்படுகிறது.

அதைப் பிடித்தபடி அவர் எழுந்திருக்க, அவரைப் பிடிக்காத குறையாக நெருங்கியிருந்து புந்திரர்கொல்லைப்புறம் அழைத்துப் போய் அமர்த்துகிறார்.

இயற்கையழைப்புக்குத் தகப்பனார் பதிர் கொடுத்த பின் சுத்தி செய்து கொள்ள நீர் மொண்டு வந்து தருகிறார்.

புத்திரரின் எல்லாக் காரியத்திலும் இன்று ஓர் அலாதி அமரிக்கை, அமைதி.

தந்தையாரைத் திரும்பவும் சப்தம் செய்யாது அழைத்து வந்து படுக்க வைத்து விட்டு மகனார் உறங்கப் போகிறார்.

மறுநாள் அப்பாவும் பிள்ளையும் பேசி கொண்டிருக்கும்போது பிள்ளை, "ஏம்பா நேத்து ராத்திரி நீ ஏந்திருக்கலியா என்ன ?" என்று கேட்டார்.



"ஏந்திருந்தேனே! நீதானேடா கொண்டு விட்டு அழைச்சிண்டு வந்தே ?"

"என்னப்பா சொல்றே ? நான் எங்கே கொண்டு விட்டேன் ?"

பின் யார் அவரைக் கொண்டு விட்டது ?

அங்கு படுத்திருந்த ஒவ்வொருவரையும் விசாரித்துப் பார்த்ததில் எவருமே இல்லை என்று தெரிந்தது.

'ஆஉறா, அப்படியா?' பெரியவாளிடம் கேட்க, அவரது வாய் மௌனம் பூண்டது. ஆனால் கண்களும், இதழ்க் கடைகளும் பேசின, கருணைக் காப்பியமே பாடின!

வேதபுரியல்ல, வேதம் விளங்கவே வந்த அவதார புருஷர்தாம் நள்ளிரவில் தொண்டரின் தந்தைக்குத் தொண்டு செய்திருக்கிறார்! அதுவும் எப்படிப்பட்ட அசங்கியம் பார்க்காத குற்றேவர் தொண்டு!

தமக்காகத் தொண்டு செய்த அந்தச் சீடரை, மடத் தொண்டர்கள் அனைவரையுமேதான், தூக்கத்தில் சிரமப் படுத்தலாகாது என்ற அருட்பாங்கில் தமது ஸ்வபாவமான அமரிக்கையும் அமைதியும் கூடுதலாக, ஓசை செய்யாமல் கருணைக் கவிதை நடத்தியிருக்கிறார். அதிலேயே தொண்டரின் தந்தைக்குத் தம்மைக் காட்டிக் கொள்ளாத மர்ம நாடகமும் நடித்திருக்கிறார்! அன்றொரு நாள் தந்தையாக நடித்தவர் இன்று மகனாக நடித்திருக்கிறார்.

கூடியிருந்த அடியார்களிடம் அதிசயமாக ஒன்று கேட்டார் ஸ்ரீசரணர் : "எனக்கு யாராவது உறார்லிக்ஸ் வாங்கிக் குடுப்பேளா ?"

யாராவதாவது ? அத்தனை பேருமே இப்படியொரு பாக்கியமா என்று ஓடிப் போய் உறார்லிக்ஸ் வாங்கி வந்தார்கள்.

@ Page 16

பத்து பாட்டில்கள் சேர்ந்தவுடன், "போறும், போறும்! எவ்வளவு நாளுக்கு எவ்வளவு உறார்லிக்ஸ் சாப்டறது!" என்று பெரியவாள் கூறி நிறுத்திவிட்டார்.

அந்த பக்தர்களுக்குப் பிரஸாதம் கொடுத்து அனுப்பினார்.

ஊனினை உருக்குவதே காரியமாக இருந்த துறவி கடும் ஆசார சீலர், உறார்லிக்ஸ் கேட்டுப் பெற்ற மர்மம் என்ன ?

கிங்கரர் ஒருவரின் தகப்பனார் மிகவும் நோய்வாய்ப் பட்டு பெரியவாள் அநுக்ரஉறத்தால் பிழைத்தெழுந்திருந்தார். நோயில் நொய்ந்த அவருடைய உடம்பு தேறத்தான் உறார்லிக்ஸ் சேகரித்தார் ஸ்ரீசரணர்.

மருந்து, பானவகை முதலானவற்றி ஃபார்முலாக்கள் கசடறத் தெரிந்து கொண்டிருந்த பெரியவாள் எளிதில் செரிக்கும் உணவு கொண்டே ஊட்டம் பெற வேண்டியவர்களுக்கு உறார்லிக்ஸ் அநுமதித்து வந்தார்.

மடத்தில் குற்றேவல் செய்யும் பாட்டாளி மக்கள் பெரியவாளை அதிகம் கண்டு பேசும் வழக்கமில்லை. ஆனால் இடம் தெரியாமலே எங்கோ தெறித்த அத்தர், அறை முழுதும் ஸுகந்தம் பரப்புவது போல் அவரது கருணையன்பு அவர்கள்பால் ரகசியமாகப் பொசிந்து கொண்டேதானிருந்தது.

கடும் ஆசார சீலரும் கொள்கைவாதியுமான ஸ்ரீசரணவர் தாக்ஷிண்யத்தின் எல்லைக்கே போய் அவர்களுக்காக எவ்வளவு விட்டுக் கொடுத்தார் ?

மஉறாத்மாவும் ராஜாஜியும் மதுவிலக்குப் பிரசாரம் தீவிரமாகச் செய்துவந்த நாளில் பெரியவாள் அதற்குப் பேராதரவு அளித்தார். "நான் இன்று முதல் கள்ளைத் தொடுவதில்லை" என்ற வாசகத்தை, ஆதிசங்கரர்

@Page 17

சாக்ஷியான பிரமாண பத்திரமாகவே (சூளுரையாகவே) அச்சிட்டு நாடெங்கும் விநியோகித்துக் கையொப்பம் வாங்கியவர். ஒப்பமிடுவதற்கு ஊக்கியாக மடத்துப் பிரஸாதம் அனுப்பி வைத்தவர். புகைபிடிப்பது, காப்பி – டீ அருந்துவது ஆகியவற்றை அவர் எவ்வளவு ஆக்ஷேபித்தாரென்று உலகறியும். அப்படிப்பட்டவரே உடல் நோகப் பணி செய்யும் தம் பாட்டாளி ஏவலர்களுக்கு, குறிப்பாகப் பல்லக்கு தூக்கும் போயிகளுக்கு உற்சாமூட்டிட தேவைதான் என்று தோன்றும்போது இவற்றையும் அளவுக்குட்பட்டு அநுமதிக்கவே செய்தார்.

இங்கே அவரது பல்லக்குப் பயணம் பற்றிச் சொல்லா திருக்கக் கூடாது.

துறவிகளுக்கான தலையாய தர்மம் மூன்று ட: பிரம்மசர்யம், உடைமையின்மை, அஉறிம்ஸை, மூன்றையும் அப்பழுக்கின்றி அநுஷ்டித்த துறவி வேந்து அவர். உறிம்ஸை எனத் தோன்றும் பல்லக்குப் பயணத்தை அஉறிம்ஸைக்காகவேதான் தாம் பின்பற்றுவதாக அவர் விளக்குவார். சக்கரம் பூட்டிய வாஉறனம் எதுவாயினும் சக்கரத்தின் கீழ் பூச்சி–பொட்டுக்கள் நசுக்கப்பட்டு சாகும் ஏது உண்டு. மனிதப் பாதந்தான் நடுவிலுள்ள குழிவாலும், விரல்களிடை இடுக்குக் கொண்ட அமைப்பாலும் அதிகப் பரப்பு நிலத்தில் பதியாமலும், அதோடு அடியில் செல்லும் ஜீவ ஜந்துக்கள் நெளிந்து தப்பியோட வாகாகவும் இருப்பதால் அதுவே இருப்பதற்குள்

அதமபக்ஷ உறிம்ஸைத் தோது உள்ளது. இதனால்தான், வாஉறனத்தில்தான் செல்ல வேண்டும் என்று ஏற்படும் போது அவர் பல்லக்கையே உவந்தார்.

"கார்ல போறேன், குறுக்கே ஏதோ ஐந்து ஓடறது ; ஒண்ணும் பண்ணிக்க முடியலை. அது அரைபட்டுடறதுன்னா நான் என்ன பண்ணிப்பேன் ?" என்று அவர்

@ Page 18

அடிவயிற்றிலிருந்து கேட்டதுண்டே! "அதோடு ஸந்நியாஸ ஆச்ரமம் போனது போனதுதானே ?" என்றார்.

இங்கு ஓர் ஆச்சரியம் சொல்லவேண்டும். பெரியவாள் உள்ளே இருந்தால் பல்லக்கின் கனம் குறைந்துவிடுமாம்! போயிக்களில் பலர் சொன்ன விஷயம்!

குரு–லகு என்று எதிர்ப்பத இணை சொல்வார்கள். குரு என்றால் கனமானது. லகு என்றால் லேசானது. நமது மஉறா கனம் குருவோ அதி லகுவாக இருந்தவர்தானே ?

காஞ்சிக்கும் ஸ்ரீபெரும்புதூருக்கும்* இடையேயுள்ள சந்தவேளூரில் அவர் முகாமிட்டிருந்த சமயம். பக்கத்து ஊர் மார்வாரி ஒருவர் கூடை கூடையாகவும் தட்டு தட்டாகவும் மடத்திற்கு வேண்டிய மளிகைச் சரக்குகள் அனைத்தும் கொண்டு வந்து சமர்ப்பித்தார்.

அங்கணம் போதாமல் பரப்பப்பட்டிருந்த அவற்றில் எங்கோயிருந்த ஒரு தட்டைப் பெரியவாள் குறிப்பிட்டுக் காட்டி அருகே எடுத்துவரச் சொன்னார். அதில் நன்கு பாக்கிங் செய்த பொட்டலங்கள் இருந்தன.

தெரிந்தே அத் தட்டைக் கொண்டுவரச் சொன்னவர், தெரியாதவர் போல, அதில் என்ன இருக்கிறது என்று மார்வாரி பக்தரைக் கேட்டார்.

பீபெர்ரி தரமான வெரெய்டி குண்டுக் காப்பி கொட்டையும், அஸ்ஸாமிலிருந்து வரவழைத்த ஸ்பெஷல் டீ பொடியும் இருப்பதாகச் சொன்ன மார்வாரி, அவற்றை 'ஸ்வாமிஜி மஉறராஜ்' காலை எழுந்தவுடன் உபயோகித்துக் கொண்டால் தமக்குப் பரம பாக்கியம் என்று கூறினார்.

*'பூத புரி' என வழங்கிய பூத ஊராகிய அது பூதூரே ; முன்னொரு காலத்தில்

புதிதாகத் தோன்றிப் புதூர் என்றோ புத்தூர் என்றோ பெயர் பெற்ற ஊர்களில் ஒன்றல்ல என்று ஸ்ரீ பெரியவாள் விளக்கியிருக்கிறார்.

@Page 19

"கிரஉறசாரம்! இப்படிச் சொல்கிறானே!" என்று மடத்துச் சிப்பந்திகள் பேசிக் கொண்டனர்.

அன்புள்ளத்தையே நோக்கும் ஸ்ரீசரணரின் திருமுகத்தில் புன்னகை பொன் பூசியது. "இன்னும் நான் காப்பி, டீ சாப்பிட ஆரம்பிக்கவில்லை" என்று குறும்பாகச் சொன்னார். தம்மையே எகத்தாளம் செய்து கொள்ளும் குறும்புதான்! ஆசாரத்தின் கடும் காவலர் என்று நாம் அவரைக் கருதினாலும் அவரோ தாம் அதில் முழு மார்க் வாங்கவில்லை என்றும், நாளுக்கு நாள் முந்தைய மார்க்கை விடக் குறைவாகவே வாங்கி கொண்டிருப்பதாகவும்தான் சொல்லிக் கொண்டார். அதனால்தான் 'இன்னும்' என்ற அந்த அர்த்தபுஷ்டியுள்ள பதப்பிரயோகம்!

"பெரியவா இதெல்லாம் சேத்துக்க மாட்டா. எங்களையும்..." என்று சிப்பந்தியொருவர் மார்வாரியிடம் தொடங்க, பெரியவாள், சொடக்குப் போட்டு அவரை அடங்கி விட்டு "போய் பாராக்காராளையெல்லாம் அழைச்சுண்டு வா" என்று உத்தரவிட்டார்.

ஸ்ரீமடத்தில் 'பாரா' என்ற காவல் செய்யும் தொழிலாளிகள் அழைத்து வரப்பட்டனர். "ஸேட்ஜி நெறய்யக் கொண்டு வந்திருக்கார். ஒங்களுக்கேதான் எடுத்துக்கோங்கோ!" என்றார்.

அவர்கள் பரம சந்தோஷமாக காப்பி, டீ பொட்டலங்களை அள்ளிக்கொண்டு போனார்கள்.

"ஒன்னால இவாளுக்க ரொம்ப உபகாரம்" என்று ஸ்ரீசரணர் 'ஸேட்ஜி'யைப் பார்த்துச் சொன்னார். அதில் அங்கீகார முத்திரை பூர்ணமாகத் தொனித்தது.

குற்றம் செய்து விட்டோம் போலிருக்கிறதே என்று இடையே துவண்டு போன ஸேட்ஜிக்குப் பரம சந்தோஷம்.

இப்படியேதான் மதாசரணைகள் அறியாத ஒரு வெங்காய மண்டிக்காரர் நாலு

மூட்டை அந்த மடித்தப்புச்

@Page 20

சரக்கை ஸ்ரீமடத்துக்குக் கொண்டு வந்து விட்டு, விஷயமறிந்து வெட்கித் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்ட போதும் பெரியவாள் செய்தார். அந்த வியாபாரியின் கையாலேயே ஸ்ரீமடத்துப் பாட்டாளிகளுக்குச் சரக்கை விநியோகிக்கச் செய்து அவருடைய உச்சி குளிரச் செய்தார்.

இங்கெல்லாம் பெரியவாளுக்குத் தொழிலாளிகளிடமிருந்த தாக்ஷிண்யப் பிரியமும்தானே வெளியாகிறது ?

அப் பாட்டாளிகளுக்குப் பொங்கல் பண்டிகை ஒரு குதூஉறல விழா. பொங்கலன்று அவர்களுக்குக் காய்கறி, கனி வர்க்கங்கள் நிறைய கொடுப்பது மடத்து வழக்கம். மறுநாள் மாட்டுப் பொங்கலன்றுதான் அவர்கள் 'எசமான்' என்றே சொல்லும் பெரியவாளிடம் அணுகி வந்து பணிவது. மடத்தில் அளித்த புத்தாடைகளைப் புனைந்து வந்து, தாங்களும் எசமானுக்கென்று வஸ்திரம், சால்வை, பழங்கள், புஷ்ப மாலைகள், வெற்றிலை பாக்கு கொண்டுவந்து ஸமர்ப்பித்து தண்டனிடுவார்கள்.

"பால் பொங்கித்தா!" என்று பெரியவாள் கேட்க, "பொங்கித்து எசமான்" என்று ஒவ்வொருவரும் சொல்வார்கள்.

பெரியவாள் சொல்லி அவர் முன்னிலையிலேயே அவர்களுக்குச் சந்தனம், கற்கண்டு, பழம், தாம்பூலம் வழங்கப்படும்.

தாமும் ஒரு பெரியவர் என்று – பெரியவாள் என்கிற பெயரெடுத்ததற்குக் காரணம் தமக்காகத் தொண்டு செய்த பெரியவர்கள்தான் என்று ஒரு முறை நன்றி நெஞ்சுடன் கூறினார் ஸ்ரீசரணர். அப்போது அவ்வழி சென்று கொண்டிருந்த ஒரு பாராக்காரரைக் காட்டி, "அந்தப் பெரியவாள்ல ஒத்தர்" என்றார்!

@Page 21

ஒரு பூர்ணிமை தினம். காலைப் பொழுதிலேயே பூர்ண சந்திரனாக தரிசனம் சாதித்துக் கொண்டிருந்தார் நம் சந்திரசேகரேந்திரர்.

ஒரு பக்தர் சவரன் நாணயம் சமர்ப்பித்தார்.

"இதெல்லாம் எனக்கு என்னத்துக்கு ?" என்றார் பெரியவாள். அதை ஏற்க அவர் லஜ்ஜைப்படுவது போலவே இருந்தது. மடத்தின் ஆதிபத்தியத்தை முற்றிலும் தமது வாரிசுக்கே ஆக்கிய பிறகும் பொன்னும் பொருளும் தம்மிடம் சேர்வதில் அவர் கொண்ட லஜ்ஜையாகவே அது அவருக்கு ஓர் எழில் சேர்த்தது.

அச் சமயம் காவேரிப்பாக்கத்திலிருந்து ஒரு நாவிதர் வந்து பணிந்தார்.

"எடுத்துக்கோ!" என்று சவரன் தட்டை அத்தொழிலாளிக்குப் பெரியவாள் காட்டினார்.

நாவிதர் உணர்ச்சிவசமானார், "மகளுக்குக் கண்ணாலம் நிச்சயம் பண்ணியிருக்குங்க. திருமாங்கல்யத்துக்குப் பெரியவங்ககிட்டே கேக்கலாமான்னே வந்தேனுங்க. கேக்காமலே பெரியவங்க கொடுத்திட்டீங்க!" என்றார்.

"வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழு மாந்தர் குலதெய்வம்"

என்று பெரியவாளை நிச்சயம் கூறலாம். குலதெய்வம் மட்டுமின்றி அவர்களுடன் மனத்தால் சகமானுடராகவும் நிற்கும் அருளாளர் அவர்.

தொழில் புரிந்து உண்பவர் மட்டுந்தானா ? ஒன்றுக்கும் உதவாதவர் என்று கரித்துக் கொட்டப்பட்டவர்களும் தம்மைச் சேர்ந்தவரே என்று சொல்லிக்கொண்ட அன்புத் தெய்வம், எளிமைத் தெய்வம் அவர்.

@Page 22

மடத்துப் பணியாளருள் 'ஐ.க்யூ' போதாத, வருவோரிடம் பழகும் விதமும் தெரியாத ஒரு பிள்ளையாண்டான். அவனுடைய ஊரில் நல்லபடியாக ஒரு தொழிலில் அமர முடியாமல் ஸ்ரீசரணரிடம் வந்து சேர்ந்தான். ஸகலருக்கும் சரணாலயமாக இருந்த கருணாலயர் அவனை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி மானேஜரிடம் சொல்லி அப்படியே நடந்தது. பெரியவாளின் கருணையாலேயே ஸ்ரீ மடத்தில் பணியிலிருந்து வந்தான்.

அவனுடைய ஊர்ப் பிரமுகர் தரிசனத்திற்காக வந்தார். அவர்

பிள்ளையாண்டானைத் தூக்கியெறிந்து பெரியவாளிடமே குறை கூறினார். "காக் காசுக்கு பிரயோஜனமில்லாதவன். வெறும் குப்பை. ஊர்ல குப்பை கொட்டியாச்சு. இப்ப இங்க மடத்துல குப்பை கொட்றானாக்கும்" என்றார்.

பெருமாளிடம் அவனது கிங்கரர் பற்றிப் பெரிய பிராட்டியே குறைசொன்னாலும் அவன் கேட்டுக் கொள்ள மாட்டானென்று பெரியாழ்வார் பாடி வைத்ததைப் பெரியவாள் மெய்யாக்கினார்.

"ஓன் குத்தப் பத்ரிகைக்குக் காரணம், ஓன்னை அவன் உபசாரம் பண்ணி வரவேத்து என் முன்னாடி கொண்டு வந்து நிறுத்தாததுதானே ?" என்று பிரமுகரைச் செமை தூக்கலாகத் தூக்கியெறிந்த பெரியவாள் தொடர்ந்தும் ஒரு பிடி பிடித்தாரே பார்க்க வேண்டும்! அதோடு நமக்குப் பிடிபடாத அவரது ஆழ அகலங்களில் ஒரு நெஞ்சுருக்கும் பகுதியையும் தம்மையறியாமல் திறந்து காட்டிவிட்டார்!

சொல்வார் : "குப்பைன்னுதானே சொன்னே ? நீங்கள்ளாம் சுத்தம் பாக்கற பெரிய மநுஷா. அதனால குப்பை – கூளம் ஓங்களுக்கு ஒதவாதுதான். ஆனா லோகம்னு இருந்தா குப்பை – கூளமும் இருக்கத்தானே



செய்யும் ? அதைக் கொட்டி வைக்கவே குப்பைத் தொட்டின்னும் இருக்கத்தானே இருக்கு ? நான்தான் அந்தக் குப்பைத் தொட்டி. ஓங்களுக்குத் தேவைப்படாத குப்பையும் கூளமும் எனக்குத் தேவைதான்.

"தோ பாரு! குப்பையிலேயும் ஓங்க மாதிரி சுத்தம் பாக்கறவாளுக்கு இஷ்டமானது கெடைக்கும், தெரியுமோ ? இங்கேயே இந்த மடத்துக் குப்பைக் குழிலேந்து தான் ஒரு பறங்கிக் கொடியும் பூசணிக் கொடியும் மொளச்சு அப்படியொரு காயா உருட்டித் தள்ளி ஓன் மாதிரி சுத்தக்காராளும், 'இந்த மாதிரி டேஸ்ட் சாப்பிட்டதேயில்லை'ன்னு ஸந்தோஷமா சாப்பிட்டுட்டுப் போயிண்டிருக்கா, தெரிஞ்சுக்கோ, 'குப்பையிலே குருக்கத்தி'ன்னு ஒசந்த ஜாதி புஷ்பம் பூக்கறது, தெரிஞ்சுக்கோ, 'குப்பை மேனி'ன் னே அப்பேர்ப்பட்ட ஒளஷத மூலிகையும் இருக்கு, தெரிஞ்சுக்கோ.

"இன்னூணு ஞாபகம் வெச்சுக்கோ – 'குப்பையைக் கௌறாதே'ங்கறாளே. அதைத்தான் சொல்றேன். கௌறினா பூச்சியும் புழுவுமா உள்ளேயிருந்து வந்து பிடுங்கும். இப்ப நீ குப்பையைக் கௌறித்தானே நான் ஒண்ணைப் பிடுங்கறேன் ?"

சம்–கரராகவே இனியன செய்யும் பெரியவாள் கொண்ட ருத்ர கோலத்தில் பிரமுகர் நடுநடுங்கி விட்டார்.

பெரியவாளிடம் அவர் மன்னிப்பு வேண்டி நமஸ்கரிக்க, ருத்ரமூர்த்தி சங்கரியாகவே குளிர்ந்தார்.

சுத்த ஸத்வப் பிண்டமான பெரியவாள் தம்மைக் குப்பைத் தொட்டி என்று சொல்லிக் கொண்டதில்தான் எத்தனை உட்பொருள்!

இந்தக் 'குப்பை' போல இன்னொரு 'தண்டம்'.

@Page 24

ஸ்ரீசரணர் காலையில் ஜபம் செய்து கண் திறந்த போது கண்ணும் கண்ணீருமாக ஓர் இளைஞன் நின்று கொண்டிருக்கக் கண்டார். பரிவொழுக அவனை அருகழைத்து, "யாருப்பா ? ஏம்பா அழறே ?" என்று கேட்டார்.

அந்தக் கனிவில் இளைஞனின் அழுகை அதிகரித்து விட்டது. "ஒக்காருப்பா" என்று அவனைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு, அவன் அழுது அடங்குவதற்காக வள்ளிசாகப் பத்துப் பதினைந்து நிமிஷம் காத்துக் கொண்டிருந்தார்.

அழுகை அடங்க ஆரம்பித்ததும், "கவலைப்படாமதேப்பா. ஒனக்கு என்ன வேணும் ?' என்று குழைவாகக் கேட்டார்.

பையன் நன்றாகவே பேசலானான். தன் பெயர், ஊர் இத்யாதி சொல்லி, "படிப்பு முடிஞ்சு ரெண்டரை வருஷம் ஆறது. வேலை ஒண்ணும் கெடைக்கலை, எத்தனையோ அப்ளிகேஷன் போட்டாச்சு. பலவிதமாக முயற்சி பண்ணியாச்சு. ஒண்ணும் பிரயோஜனப்படலை.

"ஆத்துல ரொம்ப இல்லாமை. ஸஹோதரிக்குக் கல்யாணம் பண்ணணும்கிறது வேறே! அதனால நொந்து போயிருக்கேன்.

"நானே என்னை நொந்துண்டிருக்கச்சே அப்பா வானா கண்டப்போ எல்லாம், 'தண்டம்', 'தண்டம்'னு ஓயாமக் கரிச்சுக் கொட்டிண்டிருக்கார். தண்ட சப்தம்

கேட்டுக் கேட்டு என்னால தாங்கவே முடியலை. ஆத்துல இருக்கவே முடியாமத்தான்..."

மீண்டும் அழுகை. அதுவே பேசி முடித்தது. "ஆறுதல் பெற மூலஸ்தானம் ஸ்ரீசரணர் சந்நிதிதான் என்று தேடி வந்து விட்டேன்" என்பதை!

@Page 25

"அப்பா கொழந்தே! நீ கொஞ்ச நேரம் மனஸைத் தேத்திக்கிண்டு இங்கேயே ஒக்காந்துண்டிரு. நான் கொஞ்சம் என் கார்யத்தை முடிச்சுண்டு வரேன்" என்றால் ஸ்ரீசரணர். தந்தையே தண்டமாகத் தள்ளியவனிடம் மனமொட்டிக் கூறினார்.

அவருடைய காரியமான அப்போது செய்ய வேண்டிய ஸ்நானத்தைச் செய்து அநுஷ்டானம் தொடங்கினார்.

தமது துறவறச் செங்கோலாகிய தண்டத்தால் அவர் தர்ப்பணம் செய்து முடிக்கவும் ஏதோ ஒரு வாரியத்தில் மேற்பார்வைப் பொறியியலாளராக இருந்த ஒரு பெரிய அதிகாரி தரிசனத்துக்கு வரவும் சரியாக இருந்தது.

பெரியவாள் தமது கையிலிருந்த துறவறத் திருக்கோலை அவரிடம் காட்டி, "இதுக்குப் பேர் என்ன ?" என்று கேட்டார்.

அதிகாரி, "தண்டம்" என்றார்.

"இதுக்கு ஒரு வேலை போட்டுக் குடுப்பியா ?" பெரியவாள் கேட்டார்.

அதிகாரிக்கு ஒன்றும் புரியவில்லை. "பெரியவா என்ன சொல்றா, தெரியலியே!" என்றார்.

பெரியவாள் நமது இளைஞனை அவருக்குக் காட்டினார் ; "பாவம் இந்தக் கொழந்தே. படிச்சு முடிச்சு ரெண்டரை வருஷம் ஆயும் வேலை கெடைக்காம மனஸ், நொந்துண்டிருக்கான். வெந்த புண்ல வேலா ஆத்து மனுஷாளே, நீ இப்போ (துறவுக்கோலைக் காட்டி) இதுக்கு ஒரு பேர் சொன்னியே, அதைச் சொல்லிச் சொல்லி இவனைத் திட்றாளாம். அதுதான் ஒன்னைக் கேட்டேன். எனக்காக, உபாயமா ஏதோ ஒரு வேலை இவனுக்குப் போட்டுக் குடுப்பியா ?" கெஞ்சுகிறாற்போலவே கேட்டார்.

@Page 26

கருணைக் கரிசனத்தின் சிகர தரிசனம்.

பெரியவாள் அப்படிச் சிறியவராக நின்று கேட்டது அதிகாரியை ஆட்டிவிட்டது. "பெரியவா உத்தரவாப் போட வேண்டியதுதானே? பண்ணக் காத்துண்டிருக்கேன். இன்னிக்கு ஞாயத்துக் கெழமையாயிருக்கு. நாளைக்கு இந்தப் பையன் வந்தா பாத்து ஒடனே அப்பாயின்ட் மென்டுக்கானதைப் பண்றேன்" என்று பவ்வியமாகக் கூறினார்.

பெரியவாளின் அகமும் முகமும் மலர்ந்தன. "ஒரு தண்டத்துக்கு வேலை கெடச்சுடுத்து. இன்னொரு தண்டத்துக்கு இப்போதைக்கு வேலை முடிஞ்சுடுத்து" என்று சிலேடை செய்தவாறு தமது துறவுத் திருக்கோலை அருகே சுவரில் சார்த்தினார்.

"தண்டன்னு கரிச்சுக் கொட்றாளே, அதுதான் எங்களுக்கும் ரக்ஷை. ப்ரம்மசாரிகளுக்கும் ரக்ஷை. ராஜதண்டத்துக்கு அடங்கித்தான் லோகத்துல நீதி நியாயங்கள் இருந்தது. ஈச்வர ஸ்ருஷ்டில எதுவுமே தண்டமில்லே, எதுவுமே தண்டமில்லை" என்றார்.

குப்பையும் தண்டமும் கோபுரமேற வைத்தவர்.

ஆறாண்டு நடைப் பயணத்தின்போது வழியில் கண்டவர்களிடம் ஸ்ரீசரணர் காட்டிய கருணைக்குச் சில எடுத்துக்காட்டுகள் பார்த்தோம். தமது நூறாண்டு வாழ்க்கைப் பயணத்திலேயே பல காலம் ஒட்டிக் கொண்டிருந்தவர்களிடம் அக்கருணை எப்படிப் பெருகிற்று என்றும் 'மாதிரி' பார்த்தோம். ஊடே பக்தருலகு அனைத்திடமும் பாய்ந்த கருணைக்கும் பதச்சோறு கண்டோம். அந்தச் சோற்றுப் பானையின் அளவு என்ன வெனில் – உலகளவு! (பெரும்பாலான தகவல்களுக்கு நன்றி : – ஸ்ரீமடம் பாலு)

@Page 27

# 2

# நவரத்தினக் களஞ்சியத்தில் சில பொறுக்குமணிகள்*

"இந்த லோக வாழ்க்கையிலே இருக்கற எதுவுமே தள்ளுபடி இல்லை ; எல்லாமே தானான அந்த ஒரு ஞான ஸூர்யனுடைய ரச்மியினாலேதான் அது அதுவாகப் பிரகாசிக்கிறது என்ற அநுபவத்திலேயே ஸதா காலமும் லீலா விநோதம் பண்ணிக் கொண்டிருந்தவர் கிருஷ்ண பரமாத்மா. அதனாலேதான் ஒரு பக்கம் கீதோபதேசம் பண்ணிய பரம ஞானியாக இருந்து கொண்டே இன்னொரு பக்கம் ராஜதந்திரியாக, யுத்தத்திலே இல்லாத தந்திரமெல்லாம் பண்ணுகிறவராக, த்வாரகா ராஜனாக, அந்த ராஜாவே ராஜ்யம் பறிபோனவர்களுக்குத் தூதனாக, இன்னும் கீழே தேரோட்டியாக, குதிரைக் காஸாரியாகவும் கூட – இத்தனைக்கும் நடுவில் வேணுகானலோலனாக வேறே – இருந்தார். பரம கருணையிலே அநுக்ரஉறமா, அது பாட்டுக்கு அதுவும் ஸதாகாலமும் நடந்து கொண்டே இருந்தது – த்ரௌபதி மான ஸம்ரக்ஷணம், குசேலருக்கு ஐச்வர்யப் பிரதானம் என்கிற மாதிரி! லோக வாழ்க்கை என்கிறதில் ஸகலத்தையும் ரஸித்துக் கொண்டு, லோக

---

*1997 'கல்கி' தீபாவளி மலரில் வெளியான கட்டுரை

@Page 28

ஜனங்களின் ஸகல வியலஉறாரங்களும் தெரிந்து கொண்டு, புரிந்து கொண்டு, தாமே பண்ணியும் காட்டி, அதிலேயே தோய்ந்து போன மாதிரித் தோன்றும்படியாகக் கூத்தடித்துக் கொண்டிருந்தார்.

"இப்படி அத்வைத ஞானம் ஒரு பக்கம், த்வைதமான லௌகிகம் இன்னொரு பக்கம் என்றால் அந்த இரண்டும் ஏதோ முழுக்கவே ஒன்றுக்கொன்று பிரிந்து வேறாயிருந்ததென்று அர்த்தமில்லை. ஒரே ஆஸாமியின் இரண்டு கை மாதிரிதான் இந்த இரண்டும் அவரிடமே, அவருடையதாகவே சேர்ந்திருந்தன. உபமானமாகக் 'கை மாதிரி' என்று சொன்னதை யதார்த்த ஸத்யமாகவே அதிசயமாகக் காட்டவும் காட்டினார் – ஒரே ஸமயத்தில், ஒரே அர்ஜுனனுன்காக அவனுடைய தேர்க் குதிரையை அடக்குவதற்காக ஒரு கையில் சாட்டையைப் பிடித்துக்கொண்டு 'தோத்ரவேத்ரைக பாணி' என்றே பேர் வாங்கினார். இன்னொரு கையால் அவனுடைய மனஸ் என்கிற குதிரையை அடக்குவதற்காகச் சின்முத்ரை காட்டி கீதோபதேசம் பண்ணி 'ஞானமுத்ராய க்ருஷ்ணாய கீதாம்ருத–துஉறே நம:'

எனும்படியாக நமஸ்காரமும் வாங்கிக் கொண்டார்.* ஒரு காகிதம் என்று இருந்தால் அந்த ஒன்றுக்கு முன்பக்கம், பின்பக்கம் என்று இரண்டு பக்கம் இருந்தே தீரும்தானே ? அப்படித்தான் ஆத்மிகம், லௌகிகம் என்று நாம் பிரித்துச் சொல்கிற இரண்டும் அவருக்கு இருந்தன! பரமஞானி, யோகேச்வரன் இந்த லோக வியவஉறாரம் அத்தனையிலேயும் ஈடுபட்டு மன்னாதி மன்னனாக சோபித்து, ஒரே ஆனந்த விளையாட்டாக

---

* ப்ரபன்ன பாரிஜாதாய தோத்ரவேத்ரைக பாணயே |
ஞானமுத்ராய க்ருஷ்ணாய கீதாம்ருக துஉேற நம: ||

–கீதை தியான சுலோகம்

@Page 29

விளையாடி, அதனாலேயே அத்தனை தினுஸு ஜனங்களையும் ஆகர்ஷித்து ஆனந்தம் கொடுத்தார்."

இது கண்ணனைப் பற்றிய ஸ்ரீ காஞ்சி மஉறா பெரியவாளின் ஆழ்ந்த தேர்ந்த, நுட்பமான, துல்லியமான வர்ணனை, கண்ணனைப் பற்றிய வர்ணனை மட்டுந்தானா ? தம்மையே குறித்த வர்ணனையும்தான்! அந்தப் பரம ஞானி ஒரு துறை மீதமின்றி 'லோக வியவஉறாரம் அத்தனையிலேயும் ஈடுபட்டு மன்னாதி மன்னனாக சோபித்து' தாமும் ஆனந்தித்து, நம்மையும் ஆனந்திக்க வைத்த அருமை பெருமை "ஆயிரம் நூல் எழுதிடினும் முடிவுறாதாம்!" துனித் துளி ஸாம்பிள் தீபாவளி மிக்ஸ்சராகக் கொறிப்போம்.

இலக்கியச் சுவையில் தேர்ந்த மன்னரான அவர் தீபாவளித் தொடர்பாகவே நாடகமாக நடத்துவித்த ஒன்றுடன் தொடங்கலாம்.

பேசுவது பெரியவாள்தானா என்று எண்ணும்படி, தூக்கிவாரிப் போடும்படி, சொன்னார் : "எனக்கென்னவோ பகீரதனைவிட நரகாஸுரனைத்தான் பிடிச்சிருக்கு. ரொம்பப் பிடிச்சிருக்கு."

தொடர்ந்து மௌனம். கூடியிருந்ததோரைப் படுத்தியெடுக்கும் மௌனம்!

சிறிது போதுக்குப்பின் சிறுநகை முகத்தில் அரும்ப, "ஏன்னு சொல்லுங்கோ!" என்கிறார்.

யார் சொல்ல முடியும்? அந்த அதிர்வெடி விடுகதையை அவரே விடுவித்தால்தான் உண்டு!

ஒருத்தரும் வாய் திறக்கவில்லை. அவரும் திறக்க வில்லை. படுத்தல் தாங்க முடியாமல் ஓர் அடியார், "பெரியவாளேதான் சொல்லணும்" என்று கூறி அக்

@Page 30

கூற்றுக்குக் கிரியா சக்தி ஊட்டுவதாக விழுந்து நமஸ்கரிக்கிறார்.

அவரது 'சாமர்த்தியம்' பலிக்கிறது. விழுந்து வேண்டினால் அதன்பின்னும் கருணையுள்ளம் இலக்கியச் சுவையின் பேரில் மௌனத்தை நீட்டித்து 'டீஸ்' பண்ணுமா!

பேசலாகிறார். ஆனாலும் பேசாமலிருப்பதால் செய்யும் பெரிய டீஸிங்கைத்தான் ரத்து செய்தாரே தவிர, உடனேயே விடுகதையை அவிழ்த்துவிட அந்த இலக்கிய மன மன்னருக்கு மனசு வரவில்லைதான்! எனவே நேரே விஷயத்திற்கு வராமலேயே பேசுகிறார்.

"பகீரதனையும் பிடிக்காம இல்லை. 'தபஸ்'னாலே அவனோடதுதான்னு லோகம் முழுக்க வசனமாச் சொல்றபடி பண்ணினவனாச்சே! எத்தனை பித்சு பக்தி? சிரத்தை? லோகத்துக்குத்தான் அவனால் எத்தனை பெரிய உபகாரம்? – தேவலோகத்து கங்கையை இந்த பூலோகத்துல பாய வெச்சு இயற்கை வளத்துக்கு இயற்கை வளம். அதைப் போல ஆயிரம் மடங்கு புண்ணியத்துக்குப் புண்ணியம் சேத்துக் குடுத்தவனாச்சே! அதனால எல்லாரும் பண்றாப்பல ஸ்தோத்ரம் பண்ண வேண்டியதுதான். நன்றியும் சொல்லணும்தான்.

"ஆனாலுங்கூட அவனையே ஒரே ஸ்தோத்ரம், அவனுக்கே நன்றின்னு வெச்சுட்டு, நரகாஸுரனை அவனோட துஷ்கிருத்யங்களுக்காக ஒரேயடியா தூஷணை பண்றது, சாகறச்சே அவன் நமக்கெல்லாம் தீபாவளியை வரமாக் கேட்டு வாங்கிக் கொடுத்த நல்ல புத்திக்காக ஏதோ கொஞ்சம் பாராட்டறதுன்னா ஒரு நியாயமேயில்லை. என்னைக் கேட்டா, அவன் பண்ணியிருக்கற உபகாரத்துக்காக அவனோட துஷ்கிருத்யத்தையெல்லாம் மறந்துட்டு,

@Page 31

தூஷிக்கறதை நிறுத்திட்டு பூஷிக்கத்தான் வேணும். பகீரதனை பூஷிக்கறதைவிட அவனைத்தான், 'எப்படியிருந்த அஸுரன் எப்படி மாறினான்?'னு ரொம்பக் கொண்டாடணும். நன்றின்னு எடுத்துண்டாலோ அவனுக்குத்தான் பகீரதனுக்குச் சொல்றதைவிட கோடி மடங்கு சொல்லணும். துஷ்க்ருத்யம் அவனோட ஆயுஸ் காலத்தோட முடிஞ்சுடுத்து! நன்றிக்கான ஸுக்ருத்யம் காலம் உள்ளளவும் இருக்கிறதாச்சே!

"தபஸ், பித்ரு பக்தி, சிரத்தைகளுக்காக பகீரதனை நன்னாவே கொண்டாடுவோம். ஆனாலும் comparative–ஆ அதைவிட, அதமாதமனமான அந்த அஸுர ஜன்மாக்காரன் லோகம் பூரா ஸந்தோஷமா பண்டிகை கொண்டாடணும்னு வரம் வாங்கித் தர அளவுக்கு அடியோட 'சேஞ்ஜ்' ஆனதுக்காக அவனைத்தான் ஜாஸ்தி கொண்டாணும். 'நன்றி'ன்னு வரச்சேயோ, ரெண்டு பேருக்கும் 'கம்பாரிஸனே' இல்லை! கங்கையைப் பாய வெச்சானேன்னு பகீரதனுக்கும் நிச்சயமா நன்றி சொல்லத்தான் வேணும்னாலும் அது ஒண்ணுமேயில்லை என்கிற அளவுக்கு நரகாஸுரனுக்குத்தான் கோடி மடங்கு நெஞ்சாரச் சொல்லணும். அதுக்கு நாம கடமையே பட்டிருக்கோம்.

"உத்தேசிச்சோ உத்தேசிக்காமலோ யார் நமக்கு உபகாரமா ஒண்ணு பண்ணியிருந்தாலும் அவாளுக்கு நன்றி சொல்றதுதான் தர்மம், பண்பாடு. ஆனாலும் புத்தி பூர்வமாவே பாத்துண்டு போறவா, உத்தேசிக்காம உபகாரம் பண்ணினவாளுக்கு நன்றி பாராட்டித்தான் ஆகணுமான்னு கேள்வி எழுப்பவும் கூடும். அந்த ரீதியில் பாத்தோம்னா நாம நன்றிக்கடனே பட்டிருக்கிறது நரகாஸுரனுக்குத்தான். கடமை–னு சொன்னதையேதான் கடன்–னு அழுத்தங் குடுத்துச் சொல்றேன். ரெண்டு வார்த்தையும் ஒண்ணுக்கொண்ணு ஸம்பந்தப்பட்டது

@Page 32

தான். இங்கிலீஷ்லயும் கடமையை duty–ங்கிறா; கடன் பட்டிருக்கறதை due–ங்கிறாளோல்லியோ?

"கடன்பட்டா திருப்பிக் குடுத்தே ஆகணும். இல்லாவிட்டா சட்டப்படியே குத்தம். தான தர்மம் பண்றது அப்படியில்லே. அது நம்ம இஷ்டத்தைப் பொறுத்ததுதான். பண்ணினா புண்யம். ஆனாலும் பண்ணாட்டா பாபம், குத்தம்னு ஆயிடாது. பாபம்னு வேணா சாஸ்திரப்படி வெச்சுக்கலாம். ஆனா குத்தம்னு

சட்டப்படி ஆக்ஷன் எடுக்கறதுக்கு இல்லே. யாரும் கேஸ் போட முடியாது அதனாலதான், மறுக்க முடியாத உரிமையோட ஒத்தர் கிட்ட ஒண்ணை டிமான்ட் பண்றப்ப, பட்ட கடனைத் திருப்பிக் கேக்கறப்ப, 'உம்மை ஒண்ணும் புண்ணியத்துக்குப் பண்ணச் சொல்லலை'–ன்னே சொல்றதா ஏற்பட்டிருக்கு!

"கிட்டத்தட்ட அந்த மாதிரிதான் நாம 'நன்றி'ங்கற அம்சத்துல அந்த ரெண்டு பேர்கிட்டயும் எப்படி ஸம்பந்தப்பட்டிருக்கோம்–கிறது. பகீரதனுக்கு நன்றி சொன்னா புண்யம். சொல்லாட்டா குத்தமில்லே. நரகாஸுரனுக்கோ சொல்லியே ஆகணும். அது கடமை, கடன். சொல்லாட்டா குத்தம். முன்னது நம்ம இஷ்டத்தைப் பொறுத்ததுதான் ; Optional தான், பின்னதோ, இஷ்டம் இருந்தாலும் இல்லாட்டாலும் கட்டாயமாப் பண்ண வேண்டியது ; Obligatory! எப்படின்னு சொல்றேன்" – பேசியும் விஷயத்திற்கு வராத படுத்தலையும் முடிக்க மனம் கொண்டு உற்சாகத்துடன் நிமிர்ந்து அமர்ந்து தொடர்கிறார்.

"பகீரதனாலதானே நமக்குப் புண்ய நதிகளில் அக்ர (முதல்) ஸ்தானம் வகிக்கிற கங்கை கெடச்சிருக்கு! அதனால அவனுக்கு நாம 'ஆப்ளிகேடரி'யாவே நன்றிக்கடன் பட்டில்லியா!–ன்னு தோணலாம். அவனால அந்தப்

@Page 33

பெரிய உபகாரம் கெடச்சிருக்கறது வாஸ்தவந்தான். ஆ....னா, லோகத்து ஜனங்களுக்கு கங்கை கெடைக்கணும்கிற லக்ஷ்யத்திலே அவன் பாடுபட்டு, அதாவது மனஸறிஞ்சு அப்படி உத்தேசிச்சா அதை வருவிச்சுத் தந்தான்? பாதாள லோகத்துல பஸ்மமாக் கிடந்த தன்னோட பித்ருக்களுக்கு கங்கா ஜலத்தாலதான் ஸ்வர்க்கப் பிராப்தி ஏற்படுங்கிறதுனால, அதை ஸாதிச்சுடணும்னுதான் அவன் உத்தேசம் பண்ணி, படாதபாடும் பட்டது. அதுக்காகவே அவன் கோகர்ணம்கிற ஹிமாசல க்ஷேத்ரத்துக்குப் போய் – இப்படி நாம தக்ஷிணதேசத்துல சொல்ற கோகர்ணம் இல்லை. இது 'ஹிமாலயாஸ்'ல இருக்கற கோகர்ணம் ; இப்ப அடையாளம் தெரியலை. அங்கே போய் ப்ரம்மாவைக் குறிச்சுப் பஞ்சாக்னி மத்தியிலே நின்னுக்கிண்டு கடுமையா தபஸ் பண்ணினான். ப்ரம்மா ப்ரத்யக்ஷமாயி, 'ஆகாச கங்கை தடதடன்னு பூலோகத்துல விழறப்ப பூமியே பொளந்து போயிடும். அந்த தாரையைத் தாங்கிண்டு, அதோட வேகத்தை மட்டுப்படுத்தி, ப்ரவாஹத்தையும் அளவுபடுத்தி விடறதுக்குப் பரமேச்வரனாலதான் முடியும். அதனால அவரைக் குறிச்சுத் தபஸ் பண்ணு'ன்னார்.

"அவனும் அப்படியே பண்ணினான். ஈச்வரனும் உருட்டிப் பொரட்டிக்கிண்டு

வந்த கங்கையைப் பரம கருணையோட தன் ஜடாபாரத்துல தாங்கிண்டு, 'கங்காதரன்'னு பேர் பெத்துண்டு தாரையைக் கணிசமாக் கன்ட்ரோல் பண்ணிப் பாயவிட்டார். அப்படி அவர் உறிமாலயாஸ்ல பண்ணின அந்த எடத்துலேந்து கங்கையைப் பாதாளத்துக்கு பூமியைப் பொளந்து சேதம் பண்ணி பெரிசா ஜியாலாஜிகல் அப்ஸெட் – 'ஈகலாஜிகல் அப்–ஸெட்' எதுவும் உண்டாக்காமக் கொண்டு சேக்கணும்னா, இப்ப நாம பாக்கற மாதிரி உத்தர்பிரதேஷ், பிஉறார்.. பீஉறார் இல்லை பிஉறார்தான். புத்த ஸம்பந்தம்

@Page 34

ரொம்ப உள்ள அந்த ப்ராந்தியத்தில் பௌத்த விஉறாரங்கள் ரொம்ப நெறய்ய இருந்துது. அதனால 'விஉறார்'னே அந்த எடத்துக்குப் பேர் ஏற்பட்டு, வடக்கத்தி பாஷா லக்ஷணப்படி விஉறார் 'பிஉறார்' ஆயிடுத்து! அப்படி யு.பி., பிஉறார், வெஸ்ட் பெங்கால் வழியா கங்கா நதியா ஓடி Bay of Bengal–ல விழுந்து, ஜலத்துக்குள்ளால பாதாளம் போறதுதான் கிட்ட வழின்னு ஏற்பட்டுது. அதாவது கங்கையைப் பாதாளத்துக்குக் கொண்டு போறதுதான் பகீரதனோட நோக்கமாயிருந்தாலும், அதுக்கு வழியா தற்செயலாவே – தற்செயலாத்தான் ; உத்தேசிச்சு இல்லே – அவன் அந்த மஉறாபுண்ய நதி இந்த பாரத புண்ய பூமில கிட்டத்தட்ட 1600 மைல் பாயும்படிப் பண்ணினது. அது மஉறாபெரிய உபகாரம்தான்னாலும் Incidential–தானேயொழிய Intentional–இல்லேங்கறதே நான் காட்ட வர பாயின்ட்."

புதியதோர் எழுச்சி, மகிழ்ச்சிகளுடன் ரஸக் கருவூலமான ஸ்ரீசரணர் தொடர்கிறார். "இப்ப நாகாஸுரன் ஸமாச்சாரம் பார்ப்போம். அவன் கிருஷ்ண பரமாத்மாவோட ஸுதர்சன (சக்கர)த்தாலே கழுத்தறுபட்டு, அடுத்த க்ஷணமே ப்ராணன் போயிடலாம்கிற ஸ்டேஜ்ல கெடக்கான். அப்படிப்பட்ட மரண பாதையில, மஉறான்களுக்குக் கூட ஏற்படற மரண பீதியில் இருக்கறச்சேயாக்கும், அவன் தன்னோட க்ஷேமத்தையே நெனச்சு ஸ்வாமிகிட்ட வரம் கேட்டான். வாழ்நாள் முழுக்க லோகத்தை நரகமா அடிச்சதுக்கு ப்ராயச்சித்தமா தன்னோட சாவு நாளில் லோகம் பூராவிலேயும், என்னென்னிக்கும் பரம பாவனி கங்கா பவானியோட ஸாந்நித்யம் எல்லாத் தீர்த்தத்துலயும் பூர்ணமா ஏற்பட்டு ஜனங்களோட பாபத்தை அலம்பி

@Page 35

விடணும் ; லோகத்தை அழ அழ அடிச்ச தான் தொலைஞ்சதுக்காக என்னென்னிக்கும் ஜனங்கள் 'தொலைச்சுத் தலைமுழுகறது'ன்னு சொல்றாப்பல, அன்னிக்கு பண்ற ஸ்நானம் எந்த ஜலத்திலேயானாலும் அதுல கங்கையே

ஆவிர்பவிச்சு அதை கங்கா ஸ்நானமாக்கணும் ; நரகாவஸ்த்தை குடுத்த பாபியான தான் ஒழிஞ்ச நாள் ஆனந்தமான பண்டிகையா எல்லாரும் புது வஸ்த்ரம் போட்டுண்டு, விருந்தும் பக்ஷணமும் சாப்டுண்டு, பட்டாசும் மத்தாப்பும் கொளுத்திண்டு கொண்டாடற நாளாயிருக்கணும்னு இப்படியெல்லாம் அவனுக்குத் தோணி (தோன்றி) அந்த மாதிரி நடக்கறதுக்கு ஸ்வாமி அநுக்ரஉறம் பண்ணணும்னு வரம் கேட்டான். தனக்கு மோக்ஷம் வேணும்னு கேக்கலை, இல்லாட்டா ஒசத்தியா மறு ஜன்மா கிடைக்கணும்னும் கேக்கலை. லோக ஜனங்கள் எல்லாரும், தன்னோட காலத்துல இருக்கறவா மட்டுமில்லே – லோகம் உள்ள அளவும் இருக்கற அத்தனை பேரும், அவாளுக்கு எத்தனை பாபம், கர்மா இருந்தாலும் வருஷத்துல அந்த ஒரு நாள் ஆனந்தமா இருக்கணும் ; புது வஸ்த்ரம், விருந்து, பக்ஷணம்னு வெறும் இந்த்ரிய ஆனந்தத்தோட நிக்காம கங்கா ஸ்நான புண்யம்கிற ஆத்ம ஸம்பந்தமான ஆனந்தத்தையும் அநுபவிக்கணும்னு அந்த க்ரூர அஸுரனுக்கு அந்த 'க்ரிடிகல்' நேரத்துல தோணினது தான் பெரிய ஆச்சர்யம்!

"பகவான் கையால உயிரை விட்டதுதான் அவனை அப்படிக் கேக்கப் பண்ணித்துன்னா, இன்னும் எத்தனையோ அஸுர ராக்ஷஸாதிகளையும்தான் அவர் ஸம்உறாரம் பண்ணியிருக்கிறார். அவர் யாரும் அப்படிக் கேக்கலியே! அதனால நரகாஸுரனுக்கு due credit குடுத்துத்தான் ஆகணும்.

@ Page 36

"நரகாஸுரனோட தாயாரான பூமா தேவிதான் இப்படியெல்லாம் வரம் கேட்டா–ன்னும் இன்னொரு Version. நானே அதைக் குறிப்பாச் சொல்லியும் இருக்கேன். யோஜிச்சுப் பார்த்ததுல, இவனும் கேட்டான், அவளும் அதை endorse பண்ணிக் கேட்டா–ன்னு தோணறது.

"நான் காட்ட வந்த 'பாயின்ட்', Gangetic Valley–ல் மட்டும் கங்கை பாய்ஞ்சு பாவனம் பண்றது தற்செயலா பகீரதனால நடந்ததுதானே தவிர, அவன் உத்தேசிச்சு இல்லை. மத்த பிரதேசங்களில் இருக்கிற ஜனங்கள்ளாம் அந்த கங்கையைத் தேடிண்டு போய்தான் ஸ்நானம் பண்ணணும். ஆனா நரகாஸுரனோ அவனே உத்தேசம் பண்ணி Intentional–ஆ–incidential–ஆ இல்லே – இந்த ப்ரதேசம் அந்த ப்ரதேசம்னு இல்லாம லோகம் பூராவிலேயும் இருக்கற அத்தனை ஜலமும் தன்னோட மரண தினத்தன்னிக்கு கங்கை ஆயி, எல்லா ஜனங்களும் கங்கா ஸ்நான புண்யத்தை அவாவா இருக்கற எடத்துலேயே அடையணும்னு லோகோபகாரமா

வரம் வாங்கியிருக்கான்.

"சட்டத்துல என்ன சொல்றா ? 'Mens rea'ங்கற பேர்ல ஒரு சட்ட விதி இருக்கு. அதன்படி கொலையோ, கொள்ளையோ ஏமாத்தோ, வேறே க்ரிமினல் காரியமோ, எதுவானாலும் மனஸறிஞ்சு, உத்தேசிச்சுப் பண்ணினாத்தான் குத்தம் ; தெயிாத்தனத்தாலேயோ, ஸந்தர்ப்ப வசத்தாலேயோ பண்ணினா அந்த அளவுக்குத் தப்புச் சொல்றதுக்கு இல்லேங்கிறா! ஒத்தரால கெடுதல் நடக்கிறதுக்குச் சொல்ற இதையே நல்லது நடக்கிறதுக்கும் பொருத்திப் பார்த்தோம்னா ?"

தம்முடைய 'பாயின்ட்' எவ்வளவு சரியானது என்று மறுப்பதற்கில்லாமல் காட்டும் வெற்றிப் பெருமிதம்

@ Page 37

திருமுகத்தில் ஒளிவீசச் சொல்கிறார். "வேறே ஏதோ உத்தேசத்திலே தன்னால வந்து சேந்த ஒரு ப்ரயோஜனமா பூமியோட ஒரு பகுதியிலே மட்டும் கங்கையைப் பாய வெச்ச பகீரதனை விட நமக்குன்னே உத்தேசிச்சுத் தன்னோட ப்ராணாபத்துல வீட்டுக்கு வீடு கங்கை நம்மைத் தேடிண்டு வரும்படிச் செஞ்ச நரகாஸுரனுக்குத்தானே நாம ரொம்ப நன்றிக்கடன் பட்டிருக்கோம் ? அவனைத் தானே நாம ஜாஸ்தி பூஷிச்சு தோத்திரம் பண்ணணும் ?"

எப்படிப் பெரியவாளின் இலக்கியச் சுவை ததும்பும் வாதத்திறமை ? 'Mens rea' கூறும் சட்ட ஞானம் ?

சட்ட ஞானத்தில் அந்த ஸர்வக்ஞர் சொன்னதும், செய்ததும் எத்தனை எத்தனையோ! அரசியல் சாஸனப் பூர்வமாக 'அடிப்படை உரிமை'களில் மதச் சுதந்தரம் சேர்க்கப்பட்டதற்கு அந்த மஉறான்தான் காரணம் என்பதை வெகு சிலரே அறிவர். அப்படி ஓசைப்படாமல் அரியன சாதிக்கும் அடக்கப் பெட்டகம் அவர்!

அவரது சட்ட ஞானத்தை வியந்த திருப்புகழ் மணி ஸ்ரீ டி.எம்.கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களிடமே சொன்னா ராம், "பெரியவா Bar–க்கு வராம இருந்தேளோ, நாங்களும் பெரிய 'லாயர்'கள்னு பேரெடுக்க முடிஞ்சுதோ!" என்று!

அந்த ஞானத்திற்கு இன்னும் ஓர் எடுத்துக்காட்டு. ஏதோ ஓர் அறக்கட்டளையைக் கலைத்துவிட அதன் அறங்காவலர்கள் முடிவு செய்திருப்பதாகவும், அவர்கள் யாவரும் பெரியவாளின் பக்தர்களாகையால் அதன்

சொத்துக்களை அவர் உயிரினும் பெரிதாக மதித்த வேதரக்ஷண நிதி ட்ரஸ்டுக்கு மாற்றி விட விரும்புவதாகவும் அவர்களில் ஒருவர் செய்தி கொண்டு வந்தார். அதற்கு ஸ்ரீசரணருடைய அநுமதியும் அநுக்ரஉறமும் வேண்டினார்.

@Page 38

ஸ்ரீசரணர் பளிச்செனப் பதிலிறுத்தார். "நீங்க ட்ரஸ்டீஸெல்லாரும் எங்கிட்ட பக்தியா இருக்கேள்னா போறுமா என்ன? ஒங்க பக்தியை, அபிமானத்தை மனஸார அங்கீகரிச்சுக்கறேன். ஆனாலும் ஒங்க ட்ரஸ்டோட ஆஸ்தி பாஸ்தியை வேதரக்ஷண நிதிக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்றதுன்னா, அதுக்குச் சட்டம் எடம் குடுத்தாதானே முடியும்? அந்த மாதிரிக் குடுக்கலியே! 'ப்ரன்ஸிபிள் அவ் ஸீ ப்ரே'ன்னு 'லா'வுல இருக்கு. அதன்படி, ஒரு ட்ரஸ்டைக் கலைக்கும்படி ஏற்பட்டா அதனோட சொத்துக்களை எந்த லக்ஷ்யத்துல அந்த ட்ரஸ்ட் ஆரம்பிச்சு நடந்துதோ, அதுக்கு ரொம்பக் கிட்டினதான ஒரு லக்ஷ்யத்தோட நடக்கற இன்னொரு ட்ரஸ்டுக்குத்தான் மாத்த முடியும். ரொம்ப வித்யாஸமான லக்ஷ்யம் இருக்கிற ட்ரஸ்டுக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்ண முடியாது. இப்ப ஒங்க ட்ரஸ்டோட லக்ஷ்யமும் வேதரக்ஷணமும் வித்யாஸமானதுன்னுதான் எல்லாரும் அபிப்ராயப்படுவா. ஒங்க ட்ரஸ்ட் ஸோஷல் ஸர்வீஸ் லக்ஷ்யத்துல ஏற்பட்டது. வேத ரக்ஷணத்தைவிடப் பெரிய ஸோஷல் ஸர்வீஸ் இல்லேன்னு எங்க மாதிரி செல (சில) பேர் வேணா சொல்லலாமே தவிர அதைப் பொதுவா லோகம், கவர்மென்ட், கோர்ட் ஒத்துக்காது. ஆனதுனால, ஒங்க ஆசையைப் பூர்த்தி பண்ண முடியலியேன்னு எனக்கும் கஷ்டமாத்தான் இருக்குன்னாலும் அப்படித்தான் சட்டம் கட்டுப்படுத்தறது. நீங்க இத்தனை அபிமானமா நெனச்சதே வேதரக்ஷண ட்ரஸ்டுக்குப் பணத்தைக் கொண்டு வந்து கொட்டும்! ஒங்க பணமும் ஒரு நல்ல ஸோஷர் சர்வீஸ் ஆர்கனைஸேஷனுக்குப் போய்ச் சேந்து நல்லபடியா பிரயோஜனமாகணும்னு ப்ரார்த்திச்சுக்கறேன்"–அவருக்கே உரித்தான ஆழ்ந்த அநுதாபத்துடன் கூறி, அகம் குவித்து கைகுவித்துச் சிறிது நேரம் பிரார்த்திக்கிறார்.

@Page 39

அடுத்து அவரது மொழியியல் ஞானம், பன்மொழிப் புலமை ஆகியவற்றுக்கும் சான்று படைக்கிறார்.

"'ஸீப்ரே'–ன்னு சட்டப் பாயின்ட் சொன்னேனே, அதுக்கு ஸ்பெல்லிங்கடி உச்சரிப்புப் பாத்தா 'ஸைப்ரஸ்'னு வரும். ஆனா அது ஃப்ரெஞ்ச் வார்த்தையானதால, அந்த பாஷையோட லக்ஷணப்படி ஸ்பெல்லிங் ஒரு தினுஸாவும் உச்சரிப்பு வேறே தினுஸாவும் இருக்கும். இந்த வார்த்தை ஸ்பெல்லிங்படி 'ஸைப்ரஸ்'ன்னு ஆகும்.

ஆனாலும் ஸைப்ரஸ் தீவுக்குப் போடற ஸ்பெல்லிங் இல்லை. அந்தத் தீவுக்கு c,y,p,r,u,s–னு ஸ்பெல்லிங் போடறோம். 'ஸீப்ரே'க்கு c,y, அப்புறம் ரெண்டு வார்த்தையை ஒண்ணா சேக்கறப்ப ஸந்தியிலே போடற ஹைஃபன், ஹைஃபனுக்கு அப்பறம் p,r,e...e, தான் u இல்லை ; u போட்டா ஸைப்ரஸ் தீவுன்னு ஆயிடும்...e க்கு அப்புறம் கடைசி எழுத்தா s-(cy-pres). அந்த 's' உச்சரிப்புல வராது. 'ஸைலன்ட்' ஆயிடும். ஃப்ரெஞ்ச் பாஷைல 'ஸீ–ப்ரே'ன்னா 'ரொம்பக் கிட்டே'னு அர்த்தம். ஒரு ட்ரஸ்ட் சொத்தை அதனோட லக்ஷ்யத்துக்கு ரொம்பவும் கிட்டினதான லக்ஷ்யமுள்ள இன்னொரு ட்ரஸ்டுக்குத்தான் மாத்தணும்னு தெரிவிக்கறதால அந்த விதிக்கு அப்படிப் பேர்."

அந்த மெய்யறிவாளர் பன்மொழி அறிஞரும்தான். Philology எனும் மொழியியலிலும் அபாரப் புலனை பெற்றவர். அவை குறித்த உதாரணங்கள், ஜீரணிக்க அறிவுக்குக் கொஞ்சம் வேலை கொடுக்குமாதலால், ஆனந்தமொன்றே கொண்டாடுவதற்காக நரகாஸுரன் வரமாகப் பெற்றுக் கொடுத்த தீபாவளியில் விநியோகிக்கும் இந்த மிக்ஸ்சரில் அதைச் சேர்க்காமல் விடுகிறோம்.

ஆயினும் அழகு ஒழுகும் பழகுமொழியிலேயே உரையாற்றும் அவர் செய்திகள், ஸ்ரீமுகங்கள் விடுக்கும்

@Page 40

போது, சந்தர்ப்பத்தைப் பொறுத்து, 'பெரியவாளா இத்தனை செந்தமிழ்ப் புலவர் மொழியில் கூறுவது!' என்று வியக்குமாறு சுடசுடவென்று டிக்டேட் செய்வதற்கு ஓர் உதாணமேனும் காட்டாதிருக்க இயலவில்லை.

தருமை ஆதீனத்தினர் பல தொகுதிகளாக வெளியிட்ட, உரையுடன் கூடிய திருமுறை நூல்களுக்கு அவர் அளித்த ஸ்ரீமுகத்தின் தொடக்கப் பகுதியைப் பாருங்கள் : "திருமுறைகளில் ஓரடியாவது தன் நாவினால் நவிலாத தமிழன் தமிழுலகில் இரான். அவற்றின் பொருளை அறிய வேண்டும் என்னும் அவா ஒவ்வொருவன் உள்ளத்திலும் எழுவது இயற்கை. பக்குவமடைந்த பெரியோர்களோ, திருமுறைகள் எல்லாவற்றிற்கும் பொருள் ஏகமாய்ப் பொது நடம் புரிகின்ற பெம்மானே எனத் தெளிந்து, எல்லா அவாக்களுமடங்கிய ஆனந்த நிலையில் நிற்பர். சொற்களுடையவும் வரிகளுடையவும் சிறப்புப் பொருள்களை அறிதற்கான அபக்குவிகளின் ஆவலைத் தணிவிக்க இதுகாறும் ஒருங்கே நூல் முகமாய் உதவி கிட்டிலது."

வார்த்தைகளில் புகுந்து விளையாடும் அவரது வித்தகத்துக்கும் சான்று தருகிறோம்.

அடியார் : வருமானம் பத்தாம ரொம்பக் கஷ்டமாயிருக்குங்க. பாராயணத்துக்குப் பெரியவங்க எதாவது ஸோஸ்தரம் (ஸ்தோத்திரம்) சொல்லணுங்க.

ஸ்ரீசரணர் : நீதான் முருக பக்தனாச்சே, தினமும் '(கந்தர்)அனுபூதி' சொல்றவனாச்சே! அதுக்கு மேலே புதுசா என்ன பாராயணம் பண்ணணும்கிறே?

அடியார் : (சற்று நேரம் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்துவிட்டு) அது ஞான நூலான்னாங்க இருக்கு? நமக்கோ அன்னாட அல்லாட்டத்துல வருமானம்னா தேவையாயிருக்கு!

@Page 41

ஸ்ரீசரணர் : (கணமும் யோசியாமல், குமிண் சிரிப்புடன் ஸரி, அதுல கடைசி வரி என்ன?

அடியார் : 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!'

ஸ்ரீசரணர் : 'வருவாய்'னாலும் வருமானம்தானே? 'வருவாய் அருள்வாய்'னே வரதே! அதுவும் முடிஞ்ச முடிவா ஸ்தோத்திரத்தின் ஈற்றடியிலே வரதே! அதையே சொல்லிண்டிரு. போறும்.

பன்மொழி இலக்கியங்களிலும் அவர் 'படு'. அவரது சூக்ஷ்ம ராஸிக்யம் அலாதி.

ஷேக்ஸ்பியர், மில்டன், வாட்ஸ்வர்த், டென்னிஸன் போன்ற எல்லா பெரிய ஆங்கிலக் கவிகளும் பல இடங்களில் நாம் அதிசயிக்கும்படி தோந்தக் கருத்துக்களையும் அநுபவங்களையும் கூறியிருப்பது குறித்து அவரது சந்நிதியில் உரையாடல் நடந்தது. சிருங்காரக் கவியாகவே எண்ணப்படும் கீட்ஸும் கூட அத்வைதம் கூறியிருப்பதற்கு உதாரணம் காட்டினேன்.

அப்போது ஸ்ரீசரணர், "கீட்ஸையும் ஷெல்லியையும் sensual poets–னு மட்டம் தட்டப்படாது ; sensuous–னே நகாஸ் பண்ணி ஒசத்தி வெக்கணும்னு சொல்றதுண்டு இல்லியா...? கீட்ஸுல உதாரணம் காட்டினே, ஷெல்லியிலே அத்வைதம் எங்கேயாவது வரதா?" என்றார்.

யோசித்தேன். சரிவர நினைவு வரவில்லை.

'கீட்ஸுக்காக அவன் பாடின "எலிஜி" (இரங்கற்பா)யிலேயே!' என்று அவர் தூண்டிக் கொடுத்தார்.

அப்படியும் ஏனோ ஞாபகத்தில் தோன்றவில்லை.

உச்சரிப்புச் சுத்தத்துடன் ஸ்ரீசரணரே திறந்த மடையாக, சுவைத்துச் சுவைத்துச் சொல்லிப் போனார் :

@Page 42

"The One remains, the many change
Heaven's light forever shines, earth's shadows fly
Life like a dome of many-coloured glass
Stains the white radiance of Eternity"

"இதைவிட ஏகமா இருக்கற ப்ரஉற்மத்தையும், த்வைத ப்ரபஞ்சமா வேஷம் போடற மாயையையும் வர்ணிக்க என்ன இருக்கு ?" என்று உளமாரச் சிலாகித்துச் சொன்னார்.

சிறிது மௌன சிந்தனைக்குப்பின் அந்தக் கவியையும் விஞ்சும் கவியுள்ளத்துடன் த்வைத ரஸங்களிலும் இன்புற்று "Many coloured glass அந்த White radiance–ஐ stain–ம் பண்றது ஆனா அத்தனை கலரா shine பண்றதும் அதே white radiance-தானே!" என்றார்!

ஒரே வெண்மையிலிருந்தே பல வண்ணங்களின் சிதறல் என்று கவிதையில் வருகிறதல்லவா ? இந்த விஞ்ஞான உண்மையில் ஆழ்ந்து ஆராய்ந்து மெய்ஞ்ஞானத்தோடு பொருந்திப் பல பல சொலிலியிருப்பவர், சந்திர சேகர் வேங்கடராமன் என்ற ஸி.வி.ராமன் போலவே ரஸிக உள்ளமும் விஞ்ஞான அறிவும் ஒன்று கலந்த நமது சந்திரசேகர இந்திர ஸரஸ்வதி.

வெள்ளையிலிருந்து வெளிப்படும் ஏழு வண்ணங்களை ஊதா (வயலெட்), கருநீலம் (இண்டிகோ), நீலம் (ப்ளூ), பச்சை (க்ரீன்), மஞ்சள் (யெல்லோ), இளஞ்சிவப்பு (ஆரஞ்ஜ்), சிவப்பு (ரெட்) என வரிசைப்படுத்தி ஆங்கிலத்திலுள்ள அவ்வார்த்தைகளின் முதலெழுத்துக்களை ஒன்றுசேர்த்து VIBGYOR என்ற ஸப்தவர்ணங்களும் மிளிரும் வானவில்லைச் சொல்வதுண்டல்லவா ? இவ்வாறு

வயலெட்டில் தொடங்கி ரெட்டில் முடிப்பது அவ்வளவு சரியல்ல ;

@Page 43

ஏனெனில் இந்த வரிசையை அப்படியே திருப்பி 'இன்ஃப்ரா ரெட்' எனப்படும் சிவப்பில்தான் வெள்ளை மற்ற வண்ணங்களாகப் பிரிய ஆரம்பித்து, வரிசையாக இளஞ்சிவப்பு, மஞ்சள் எனப் போய் 'அல்ட்ரா வயலெட்' எனும் ஊதாவில் முடிகிறது. அதற்கப்புறம் கறுப்பு ; அந்த முடிவான கறுப்பு, முதலான வெள்ளை இரண்டுமே ஸப்த வர்ணம் என்பதில் சேராதவை என்று ஸ்ரீசரணர் கூறுவார்.

அவர் தப்பு கண்டுபிடிப்பதோடு நிற்பவரல்ல. சரியானதையும் துல்லியமாகக் கண்டுபிடித்து மெச்சுபவர். எனவே தொடர்ந்தார் : "Vibgyorங்கிறதுல ஆர்டர் தலைகீழா இருந்தாலும் அதே வெள்ளைக்காரா ஸ்கூல் பசங்களுக்கு கிரமப்படி ரெட்ல ஆரம்பிச்சு வயலெட்ல முடியறபடி எப்படி வரிசைப்படுத்திச் சொல்லணுமோ அது நெனவில் இருக்கறதுக்காக அந்த ஏழு எழுத்தில ஆரம்பிக்கிற வார்த்தைகளை ஒரு வாக்கியமா கோத்துச் சொல்லிக்குடுப்பா. அதுலேயே நாஸூக்கா ஒரு புத்திமதியும் குடுத்துடுவா. என்ன வாக்கியம்னா *Read over your good books in vacation* இதுல வர ஏழு வார்த்தையோட ஆரம்ப எழுத்துக்கள் Vibgyor–க்கு நேர்மாறா, அதாவது ஸயன்ஸுக்கு ஸரியா R,O,Y,G,B,I,V–னுதானே இருக்கு? அதோட, லீவ் நாளில் ஒரேயடியா வெளையாட்டுலயே எறங்காம நல்ல புஸ்தகங்கள் படிக்க வேணும்னு புத்திமதியும்?"

சரியானதைத் துல்லியமாக கண்டுபிடிப்பதற்கு நகைச்சுவை சொட்டும் ஓர் உதாஉறரணம் : 'கோகுலாஷ்டமியும் குலாம் காதரும்' என்ற சொற்றொடர் எப்படி வந்தது என்று காட்டுகிறார்.

"தென் திருப்பேரை–ன்னு தென்பாண்டி நாட்டில ஒரு உசந்த திவ்ய தேசம், 'திவ்ய தேசம்'னா என்னன்னா,

@Page 44

தேவாரம் இருக்கிற சிவ க்ஷேத்ரங்களைப் 'பாடல் பெற்ற ஸ்தலம்'–கிறாப்பல, திவ்ய ப்ரபந்தம் இருக்கற பெருமாள் க்ஷேத்ரங்களுக்கு 'திவ்1 தேசம்'னு பேர். அப்படி 108 இருக்கறதுல, பாண்டிய தேசத்துல 18 இருக்கு. அதுல ஒண்ணு திருப்பேரை. அங்கே பெருமாளுக்கு ஸம்ஸ்கிருதத்துல மகர பூஷணர்–னு பேர். மகர குண்டலம் போட்டுண்டு இருக்கறவர்னு அர்த்தம். மகரம் என்கிற ஜாதியைச் சேர்ந்த மத்ஸ்யம் (மீன்) சுரட்டிண்டு இருக்காப்பல அந்தக் குண்டலத்தோட 'ஷேப்' இருக்குமானதால

அப்படிப் பேர். மகரபூஷணப் பெருமாளைத் தமிழ்ல மகரநெடுங்குழைக் காதர்னும், சுருக்கிக் 'குழைக்காதர்'னு மாத்திரமும் சொல்லுவா. ரொம்ப நாள் முன்னாடி நம்ப மடத்து ஆதரவுல 'ஆர்ய தர்மம்'னு ஒரு மாஸப் பத்திரிகை வந்துண்டிருந்தது. அதுல குழைக்காதையங்கார்னு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஆர்டிகிள் எழுதறதுண்டு. அவரைக் காதர் ஐயங்கார், காதர் ஐயங்கார்னே சொல்லுவோம்!

"அந்த மாதிரி ஒரு குழைக்காதர், பிரிட்டிஷ் ராஜாங்கத்துல குமாஸ்தாவா உத்யோகம் பண்ணிக்கிட்டிருந்தவர், வெள்ளைக்கார துரைகிட்ட கோகுலாஷ்டமிக்கு லீவ் அப்ளை பண்ணியிருந்தார். கோகுலாஷ்டமிக்கு 'பப்ளிக் உறாலிடே உண்டுதான். ஆனா, க்ருஷ்ண ஜயந்தின்னு ஸ்மார்த்தாள் அஷ்டமி திதியை வெச்சு கோகுலாஷ்டமின்னும், வைஷ்ணவாள் ரோஉறிணி நக்ஷத்ரத்தை வெச்சு ஸ்ரீஜயந்தின்னும் பண்றதுனால திதி ஒரு நாள்லயும், நக்ஷத்ரம் வேறே நாள்லயும் வரது ஸஉறஜம். அப்படி ரெண்டு க்ருஷ்ண ஜயந்தி வந்தாலும், கவர்மென்ட் உறாலிடே என்னமோ கோகுலாஷ்டமிக்குத்தான் விட்டிண்டிருந்தா. அதுலதான், ஸ்ரீஜயந்தி வேறே நாளில வந்த ஒரு வருஷம் அந்தக் குழைக்காதர் ஐயங்கார், ஓரே

@Page 45

பண்டிகைக்கு இரண்டு பேரைக் காட்டி துரையைக் குழப்ப வேண்டாம்னு நெனச்சு, "எங்க ஸப்–ஸெக்டுக்கு இப்பத்தான் கோகுலாஷ்டமி. அதனால லீவு தரணும்"னு அப்ளிகேஷன் போட்டார்.

"திருவல்லிக்கேணியைப் ட்ரிப்ளிகேன்னும், தரங்கம்பாடியை ட்ரான்க்யுபார்னும் புரிஞ்சுண்டவாதானே அந்த துரைமார்கள்! மூணே எழுத்து, ஸிம்பிள் 'மதுரை'யை தக்ஷிணத்துல 'மெஜுரா'வாகவும் வடக்கே 'மட்ரா'வாகவும் புரிஞ்சுண்டவாளாச்சே! அதனால அந்த துரை என்ன பண்ணினான்னா, 'குழைக்காதர்'ங்கிறதை 'குலாம் காதர்'னு நெனச்சுண்டுட்டான்! 'குலாம் காதர்' (என்பது) துருக்காள் நெறயவே வெச்சுக்கற பேரானதால அவன் காதுக்கு ஃபெமிலியரா இருந்தது. உறிண்டு – முஸ்லீம் பேர் வித்யாஸம் பாக்கத் தெரியாம ஸ்ரீவைஷ்ணவரை குலாம் காதராக்கிட்டான்! தன்னோட டைப்பிஸ்ட்கிட்ட 'குலாம் காதர்னு ஒரு க்ளார்க் கோகுலாஷ்டமிக்கு லீவ் கேட்டிருக்கார். ஸாங்க்ஷன் பண்ணியாச்சுன்னு தெரிவிச்சுடு'ன்னான்.

"அந்த டைப்பிஸ்ட் உறிந்து, 'இதென்னடா கூத்து?"ன்னு அவர் அப்ளிகேஷனைப் பார்த்தார். அவருக்கு ஒரே வேடிக்கையாயிடுத்து. வேடிக்கையை எல்லார்கிட்டயும் சொல்லி 'ஷேர்' பண்ணிக்கிண்டார். அதுலேர்ந்து தான்

ஸம்பந்தமில்லாத ரெண்டு விஷயத்தைச் சேத்து முடிச்சுப் போட்டா 'கோகுலாஷ்டமியும் குலாம் காதரும்'னு வசனமாவே சொல்றதா ஆச்சு.

"இந்தக் கதை.... நானே கட்டினதுதான். எழுத்தாளர்கள் என்ன 'மார்க்' போடுவாளோ ?"

ஸ்ரீசரணர்தான் எத்தனை ஸஉறஜ பாவத்துடன், தமது ஜகத்குருத்வ மஉறிமையை அடியோடு மறந்து

@Page 46

அடியார்களுடன் மனசு விட்டுப் பேசிப் பழகினார்? ஒட்டும் உள்ளம் என்றால் அதுதான் ஐயா! அத்தனை மட்டத்து மக்களுடனும் அவரவர் மட்டத்திற்கே வந்து மனஸூ ஒட்டி, 'ஸிம்பதி'யோடு, 'எம்பதி'யோடு பழகி, ஆற்றவும் தேற்றவும், சிறிது சிறிது சிறிதாகப் பொறுமையுடன் கனிவித்து மேல் மட்டங்களுக்கு அழைத்துச் செல்லவும் அவர் போல எவருண்டு!

அவரது அறிவின் அற்புதமான அனைத்துத் துறை மேதாவிலாஸத்திற்கும் மேலாக இந்த அருள் நெஞ்சே நிலவாக ஒளிவீசியதால்தான் அந்த ஞானஸூர்யனுக்கு எட்டத்தில் தயங்கி நில்லாமல் பரம பாமரரும் 'நம்மவர்' என்று உறவுமுறையுடன் அவரிடம் வந்தனர். கண்ணனைப் பற்றி அவர் சொன்னதுபோல் அவரிடமும் விதவிதச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் விளங்கினாலும், 'பரம கருணையிலே அநுக்ரஉறமா, அதுபாட்டுக்கு அதுவும் ஸதாகாலமும் நடந்து கொண்டேயிருந்தது.' அதற்கு எடுத்துக்காட்டு பார்க்குமுன் 'லோக வாழ்க்கை என்பதில் ஸகலத்தையும் ரஸித்துக் கொண்டு' என்று அவர் கண்ணனைச் சொன்னது அவர் விஷயத்தில் எப்படி ஸங்கீதத்திலும் – சமையலிலும் கூட – நிரூபணமாயிற்று என்பதற்குத் துளியூண்டு மாதிரி பார்க்கலாம்.

ஒரு தேர்ந்த கர்நாடக ஸங்கீத ரஸிகர் : முன்னேயெல்லாம் கச்சேரில தவறாம மஉறான்களோட பாடல் ஏதாவது ராகமாலிகை விருத்தமாப் பாடுவா. அதுல கேதாரகௌளைதான் அநேகமா மொதலாவதா இருக்கும். மனஸை ஒரு தூக்குத் தூக்கற வசியம் அந்த ராகத்துக்கு விசேஷமாயிருந்தது. இப்ப அதெல்லாம் போயிடுத்து. தேஷ் மாதிரி திராபையான வடக்கத்தி ராகங்களுக்குத்தான் மவுஸாயிருக்கு!

@Page 47

ஸ்ரீசரணர் : நீ இப்டி சொல்றே! ஆனா, 'தேஷும் கேதாரகௌளையும் ஒரே' ஸ்கேல்'தான் (ஒரே ஆரோஉறண – அவரோஉறணம் உடையவைதான்) ; ஒரே ஒரு வித்யாஸம் ஆரோஉறணத்துல நிஷாதம் மட்டும் வித்யாஸப் படறது'ன்னு கேள்விப்பட்டாப்பல இருக்கே.

ரஸிகர் : (லேசாக முனகிப் பார்த்துகிட்டு, ஆச்சர்ய உணர்ச்சியுடன்) ஆமாம். பெரியவா சொன்னாப்பலதான்! ஆனா உறிந்துஸ்தானிப் பாடகாள் ஸ்வரங்களைப் பிடிச்சு நிறுத்திப் பாடறதுக்கும் நம்மவா போன தலைமுறை வரை பண்ணிண்டிருந்ததுக்கும் இருந்த வித்யாஸத்தாலே ஒண்ணு லைட்டாவும் இன்னொண்ணு புஷ்டியாகவும் இருந்திருக்கு.

ஸ்ரீசரணர் : (அவரையும் விஞ்சிய ரஸிகராக, ஆயினும் அடக்கத்துடன்) லைட், புஷ்டி – அந்த 'டிஸ்டிங்க்ஷன்'லாம் எனக்குத் தெரியாது. ரெண்டுல ஒவ்வொண்ணுலயும் ஒரு தினுஸு அழகு இருக்கறதாத்தான் என் லெவல்ல தோன்றது. நாம 'ஸிந்து பைரவி'ன்னு சொல்ற அவா பைரவி கூட முழுக்கவே நம்ம தோடி ஆரோஉறண–அவரோஉறணம்தான். கமக மயமா எழைச்சு எழைச்சு நாம தோடி பாடறதுல ஒரு கம்பீரமான அழகு இருக்குன்னா, அவா ஸிந்துபைரவின்னு ஸ்வரங்களைப் பிடிச்சு வின்யாஸப்படுத்தறதுலேயும் மனஸைத் தொடற ஏதோ ஒண்ணு இருக்கறதாத்தான் என் மாதிரியானவாளுக்குத் தோணறது. தீக்ஷிதர்வாள், ஐயர்வாள் மாதிரியான நம்ம பெரியவாள்ளாமும் உறிந்துஸ்தானி ராகங்களை 'அடாப்ட்' பண்ணிண்டிருக்காளே! ஒரே ஸ்கேல், ஆனாலும் ஸ்வரங்களைக் கையாளற விதத்தினாலேயே ரொம்ப வித்யாஸமாயிருக்குன்னா ஆச்சரியமாத்தான் இருக்கு. ஆனாலும் வடக்கத்தி – தெற்கத்தி ஸங்கீதங்களில் இது ஸஉறஜமாவே 'ப்ரூவ்' ஆறது.

@Page 48

ரஸிகர் : கர்நாடக ஸங்கீதத்துலேயேகூட அப்படி உண்டு. தோடியையேதான் மத்திமம் பண்ணி நிஷாதாந்தமா பாடினா அது புன்னாகவராளி ஆயிடறது! ரெண்டும் ரொம்ப வித்யாஸமான வெவ்வேறே ராகம் மாதிரிதானே தோணறது ?

ஸ்ரீசரணர் (வியப்புடன்) : அப்படியா ? தோடி–புன்னாகவராளி ஒரே ஸ்வரங்களா ? நான் 'நோட் பண்ணினதில்லையே! கொஞ்சம் பாடிக் காட்டறியா ? ஆலாபனையும் பண்ணு. க்ருதிகளுடம் பாடு. 'கமலாம்பிகே' (தோடி)யும், 'கனகசைல' (புன்னாகவராளி)யும் பாடு.

ரஸிகர் நன்றாகப் பாடவும் கூடியவர். ஸ்ரீசரணர் கூறிய விரேஷம், வெகு சிறப்பாகப் பாடினார். அதில் சின்னச் சின்ன நுட்பங்களையும் ஸ்ரீசரணர் அநுபவித்து ரஸித்ததுண்டே!

உறாஸ்யம் கலந்த அவரது அறிவுத் திறனுக்கும் அவருடைய இசையறிவு வழிவிட்டது. அநேக ராகங்களின் பெயரைச் சொல்லாமலே அவர் நகைச்சுவை ததும்ப சங்கேதமாகச் சொன்னவையே சங்கீதமாக இனிப்பவை! ஒரே ஓர் உதாரணத்துடன், 'விரிவஞ்சி' விடுத்தனம்' செய்வோம்!

ஒரு பாடகர் : ஏகப்பட்ட தொலை. ரொம்ப விசாரமாயிருக்கு. மீளறதுக்கு பெரியவாதான் வழிசொல்லணும்.

ஸ்ரீசரணர் : நீதான் ஸங்கீதக்காரனாச்சே, ஓங்கிட்டயே வரி இருக்கே! தன்னை மறந்து பாடிக்கிண்டிரு! அதைவிட வழி, மருந்து வேண்டாம். இப்பவே பாடு. ஸூர்ய சந்திராள் ராகத்துல ஐயர்வாள் கிருதி இருக்கே! அதைப் பாடு.

பாடகர் : ஸூர்யசந்திராள் ராகமா ? பெரியவா எதைச் சொல்றான்னு தெரியலியே!

@Page 49

ஸ்ரீசரணர் : ஸூர்யனுக்கு இன்னும் என்ன பேரெல்லாம் உண்டு ?

பாடகர் : ஆதித்யன், பாஸ்கரன், ரவி.

ஸ்ரீசரணர் : அதுதான்!

பாடகர் : (சிரிப்பை அடக்க முடியாமல்) ஓ! ரவிசந்திரிகாவா ?

ஸ்ரீசரணர் : ஆமாம். அதுல ஐயர்வாள் பாட்டு தெரியுமோன்னோ ? 'நிரவதி ஸுகத' இல்லே ; இன்னுணு (இன்னொன்று). அதைப் பாடு.

விசாரம் என்று விண்ணப்பித்த வித்வான் பாடிய அப்பாடல் 'மாகேலரா விசாரமு ?' தான்! 'நமக்கென்ன விசாரம் ? ராமனொருத்தன் இருக்கிறானே!' என்று தெம்பூட்டும் பாடல்!

நகைச்சுவை, இசையறிவுடன் இங்கே மனசு ஒட்டும் ஸிம்பதியும்தான்!

சமய குருவை சமையல் துறையில் கொஞ்சூண்டு ருசிக்கலாம்.

'உப்புமா' என்ற பெயர் அந்த உண்வகைக்கு ஏன் வந்தது என்று அந்த விநோத வித்தகர் கேள்வி எழுப்புகிறார். எவராலும் 'கன்வின்ஸிங்'காகக் காரணம் சொல்ல இயலவில்லை.

அவரே சொல்கிறார். "அது uppuma இல்லே, ubbuma! ப (pa)–காரத்தை ப (ba) காரமாச் சொல்லணும். ஒடச்ச மாவையோ, ரவையையோ வென்னீர்ல கொட்டின ஒடனேயே அது வாணலி பூரா உப்பிடறதோல்லியோ? சாதம் வடிக்கறச்சேயுந்தான் அரிசி உப்பறது. ஆனா அதுக்கு ரொம்ப நாழி ஆறது. நொய்யும் ரவையுமோ சட்னு பாத்ரம்

@Page 50

பூரா உப்பிடறது. அதனாலதான் 'உப்புகிற மாவு'ங்கிற அர்த்தத்துல அந்தப் பேர் ஏற்பட்டிருக்கு."

ஸ்ரீ சங்கர பாஷ்யத்தின் ஆழ்ந்த ஆராய்ச்சியாளர் இட்டிலி, இடியாப்பம் பற்றியும் 'இந்த லோக வாழ்க்கையிலே இருக்கிற எதுவுமே தள்ளுபடி இல்லை' என்ற அநுபவ நிலையில் ஆராய்ச்சி செய்து கூறியிருக்கிறார்.

'இட்டு இலி– அதாவது இலையிலே அதை இட்ட உடனேயே அது இல்லாம 'இலி'யாகச் சாப்பிடறவா வயித்துக்குப் போயிடறது ; அத்தனை ஆர்வமா மநுஷனைச் சாப்பிட வைக்கிற பதார்த்தம் அதுன்னு ஒர்த்தர் சொன்னார். அது சமத்காரத்துல சொன்னது. வாஸ்தவத்திலே 'இடுதல்'ங்கிறதுக்கு ஒண்ணைத் தொடாம அப்படியே வெச்சுட்டு இருந்துடறதுன்னு ஒரு அர்த்தம் உண்டு. 'இடுகாடு'ங்கிறோம். அதுல ம்ருத சரீரத்தைச் சிதையிலே அப்படியே வெச்சுட்டுத் திரும்பி வந்துடறதா இருக்கு. புடம் போடறதுக்காகத் தங்கத்தை நெருப்பிலே அப்படியே ரொம்ப நேரம் வெச்சிருப்பா. அந்தத் தங்கத்துக்கு 'இடுதங்கம்'னே பேர். 'மருந்து வைக்கிறது'ன்னு சொல்லி வசிய மருந்தை ஒரே ஒரு தரம் குடுத்துட்டு, அப்புறம் 'டோஸ்' இல்லாம விட்டுடுவா. அதுக்கு 'இடு மருந்து'ன்னே பேர்! அதே ரீதியில, பாத்திரத்துக்குள்ளேயிருக்கிற பதார்த்தத்தைக் கிண்டிண்டு, திருப்பி

விட்டுண்டு–இல்லாம அப்படியே ஸ்டீமல வெச்சு மூடிட்டு, அதுவே பக்குவமாகட்டும்னு பேசாம ஒக்காந்திருக்கறதும் 'இடுதல்'தான். அதை இடல், இட்டல்னும் சொல்லலாம். அந்த மாதிரி தயார் பண்ணினதே 'இட்டலி'. பேச்சுல 'இட்டிலி' ஆயிடுத்து.

"அதே போல ஸ்டீமல 'இட்டது'தான், 'இடுதல்' செஞ்சதுதான், ப்ராம்மணாள் ஸேவைன்னும் மத்தவா இடியாப்பம்னும் சொல்றது. அது அப்பம் மாதிரியில்லாம



எழை எழையாயிருக்கேன்னா, இது அப்பம் இல்லையே! ஆப்பம்னா ? 'அப்' என்கிற ஜலத்தின் ஸம்பந்தமுள்ளது 'ஆபம்'. அதுவே 'ஆப்பம்' ஆயிடுத்து. இடியாப்பம் நீராவியில தானே வேகறது ?"

'லோக ஜனங்களின் ஸகல வியவஉறாரங்களும் தெரிந்து கொண்டு புரிந்து கொண்டு' கீதாசாரியன் போலவே நமது ஆசாரியன் இருந்ததற்கு ஓர் உதாரணமாவது காட்டாது விட்டால் நியாயமாகாது.

அவரிடம் மிகுந்த பக்தி பூண்ட ஒரு குடும்பத்தினர் தங்களகத்துப் பெண்ணுக்குக் காஞ்சியிலேயே கலியாண மண்டபம் எடுத்துக் கொண்டு மணமுடிக்க வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்தது முகூர்த்த நாளுக்கு இரு தினம் முந்தைய மாலையில்தான். அன்றிரவு ஸ்ரீசரணரது தரிசனத்திற்காக வருகிறார்கள்.

அவர்களில் நிகழ்ச்சி நாயகியான மணப்பெண் இல்லாதது அவரோடிருக்கும் பாரிஷதர்களுக்குப் பெரிய கேள்விக்குறியாக நிற்கிறது. அதுவும் அப்பெண், குழந்தைப் பருவத்திலிருந்தே அவரிடம் பரம பக்தி கொண்டவளாயிற்றே!

குறிப்பறியும் 'இங்கிதக்ஞர்' அவர்களுக்குப் பதிலளிக்கும் 'லீடிங் கொஸ்சன்' போலவே அக்குடும்பத்தினரிடம் கேட்கிறார் : "கொழந்தைக்குக் கையில, காலில மருதாணி இட்டாச்சாக்கும்!"

'ஸகல வியவஉறாரங்களும் தெரிந்து கொண்டி'ருப்பதில் பின்னரும் தொடர்கிறார் : "நாளைக் காலம்பறவே ஸம்பந்திப்பேர்கள் வந்துடறளாக்கும்! அவா ஊர்லேந்து அப்படித்தானே ரயில், பஸ் கனெக்ஷன் இருக்கு ? அப்பறம் ஸமாராதனை இருக்கும். அது ஆனவிட்டு இங்கே நான் விச்ராந்தி பண்ணிக்கற டயம் ஆயிடும்.

@Page 52

ஓங்களுக்கு ஜானுவாஸ கார்யம் வந்துடும். ஆனதுனால கொழந்தை இல்லாட்டாலும் பரவாயில்லேன்னு இப்பவே வந்துட்டேளாக்கும்!"

இவ்வாறு அவர் உலக விவகாரம் நுணுக்கமாகத் 'தெரிந்து கொண்டு' சொன்னதிலேயே அக்குடும்பத்தினரின் நெஞ்சு நனைகிறது. மேலும் அவர் 'புரிந்து கொண்டு' என்பதாக அனுதாபக் கருணையுடன் கூறியதைக் கேட்டபோதோ, நனைந்த நெஞ்சங்கள் உருகியே ஓடுகின்றன.

"வரமுடியலையே–னு கொழந்தை கொஞ்சங்கூட வருத்தப்பட வேண்டாம். எல்லாம் நல்லதுக்குத்தான். 'வந்திருந்தாக்கூட அவளை இத்தனை கவனிச்சிருப்பேனான்னு ஸந்தேஉறந்தான்! இப்பத்தான், வந்திருக்கிற ஓங்களையெல்லாம்விட வராத அவளோட நெனப்பே ஜாஸ்தியாயிருக்கு. ஜாஸ்தியாவே ஆசீர்வாதமும் பண்றேன்'னு நான் சொன்னதா அவகிட்டச் சொல்லுங்கோ. போனதடவை அவளை நீங்க அழைச்சுண்டு வந்து சீக்கிரமா கல்யாணம் ஆகணும்னு ரொம்ப ப்ரார்த்திக்கிறப்ப, 'அடுத்த தடவை ஜோடியா அழைச்சுண்டு ப்ரார்த்திச்சுண்டேன். அதுதான் இப்ப அவ தம்பதியாவே வரும்படியா ஆயிருக்கு–ன்னு சொன்னேன்னும் சொல்லுங்கோ!"

முடிவாக, முடிவில்லாத அவரது பெருமைகளுக்கு முடிமணியாக உள்ள 'பரம கருணையிலே அநுக்ரஉறத்துக்கு' வருவோம். த்ரௌபதியை அயனான அந்தத் தருணத்தில் ஐயன் ரக்ஷித்ததையும், குசேலருக்குப் பொருட்குவை ஈந்ததையும் அவர் எடுத்துக்காட்டாகக் கூறினார். அதே சாயலில் ஒவ்வொன்று பார்ப்போம். இரண்டாவதில் முதலாவதின் தருணமறிந்த காப்பும் கெட்டி முலாம் பூசக் காண்போம்.

@Page 53

உரிய காலம் வந்தபோதிலும் ஸ்ரீசரணர் அன்று ஸ்நானம் – பூஜைகளுக்குச் செல்லாமல் சிந்தனைவசப் பட்டிருக்கிறார். சிந்தனை கலைந்ததும் ஸ்ரீமடத்து மானேஜரை அழைத்து எங்கோ ஆயிரம் மைல் கடந்து உள்ள ஒரு சாமானிய பக்தருடைய முகவரியைத் தேடிப்பிடித்து எடுத்து வரச் செய்கிறார். ஒரு குறிப்பிட்ட தொகை சொல்லி அதை உடனே அந்த பக்தருக்குத் தந்தி மணி ஆர்டர் செய்யச்

சொல்கிறார். அதற்கதிகமாக எந்த விவரமும் தரவில்லை.

ஒன்றும் புரியாமலே அவரது உத்தரவை மடத்து மேலாளர் நிறைவேற்றுகிறார்.

நாலைந்து நாளுக்குப் பின் அந்த பக்தரிடமிருந்து நன்றிக் கண்ணீராலேயே எழுதிய மடல் வருகிறது.

அன்று அவர் தமது தந்தையின் சடலத்தைப் போட்டுக் கொண்டு உத்தரகிரியைக்குப் பொருள் இல்லாமல் தவித்து உட்கார்ந்திருந்தாராம்.

ஸ்ரீசரணரின் சந்திரமௌளீச்வர பூஜைக்கு நீண்ட காலம் நிதமும் குடலை குடலையாக வில்வம் கொண்டு வந்து கொடுத்து, 'பில்வம் வைத்தா' என்றே அவரால் அன்புடன் அழைக்கப்பட்டவர் அந்தத் தந்தை. அப்பாவிடம் அன்பு சொரிந்த அப்பெரியவாளே கதி என்று த்ரௌபதி த்வாரகாவாஸனிடம் சரணாகதி செய்தது போல் அன்று அவரது புத்திரர் செய்தாராம்! நம்பவொண்ணாத அநுக்ரஉறமாகத் தந்தி மணியார்டரும் வந்து குதித்ததாம், இவர் தந்தியில்லா மனக்கம்பி மூலம் விடுத்த வேண்டுகோளுக்கு விடையாக!

இவர்களாவது முன்னறிமுகம், நெடுநாள் பழக்கமே, பெற்றிருந்தவர்கள். 'புது' பக்தர் ஒருவருக்குக் கண்ணன் குசேலருக்குச் செய்ததை ஸ்ரீசரணர் அயனான தருணத்தில் செய்த நிகழ்ச்சியைக் காணலாம்.

@Page 54

ஒரு நாள் பம்பாயிலிருந்து செல்வச் செழிப்புள்ள ஓர் அம்மாள் ஸ்ரீசரணரின் தரிசனத்திற்கு வந்தாள். தன் குடும்பத்தினர் செய்யும் பிஸினஸில் லாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஸ்ரீசரணருக்கென்று எடுத்து வைத்து, உடன் கொண்டு வந்திருப்பதாகவும் அதை ஸமர்ப்பிக்க விரும்புவதாகவும் விக்ஞாபனம் செய்து கொண்டாள்.

பெரிய தொகை!

அதிசய மடாதிபதியாகத் திரவிய காணிக்கைகளை அவசியத்திற்குக்

கட்டுப்படுத்தியே ஏற்கவும், மறுக்கவும் செய்தவர் ஸ்ரீசரணர்! இப்போதோ அவர் மடத்தை விட்டுத் தனியாகச் சில பணிவிடையாளருடன் இருக்கிறார். அவ்வளவு பெருந்தொகை ஏற்பாரா ?

அதில் சிறிதளவே ஏற்றுக் கொண்டார். அதுவும் ரொக்கமாக ஏற்காமல், அந்த மாதரசியையே வருகிற அடியார்களுக்குச் சமைத்துப் போடச் சாமான்களாக வாங்கிப் போட்டுவிட்டுப் போகுமாறு சொன்னார்.

முழுவதையும் அவர் ஏற்காததில் அம்மையாருக்கு மிகுந்த ஏமாற்றம்.

"கவலைப்படாதே! பாக்கிப் பணமும் ஏதாவது நல்ல கார்யத்துக்கு ப்ரயோஜனமாகும். சித்த (சிறிது) நாழி இங்கேயே இருந்து விச்ராந்தி பண்ணிண்டு போகலாம்" என்றார் ஸ்ரீசரணர்.

அம்மாள் அவ்வாறே தங்கினாள்.

சிறிது நேரத்தில் ஒரு புது பக்தர் வந்தார். தம்மை முதலியார் வகுப்பைச் சேர்ந்தவராக அறிமுகம் செய்து கொண்டார். அவருடைய தோற்றத்திலேயே துக்கத்தின் அழுத்தமும் அதை விஞ்சும் பயப்பிராந்தியும் பிரதிபலித்தன.

@Page 55

ஸ்ரீசரணர் சந்தனத்தின் தண்மையுடன் அந்த வெந்த நெஞ்சினரை அருகழைத்து அமர்த்திக் கொண்டார்.

"ஒனக்கு என்னப்பா வேணும் ?" என்று பன்னீராகச் சீதம் சொரிந்து வினவினார்.

"சின்னக் கம்பெனி ஒண்ணுலே உபாயமா (சிறியதான) ஒரு வேலையிலே இருக்கேனுங்க. சம்பளம் பத்தறதே இல்லீங்க. கடனா வாங்கிக்கிட்டே போயி, வட்டிகூடக் கட்ட முடியலீங்க ?" என்று மேலே பேசவெண்ணாது வந்தவர் குழறினார்.

"கடன்காரன் பிடுங்கல் தாங்க முடியாம வந்திருக்கியாக்கும்!" என்று நெஞ்சார்ந்த பரிவுடன் பரமர் கேட்டார். இப்ப, இந்த க்ஷணத்துல என்ன நெலவரம் ? தயங்காம, பயப்படாமச் சொல்லு' என்று அபயப் பிரதானம் செய்து ஊக்கினார்.

அழுகை ஊளை வெடிக்கும் குரலில் வந்தவர், "ஈட்டிக்காரன் தொரத்திக்கிட்டே வந்திருக்காங்க! இங்கேயேதான் வாசல்ல நிக்கறானுங்க!" என்றார்.

கடன்தொகை எவ்வளவு என்று அவரைக் கேட்டு ஸ்ரீசரணர் தெரிந்து கொண்டார். அம்மாள் கொண்டு வந்தது அதற்கு மிக அதிகமாயிருந்தது. ஸ்ரீசரணர் தம்மைச் சேர்ந்தோரின் பொருட்டாக அநுமதித்த பொருட்களை வாங்கத் தேவைப்படுவதைக் கூட்டினாலும் மிகுதி நின்றது.

அப்புறம் என்ன? பம்பாய் தனிகையின் திரவியம் முதலியார் கைக்கு – அவர் கையிலிருந்து பட்டாணியன் பைக்குப் போவதற்காக – சேர்ந்தது.

ஸ்ரீசரணர் அம்மாளை நோக்கி இன்னருளுடன், "நான் கேட்ட ஸாமான் – சப்பட்டை வாங்கினவிட்டும் மீதி நிக்கக் கூடியதையும் இவர் கையிலேயே போடு. கடன் அடைஞ்சா போறுமா? மாஸம் முடியக் குடும்பம் சாப்பிட்

@Page 56

டாகணுமே! எல்லாம் ஒன் உபயமாவே இருக்கட்டும்!" என்றார்.

எத்தனை கரிசனம், அங்கலாய்ப்பு!

அம்மாளும் அவ்விதமே செய்தாள். அவளது மனம் நிரம்பியிருந்தது பார்த்தாலே தெரிந்தது.

நிறைவை மேலும் நிறைவித்து நிறையறிவாளர், நிறையருளாளர், "ஸமய ஸஞ்ஜீவியா வந்தே! ஆபத்துக் காலத்திலே வந்து இவரை விடுவிச்சே! ரொம்பப் புண்யம் நன்…னா இருப்பே" என்று ஆசி மொழிந்தார், பொழிந்தார்.

நிறை நன்றியில் கண் நிறைந்து விம்மிக் கொண்டிருந்த முதலியாரிடம், "ஸ்வாமி ஒனக்காகவே எங்கேயிருந்தோ இந்தப் புண்யவதியைக் கொண்டு வந்து சேத்து ரக்ஷிச்சிருக்கார். அவரை, ஒருபோதும் மறக்காம, கஷ்டமோ, நஷ்டமோ, அவர் தாங்கிக்கிறார்ங்கிற நம்பிக்கையோட, முடிஞ்ச மட்டும் சிக்கனமா வருமானத்துக்குள்ளேயே செலவைக் கட்டுப்படுத்திண்டு, கடன்–கஸ்திலே மாட்டிக்காம இருக்கப் பாருப்பா!" என்று உறிதோபதேசம் செய்தார். எத்தனை

உறிதமாக!

கடன் பட்டவர், பாரத்தின் அழுத்தம் நீங்க நிம்மதியாக விடைபெற்றார்.

அவர் சென்றபின் பெரியவாள் "அப்பாடா!" என்று சொன்னதுண்டே! முன்னறிமுகமில்லாத ஒருவருக்கு ஸமய ஸஞ்ஜீவியாக உதவியது மாத்திரமின்றி அவரது பாரத்தையும் ஸ்ரீசரணரே எவ்வளவுக்குப் பகிர்ந்து கொண்டு, இப்போது சுமை நீக்கத்தில் நிம்மதி காண்கிறார் என்பதைத் தெரிவிப்பதாக இருந்தது, அந்த ஆசுவாஸ அப்பாடா!

ஸகல ஜீவர்களுடனும் அப்படி ஒன்றிக் கலந்த அன்பு மூர்த்தி அவர்!



# 3

# காவிய ஜீவிதச் சோலையிலே கால் போன போக்கினிலே![1]

கலவை பெரியவாளின் காலத்தில் காஞ்சி ஸ்ரீ மடத்தில் பணியாளாகச் சேர்ந்த மருதமுத்து நமது மஉறா பெரியவாள் பட்டத்திற்கு வந்த பின்பும் பல பத்தாண்டுகள் பாரா பார்த்தவர்.2 (காவற் பணியைப் பாரா என்று மடத்தில் சொல்வார்கள்.) அவர் ஸ்ரீ மஉறா பெரியவாள் பதின்மூன்றாம் வயதில் பீடாதிபத்தியம் ஏற்ற காலத்திலிருந்து தொடங்கிப் பல நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்ததுண்டு. அவற்றிலிருந்து, அம் மஉறான் அந்த ஆதி கால, மத்திம காலங்களிலுங்கூட 'மஉறா' என்ற அடைமொழிக்கு உரியவராகத்தான் ஒரு தனித்தன்மையுடன் பிரகாசித்திருக்கிறாரென்று தெரியும்.

---

1. 1998 'கல்கி' தீபாவளி மலரில் வெளியான கட்டுரை
2. கவலை பெரியவாள் என்ற யதிச்ரேஷ்டர் 1890–1907 காலகட்டத்தில் காமகோடி பீடாதிபராக விளங்கிக் கலவை என்ற வடார்க்காடு ஊரில் 'அடங்கியவர்'. அவரை அடுத்த பட்டம் எட்டே நாள்கள் பீடாதிபதியாக இருந்து அதே கலவையில் தாமும் குருநாதரைப் பின் தொடர்ந்து ஏகிவிட்டார். அவரை அடுத்து 1907 பிப்ரவரியில் அருட்சிம்மாதனம் ஏறியவரே நமது மஉறா பெரியவாள்.

நிகழ்ச்சிகளில் ஒன்று.

இரவு பூஜை முடிந்தபின் ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜா மண்டபத்திற்குப் பாரா போடப்படும். முறை போட்டுக் கொண்டு பாராக்காரர்கள் விடிய விடியக் காவலிருப்பார்கள். ஒரு சமயம் பாராக்காரர் கண்ணயர்ந்து விட்டார். அவர் கண் விழிப்பதற்குள் ஒரு களவு நேரிட்டுவிட்டது. ஸ்வாமியின் திருவாபரணங்களில் ஒன்று காணாமற் போய்விட்டது.

மடத்து மானேஜர் வெகு ஸாமர்த்தியமாகப் புலன்விசாரணை செய்து காதும் காதும் வைத்தாற்போலக் குற்றவாளியைக் கண்டுபிடித்து விட்டார். நகையும் கையுமாகவே குற்றவாளி பிடிபட்டார்.

பணிக் காலத்தில் தூங்கிப் போன பாராக்காரருக்கு ஏதோ அபராதத் தொகை கட்டச் சொல்லித் தண்டனை விதித்த மானேஜர் களவாடிய நபரைப் போலீஸில் ஒப்புவிக்க முடிவு செய்தார்.

"உன்னைப் போலீஸில் பிடித்துக் கொடுக்கப்போகிறேன். அதற்கு முன் நீயே பெரியவாளிடம் போய் குற்றத்தைச் சொல்லி, நகையையும் ஸமர்ப்பணம் செய்துவிட்டு உத்தரவு வாங்கிக் கொண்டு வந்து சேர்" என்று மானேஜர் கூறிக் குற்றவாளியை ஸ்ரீ சரணரிடம் அனுப்பி வைத்தார்.

அந் நபர் அவ்வாறே செய்து, ஸ்ரீ சரணரின் முன் தேம்பித் தேம்பி அழுது கொண்டு மன்னிப்பு வேண்டினார்.

ஸ்ரீ சரணர் மந்த்ராக்ஷதைத் தட்டைத் தம்மிடம் நகர்த்திக் கொண்டார். நபர் ஸமர்ப்பித்த திருவாபரணத்தையும் வைத்தார். தட்டை அவரிடம் காட்டி, "எடுத்துக்கோ" என்றார்.

@Page 59

நபரின் தேம்பல் முன்னிலும் அதிகமாயிற்று. கொடும் தண்டனை கொடுத்திருந்தால் கூட அப்படி அழுதிருக்க மாட்டார்! குற்றத்தை மன்னித்தது மட்டுமின்றி, வெகுமதி போலவே சாக்ஷாத் ஸ்வாமியின் திருவாபரணத்தையும் கொடுத்த அந்த க்ஷமா குணமே அவரைப் புரட்டியெடுத்துவிட்டது.

பெரியவாள் மானேஜரை அழைத்துவரச் சொல்லி ஆளனுப்பினார்.

அவரிடம் பெரியவாள், "உங்களுக்கு இவன் வேண்டாமென்றால் வேஷ்டி, புடைவை, ரயில் சார்ஜ் கொடுத்து ஊருக்கு அனுப்பிவிடுங்கள். அதற்கு மேல் போலீஸ், கீலீஸ் என்று நடவடிக்கை வேண்டாம்" என்று கூறினார்.

மானேஜர், "உத்தரவு" என்று கூறி விடைகொண்டார்.

இன்னமும் தேம்பல் ஓயாது நின்று கொண்டிருந்த நபரிடம் பெரியவாள், "தவறு செய்கிறது ஸஉறஜம். அதற்காக மனஸை ஒரேயடியாக க்லேசப்படுத்திக்கொள்ள வேண்டாம். இப்படிச் சொன்னதால் 'ஸஉறஜந்தானே ?' என்று அப்படியே பண்ணிக் கொண்டு போகலாமென்று அர்த்தமில்லை. இனிமேல் இந்த மாதிரிச் செய்யாமலிருக்கணும் என்று சந்திரமௌளீச்வரரையும் அம்பாளையும் பிரார்த்தித்துக் கொள். போய்ட்டு வாப்பா!" என்று கனிவாகக் கூறி அனுப்பி வைத்தார்.

1933–ல் தொடங்கி 1939–ல் பூர்த்தி பெற்ற ஸ்ரீசரணர்களின் காசி–ராமேச்வர யாத்திரை ஸநாதன தர்ம தேவதையின் திக்விஜயமாகவே நடந்தேறியது. அதன்போது வடநாட்டில் ஓர் ஊரில் ஸ்ரீமடம் முகாமிட்டிருந்தபோது அங்கு ஒரு தமிழ்த் திரைப்படம் வெளியிடப்பட்டது.

@Page 60

ஸினிமா மோஉறம் யாரை விட்டது ? மடத்துப் பாராக்காரர்கள் மட்டும் அதற்கு விதிவிலக்காகிவிடுவார்களா என்ன ?

அக்காலத்தில் இரவில் இரண்டு மணி நேரத்துக்கு ஒருவராக பாராக்காரர்கள் முறை மாற்றிக் கொண்டு, தீபம் அணையாமல் அவ்வப்போது நெய் வார்த்துக் கொண்டு, காவலும் காத்து வந்தனர். யாவரும் பிராமண சிஷ்யர்கள். அந்நாட்களில் பாரா பார்ப்பதற்குத் தனியாகக் கால் ரூபாய் ஊதியமுண்டு. அதற்குப் போட்டி போட்டுக் கொண்டு 'மனுதாரர்'கள் வருவார்கள். இன்று அப்படிப் பாரா பார்க்க இருந்தவர்களை ஸினிமா ஒரு புறம் இழுக்க கால் ரூபாயும் காவற் கடமையும் இன்னொருபுறம் இழுத்தது. முடிவு செய்யத் தெரியாமல் இழுபறிப்பட்டார்கள்.

ஸீனியர் கிங்கரர்களில் ஒருவரான 'பில்வம்' வைத்ய நாதய்யர் அப்போது அவர்களிடம் அநுதாபம் காட்டுவதாக நினைத்து ஒரு காரியம் செய்தார்.

(பில்வம் வைத்தாவின் கதையை – 'ஆதிமூலமே!' என்று ஆனை அழைக்கப் பறந்தோடி வந்து காத்தருளிய நாரணனாகப் பெரியவாளைக் காட்டும் கதையை– அவரது 'கதை முடிந்த'பின் அவரது குமாரருக்குப் பெரியவாள் அவரது இறுதிச்

சடங்குகளுக்குப் 'போஸ்துமஸ் அவார்'டாகத் தந்தை மணியார்டர் அனுப்பச் செய்த கதையை இதற்கு முந்தைய கட்டுரையில் பார்த்தோம். அவரது சரிதை முடிந்தபின் அப் பரிசு! ஸினிமா மோஉறக்காரர்களிடம் அவர் அநுதாபம் காட்டிய இப்போதோ ?)

பாரா பார்க்க வேண்டியவர்களின் இழுபறியை உணர்ந்த வைத்தா அநுதாபக் கரிசனத்துடன், "நீங்க போய் 'நைட் ஷோ' பார்த்துட்டு வாங்கோ! நான் பாரா பாத்துக்கறேன்" என்று அபயம் அருளினார்.

@Page 61

அவர்கள் ஸினிமாக் கொட்டகைக்குப் பிய்த்துக் கொண்டார்கள்.

அந் நாள்களில் திரைப்படங்களில் சில 20,000 அடி நீளமிருக்கும். நாலு மணி நேரத்துக்கு மேல் ஓடும். மாலைக் காட்சி ஆறு மணியளவில் தொடங்கினார், இரவுக் காட்சி பத்தரை மணிக்குத் தொடங்கி பின்னிரவு மூன்று வரையில் நடக்கும். அப்போது அவ்வூரில் வந்திருந்தது அப்படிப்பட்ட சேஷன் வால் படம்தான். பத்தரை மணிக்காட்சிக்குப் பத்துக்கே புறப்பட்டவர்கள் மூன்றரைக்குத்தான் திரும்புவார்கள். அப்புறம் மட்டும் தூங்காமல் காவலிருக்க முடியுமா என்ன ? எனவே அம் முழு இரவுக்குமே அம் முறைக்காரர்கள் எல்லாருக்குமாக வைத்தா சுமை தாங்க முன் வந்து அப் பொறுப்பைத் தொடங்கினார்.

பட் பட்டென்ற கை தட்டலில் கண் விழித்தார், வைத்தா. வழக்கமில்லா வழக்கமாக அன்றைக்கென ஸ்ரீ மஉறா பெரியவாள் நள்ளிரவுக்குப்பின் பூஜை ஸந்நிதிக்கு வந்திருக்கிறார்! பாரா பார்க்க இயலாமல் தூங்கி வழிந்து கொண்டிருந்த வைத்தாவை எழுப்பியது அவரது கைதட்டல்தான்.

ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு எழுந்து நின்ற வைத்தாவிடம் ஸ்ரீசரணர், "இதுதான் பாரா பாக்கற லக்ஷணமா ? தூங்கி வழியறியே!" என்றார். பாராத் தொண்டர்களில் வைத்தாவும் ஒருவர் என்று ஸ்ரீசரணர் நினைத்துப் பேசியதாகத் தெரிந்தது.

தூக்கக் கலக்கம் தெளியாத வைத்தா, "முன்ராத்ரி லேந்தே முழிச்சிண்டிருந்ததால கண்ணை இழுத்துடுத்து" என்று உண்மையை உடைத்துவிட்டார்.

"ஏன் முன்ராத்ரிலேந்து ? மத்த மொறைகாரா என்ன ஆனா ?" என்றார்

ஸ்ரீசரணர்.

@Page 62

இதற்குள் வைத்தா முழு ஜாக்ரத் அவஸ்தைக்கு வந்து விட்டதால் ஜக்ரதையாய் உண்மையை ஒளித்துப் பேசினார். "எனக்குப் பாரா ட்யூடியே இல்லே. ட்யூடி இருக்கறவாள்ளாம் தமிழ் டாக்கி வந்திருக்குன்னு அதுக்குப் போய்ட்டா. காவலில்லாம இருக்கப்படாதேன்னு நான் வந்து ஒக்காந்தேன். ரொம்ப நாழி பாரா பாத்ததுல கண்ணைக் கொஞ்சம் அசத்திப்பிடுத்து."

"ஸரி ஸரி" என்று கூறிய ஸ்ரீசரணர் தாம் உடுத்திருந்த காவியாடையையே தரையில் விரித்துக் கொண்டு (அதுதான் மெய் வருத்தம் பாரா அம் மெய்ஞ்ஞானியின் அன்றாட வழக்கு) அந்த இடத்திலேயே படுத்துக் கொண்டுவிட்டார்.

சிறிது நித்திரை செய்து அவர் விழித்தெழவும் ஸினிமா பார்த்த சிஷ்யமணிகள் திரும்பி வரவும் சரியாயிருந்தது. ஸந்நிதியில் பெரியவாளைக் கண்டதும் அவர்களுக்குக் குளிர் கண்டது.

குளிர வைத்த பெரியவாள் நெருப்பாகக் கனன்று கொண்டிருந்தார். அந்த அகாலத்தில் மானேஜரை அழைத்து வரச் செய்தார். அவரிடம், "இவாளுக்கு மடத்துக் கைங்கர்யம் எதுவும் குடுக்க வேண்டாம். எல்லோரோடேயும் பந்தியில் ஒக்காந்துண்டு சாப்பிடவும் 'அலவ்' பண்ணவேண்டாம். தனியா ஒக்காந்துண்டு தின்னட்டும்" என்று சொல்லி, அங்கிருந்து புறப்பட்டு விட்டார்.

அவ்வாறே மூன்று நான் போயிற்று. ஸினிமா மோஉறிகளால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. தவற்றை மன்னித்து மடத்துப் பணியை மீண்டும் தங்களுக்குத் தருமாறு மானேஜரிடம் மிகவும் மன்றாடினார்கள்.

மனமிளகிய மானேஜர், "உத்தரவு பண்ணினது பெரியவா. அதனால ஒங்களுக்காக அவாகிட்டச்

@Page 63

சொல்லிப் பாக்கறேன்" என்று கூறி, அவ்வாறே அந்த யஜமானரிடம் சென்றார்.

"என்னவோ பாவம், பசங்கள்! பாஷை தெரியாத சீமைல ரொம்ப நாளா

ஒழைச்சிண்டிருக்குகளா ? தமிழ் டாக்கின்னவொடனே, தபபுத்தான்னாலும் ஒரு சபலம் தட்டி பாக்கப் போயிடுத்துகள். கார்யத்தை, அதுவும் ஸ்வாமி பாராவைவே விட்டுட்டுப் போனது ஸரியேயில்லைதான். ஆனா ரொம்ப அழறதுகள். தண்டனையும் மூணு நா குடுத்தாச்சு. ஏதானும் 'ஃபைன்' வேணா போட்டுட்டு..." என்று மானேஜர் வெகுவாகவே பரிந்துரைத்தார்.

பெரியவாள் குறுஞ்சிரிப்புடன், "நன்னா வக்காலத்து வாங்கிண்டு பேசிட்டே! ஸரி ஸரி, அதுகளை மறுபடி கார்யத்திலே விடு, பந்திக்கும் 'அலவ்' பண்ணு. ஃபைன் ஒண்ணும் வேண்டாம். ஃபைன் கட்டறதுக்காக எவன் பர்ஸையாவது அபேஸ் பண்ணப் போறதுகள்!" என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தார்.

அவர் அனுப்பி வைத்ததன் மீது அக் குற்றவாளிகளே ஸ்ரீசரணரிடம் வந்து மன்னிப்புக் கேட்டு கொண்டார்கள்.

"மன்னிக்கறது பெரிசில்லை. ஆனா நீங்களும் யோஜிச்சுப் பாக்கணும். ஸ்வாமியை பாராவை விட்டுட்டு, கொள்ளை போனாலும் போகட்டும்னு விட்டுட்டு, ஸினிமா போனது கொஞ்சமாவது ஸரியா ?" என்று ஸ்ரீசரணர் அவர்களைக் கேட்டார்.

"தப்புத்தான். நாங்களும் மயங்கிண்டுதான் நின்னோம். பில்வம் மாமாதான், 'நான் பாரா இருக்கேன். நீங்க போய்ட்டு வாங்கோ'ன்னு அனுப்பிச்சார்" என்று அவர்கள் நடந்ததைக் கூறினார்கள். ப்ரஸாதம் பெற்றுக் கொண்டு வேலைக்குத் திரும்பினார்கள்.

பெரியவாள் பில்வம் வைத்தாவை வரவழைத்தார். காரமாகவே அவரிடம் பேசினார். "பல தப்புக் பண்ணிப்

@Page 64

பிட்டே! அந்தப் பசங்க 'ட்யூட்டி'யைக் கெடுத்து, அவாளுக்கு தைர்யம் குடுத்து, ஸினிமாவுக்கு அனுப்பு வெச்சிருக்கே! அப்புறம் ஏதோ அவாளே போய்ட்ட மாதிரியும், நீயாவே பாராவை இழுத்துப் போட்டுண்டதாவும் எங்கிட்ட பொய் சொன்னே! ஒரு பக்கம் அவாளைத் தூண்டிக் குடுத்துட்டு இன்னொரு பக்கம் அவாளைப் பத்தி எங்கிட்ட 'ரிபோர்டு'ம் குடுத்தே! பாராவையும் ஸரியாப் பண்ணாமத் தூங்கிவேறே போய்ட்டே! அவாளுக்கும் நம்பிக்கை த்ரோஉறம், மடத்துக்கும் நம்பிக்கை த்ரோஉறம் பண்ணிட்டே! போ, போ!" என்றார்.

வைத்தா முறைத்துக் கொண்டு போயே போய்விட்டார், மடத்தை விட்டு,

எத்தனையோ நூறு கல்கள் அப்பாலிருந்த தம் ஊருக்கு!

இல்லை, போயே போய் விடவில்லை! சிறிது காலத்திற்குப் பின் பெரியவாள் பணி, வில்வப் பணி இல்லாமல் அவரால் இருக்க முடியவில்லை. நடுக்கடலில் பாய் மரத்திலிருந்து பறந்து சென்ற பட்சி இறக்கை வலிக்கப் பறந்த பின்பு குந்த ஓர் ஆதாரமும் காணாமல் பாய்மரத்துக்கே திரும்பப் பாய்வது போல ஸ்ரீ சரணரிடமே திரும்பி வந்து சரணத்தில் விழுந்தார்.

மன்னிப்பு மன்னரும் அவருக்குக் கைங்கர்யஸ்ரீயை மீண்டும் வழங்கினார்.

இங்கு நாம் கண்ட இரு நிகழ்ச்சிகளில், ஸ்வாமி நகை களவாடியவரிடம் பெரியவாள் காட்டிய காருண்யம், ஸினிமா சம்பவத்தில் முதலில் பாராப் பசங்களிடமும் பிறகு பில்வம் வைத்தாவிடமும் காட்டிய காடின்யம் – ஒன்றுக்கொன்று மலைக்கும் மடுவுக்குமாக இருப்பதாகத் தோன்றலாம். ஆயின் ஸமதர்சனம் என்பதன் எல்லை நிலமேயான மெய்ஞ்ஞானியர் வரிசையைச் சேர்ந்த அவர் ஏற்றத்தாழ்வு மயமேயான நமது விவகார உலகில் செயற்

@Page 65

பட்டபோது ஒவ்வொருவரின் பூர்வ ஸம்ஸ்காரம், நிகழ்காலப் பக்குவ நிலை, எதிர்காலப் போக்கு முறை ஆகியவற்றைத் தமது உட்சமநிலை குலையாமலே கண்டதால்தான் அவற்றை அநுசரித்தே, அந்தந்த நபரின் பரிணாமத்திற்கு அநுகூலமாக வெவ்வேறு விதமாக அவர்களை நடத்தியது.

இறையவதாரத்தின் தலையாய லக்ஷணம், நலிவுற்ற வேத தர்மத்திற்கு வலிவூட்டுவதுதான் எனப் பெரியோர் கூறுவர். வேத அத்யயன – அநுஷ்டானங்கள் இந்நாட்டிலிருந்து அடியோடு அகன்றுவிடக் கூடிய ஆபத்துச் சூழலில் பெரியவாளது அவதாரம் நிகழ்ந்ததோ, குற்றுயிராயிருந்த மறைப் பயிற்சி வழக்கு இன்றுன்ன அளவுக்கேனும் புத்துயிர் பெற்றதோ ? வேதாப்யாஸ வளர்ச்சிக்காகத்தான் அவர் இதயத்தைக் கொடுத்து அல்லும் பகலும் எண்பதாண்டுகளுக்கு மேல் எத்தனை நூதன நூதனத் திட்டங்கள் போஜராஜனின் வண்மையுடன் தீட்டி, இம் மாபெரும் உபகண்டம் முழுதிலும் ஆங்காங்கு அவை உயிர்ப்புடன் இயங்கிவரச் செய்து விட்டார் ? காலம் வகுக்கவொண்ணாமல் யுகாந்தரமாக இங்கு நிலவி வந்த வேத அத்யயனத்தை இக் கலியின் கடும் பாதிப்பையும் மீறி எதிர்காலத்துக்குப் காத்துக் கொடுக்கும் ஸநாதன தர்மக் காவல் வீரர்களாகவே அவர் இன்று மறை பயிலும்

மாணாக்கரை மதித்துப் போற்றினார். அவர்களிடம் அவருக்கிருந்த அலாதியான இதய நேசம்! வைராக்ய பர்வதமான அவரது நேசம் இங்கு பாசமாகவே ஆகிவிட்டது என்று கூடச் சொல்லலாம்! அவர்களோடு அப்படி அவர் தம்மை இழைத்துக் கொண்டிருந்தார்.

அவர் ஆஸ்தானம் கொண்டிருந்த தேனம்பாக்கம் சிவாஸ்தானத்தில் அன்று இளங்காலை ஒரே பரபரப்பு, பதைபதைப்பு என்றே சொல்லலாம்.

@Page 66

உடனிருந்தோர் உறக்கம் கலைந்து பார்க்கும்போது பெரியவாளைக் காணோம்! சிவாஸ்தான ஆலயச் சூழலில் முழுதும் தேடிப் பார்த்தும் காண முடியவில்லை. பரபரப்பும் பதைபதைப்பும் ஏற்படாதிருக்குமா ?

அடியார்கள் சுற்றுப் புறம், அதைக் கடந்தும் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டே போனார்கள். முடிவாக, அங்கு ஓடிய சிற்றாற்றின் கரையில்... என்ன கொடூரம்!

முட்புதர்கள் மண்டிக் கிடக்கும் ஓரிடத்தில் ஸ்ரீசரணர் சுருண்டு கிடக்கிறார்!

"அவராக வந்து இந்த முள்ளுப்படுக்கை உவந்தாரா, அல்லது..?"– எண்ணாததெல்லாம் எண்ணி அடியர் கணம் அருகு நெருங்க, அவர் பளிச்சென எழுந்தமர்கிறார். அந்த மட்டும் வயிற்றில் பால் வார்த்து விட்டார். ஆயினும் திருமேனியில் அப்பினாற்போல முள் அங்கி பூண்டுள்ள கோலம் அடியார்களின் நெஞ்சில் கூர்ப்பாகத் தைக்கிறது.

வயது முதிர்ந்த ஒரு பக்தர், "ஐயோ, பெரியவா! இதென்ன சோதனை ?" என்று வாய்விட்டு அலறுகிறார்.

பெரியவாள் சொல்கிறார். "இந்த நாள்ல ஜன ஸமூஉறத்தை வசீகரிச்சுப் பிடிச்சுண்டிருக்கிறதா, கை நெறய ஸம்பாதிக்கிறதுக்குத் தினுஸு தினுஸாப் படிப்புகள் இருக்கு. அப்படி இருக்கறப்ப, என் வார்த்தையை மதிச்சு (நெகிழ்ந்த குரலில்) என்னை நம்...பிண்டு சில தாயார்– தோப்பனார்மார் தங்கள் கொழந்தைகளை வருமானம், 'ஆனர்', 'ஃபாஷன்' எதையும் கவனிக்காம, (வேத) பாடசாலைகளுக்கு அனுப்பிண்டிருக்கா. அந்தக் கொழந்தைகளும் ஊர் ஒலகத்துல ஓடனொத்த

கொழந்தைகள் தினம் ஒரு ட்ரெஸ், வேளைக்கு ஒரு ஹோட்டல்னு இருந்துண்டிருக்கிறப்ப, ஒரு மூணரை மொழ சோமனைச்

@Page 67

சுத்திக்கிண்டு, போடற உண்டைக் கட்டியைத் தின்னுக்கிண்டு, வெளில தலை காட்டினாலே, 'சிண்டு டோய்!'னு பரிஹாஸத்தை வாங்கிக் கட்டிக்கிண்டு, தொண்டை தண்ணி வந்த ஸந்தை சொல்லிண்டிருக்குகள்..."

ஏதோ ஓரிடத்தில் ஸ்ரீ மடத்தின் ஆதரவில் நடைபெறும் பாடசாலையைக் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்கிறார். "அங்கே கொழந்தைகள் என்னமோ விஷமம் பண்ணிடுத்துகள்–ங்கிறதுக்காகச் சமையக்கார அம்மா புதுத் தொடைப்பத்தால அடிச்சுட்டாளாம். வேதம் படிக்கிற அந்தக் கொழந்தைகளுக்கு எப்படி இருந்திருக்கும்னு கொஞ்சம் தெரிஞ்சுக்கிறதுக்குத்தான்..."

ஸ்ரீ ஸதாசிவம் – எம்.எஸ்.தம்பதியர் ஸ்ரீசரணர் தர்சனத்திற்கு அடிக்கடி சென்று வந்தவர்கள். ஆயினும் அவர்களுடைய முதல் வெளிநாட்டுப் பயணம் முடிந்தபின் சில ஆண்டுகள் அவர்கள் தரிசனத்துக்குச் சென்றதெல்லாம் பெரியவாள் செய்யும் மாலைப் பூஜையை ஒட்டியே இருந்தது. 1966–ல் அவர் காளஹஸ்தியில் பல மாதங்கள் முகாமிட்டிருந்தபோதுதான் ஒருநாள் 'ஃபாரின்–ரிடர்ன்ட்' ஸதாசிவம் முதன் முறையாக காலைப் பூஜைக்கு இருக்க முடிந்தது.

பூஜை முடிந்து பெரியவாள் அபிஷேக தீர்த்தம் விநியோகிப்பதற்காக வந்தமர்ந்தார்.

தீர்த்தம் பெற விரைந்தேன். ஸதாசிவம் அவர்களும் வந்து சேர்ந்து கொண்டார். அவருக்கு முதலிடம் விட்டுப்பின் நகர்ந்தேன். ஆனாலும் என் மனசுக்குள் குடைச்சல்!

எதையும் தர்மசாஸ்திரத்தின் அடியொற்றியே செய்யும் ஸ்ரீசரணர் கடல் கடந்து சென்று வந்தோருக்கு அபிஷேக தீர்த்தம் வழங்க மாட்டார். அது தெரியாமல் ஸதாசிவம் வந்துவிட்டார். அந்த ஸந்தர்ப்பத்தில் அதை

@Page 68

அவரிடம் நான் தெரிவிப்பது நன்றாயிருக்குமா என்ற எண்ணம் ஒரு பக்கம். அவர்

பெரியவாளிடம் போய் நின்று பெரியவாளின் வாயினாலேயே விஷயமறிந்து பெரும் ஏமாற்றத்தோடு திரும்பினால் அதுவுந்தானே கஷ்டமாயிருக்கும் என்ற எண்ணம் இன்னொரு பக்கம். இப்படி நான் குழம்பிக் கொண்டிருக்கும்போதே ஸதாசிவம் பெரியவாளிடம் கை நீட்டியாச்சு!

எனக்குக் கொஞ்சம் 'திக் திக்'!

பெரியவாள் மந்தஉறாஸத்துடன் சற்று எம்பிக் கையை நீட்டி அங்கே இருந்த ஒரு பிரப்பம் தட்டிலிருந்து ஒரு தேங்காயை எடுத்தார். தாம் அமர்ந்திருந்த இடத்தின் கீழே தரையில் அதை அபாரச் செய்நேர்த்தியுடன் ஒரு தட்டுத் தட்டினார். தேங்காயோடு பிளந்தது.

இளநிரைக் களகள என்று ஸதாசிவத்தின் கை நிறைய வார்த்தார் ஸ்ரீ சரணர்.

அதோடு அவரிடம், "ஈச்வர ஸ்ருஷ்டி பாரு! 'தாளால் உண்ட நீரைத் தலையால்'னு, அதுவும் சாக்கடைத் தண்ணியைத் தாளால எடுத்துண்டு சக்கரைத் தண்ணியாக்கித் தலையால தரும்படியா என்ன ஸ்ருஷ்டி விசித்ரம் பாரு" என்றார்.

இயல்பாக நடக்கும் ஏதோ ஒன்று போலச் சில ஸெகண்டுகளில் எல்லாம் முடிந்தது. 'கிழத்துக்குத்தான் எத்தனை 'ப்ரஸென்ஸ் அப் மைண்ட் ?' என வியந்தேன். 'இளநீரா வார்த்தார் ? கருணாம்ருதமல்லவா வார்த்து விட்டார் ?'

ஸதாசிவத்துக்குப் பெருமையான பெருமை! வெளியில் வந்ததும், "ஸ்பெஷல் ப்ராஸாதம்–னா பெரியவா குடுத்துட்டா ?" என்று சொல்லிச் சொல்லி ஸந்தோஷித்தார்.

@Page 69

கிழவனார் ஸாமர்த்தியந்தான் என்னே ? அவரது ஆசார மரபையும் இம்மி கூட நலிவிக்க மாட்டார்! ஆழிதய அன்பையும் மறுக்க மாட்டார். இரண்டையும் எப்படியோ 'பாலன்ஸ்' பண்ணி விடுவார்! பூஜையின் அபிஷேக தீர்த்தம் கடல் கடந்து சென்று வந்தோருக்குத் தருவதற்கில்லை என்று ஆசார சாஸ்திரம் சொல்கிறதா ? எள் முனை அதிலிருந்து விலக மாட்டார்! தேங்காயின் தீர்த்தம் பற்றி அப்படி எந்த விதியுமில்லையே! அன்பையே அந்த ரூபத்தில் உருக்கிப் பெருக்கி அடியாருக்கு வழங்கி விடுவார்!

ஸ்ரீசரணர்கள் காஞ்சி வியாஸச்ராந்தலயேச்வரர் ஆலயத்தில் தரிசனம் கொடுத்து வந்த காலம். ஒருநாள் உணர்ச்சிப் பெருக்கை உடலெல்லாம் தேக்கிய ஓர் ஆந்திர தம்பதி ஒரு பெண் குழந்தையுடன் வந்தார்கள். தம்பதியில் ஸதியாக இருந்த பெண்மணி புகழ்பெற்ற பத்திரிகையாளரான 'ஆந்திரப்ரபா' ஆசிரியரும், காந்திஜியிடம் 'நெருக்கம்' என்று சொல்லுமளவுக்குப் பழக்கம் கொண்டவருமான நீலம் ராஜு வேங்கடசேஷய்யாவின் மகளார். தேர்ந்த காந்தீயவாதியாக இருந்த நீலம் ராஜு பின்னாளில் பெரியவாளின் பரம பக்தரானார். அவர் குடும்பம் முழுதும் பெரியவாள் பக்தியில் முங்கித் திளைத்தது.

அன்று அந்த அம்மணியும் அவரது பதியும் திருச்சந்நிதியில் தங்கள் உணர்ச்சியை, அதற்குக் காரணமான நிகழ்ச்சியை உரையாக்கிக் கொட்டினர்.

அவர்கள் வசித்தது லண்டனில். அங்கிருந்து அவர்கள் வேறேதோ தேசத்திற்குப் பறந்து கொண்டிருந்தபோது விமானத்தில் பெரியதொரு கோளாறு ஏற்பட்டது. 'ஸேஃப் லாண்டிங்'குக்கு வாய்ப்பேயில்லை என்பது போன்ற ஆபத்து நிலை என்று விமான ஓட்டிகள் அறிவித்து

@Page 70

விட்டனர். பிரயாணிகளின் மனநிலையைச் சொல்ல வேண்டுமா ?

இத் தம்பதியின் மனம் பெரியவாளிடந்தான் ஓடி, அதைக் கெட்டியாகக் கட்டிப் பிடித்து ஆபத்து நிவாரணம் கோரியது. அவர்களுக்கு மஉறானின் காப்பில் இருந்த நம்பிக்கையுறுதி காரணமாக, அஞ்சிக் கொண்டிருந்த மற்ற பயணிகளுக்கும் தங்களது இந்திய தேசத்திலுள்ள 'ஸேஜ் ஆஃப் காஞ்சி'யைத் தெய்வத்தின் அவதாரமாகவே வர்ணித்து, ஆபத்பாந்தவரான அவரை வேண்டினால் விபத்து ஓடிப் போய்விடும் என்று தைரியமூட்டினர்.

உயிராபத்து என்றால் உய்வுக்கு எதைத்தான் பிடித்துக் கொள்ள மாட்டார்கள் ? விமானமே காஞ்சி முனிவரைப் பிரார்த்திக்கும் தியான கூடமாகிவிட்டது!

சிறிதுபோதில் அதுவரை விமான இயக்குநர்களின் முயற்சிகளுக்கு வளைந்து கொடுக்காத கருவிகள் அதிசயமாக ஒத்துழைக்கலாயின! 'மிராகிள்' என்று அவர்கள் வியக்குமாறு விபத்து விலகி விமானம் சொஸ்தமாக நிலத்தில் இறங்கியது!

சக பயணிகள் யாவரும் நமது தம்பதியரைச் சூழ்ந்து கொண்டு வாழ்த்தினர்.

தம்பதியர் பெரியவாளுக்குக் கடிதம் எழுதினாலோ, அல்லது அடுத்த முறை அவரைக் காணும் போதோ தங்கள் எல்லாருடைய இதயபூர்வமான நன்றி நமஸ்காரங்களை அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர்.

தம்பதியோ உடனே இந்தியாவுக்குப் பறந்துவிட வேண்டும் ; உயிர் காத்த மனித தெய்வத்துக்குப் பாத பூஜை செய்ய வேண்டும் ; அப்புறந்தான் உணவருந்த வேண்டுமென்று பிரதிக்ஞை செய்து கொண்டனர்.

@Page 71

அப்படித்தான் இப்போது ஸ்ரீ சரணரின் சரணார விந்தத்துக்குப் பாதபூஜை செய்யப் புஷ்பங்களும், ஸ்வர்ண புஷ்பங்களும் எடுத்துக் கொண்டு வந்திருக்கின்றனர்.

பெரியவாளின் ரக்ஷக சக்தியும் ரக்ஷிக்கப்பட்டவர்களின் உத்தம பக்தியும் உடனிருந்தோரை உருக்கி விட்டது.

பெரியவாள் மிராகிளில் தமக்குச் சம்பந்தமேயில்லாதது போல, ஆனால் மலர்ச்சியுடன் அவர்கள் கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டார். பன்னீராகச் சிறிது நேரம் அவர்களிடம் பேசினார். பிறகு பாரிஷதர்களிடம் கூறித் தமது பாதுகைகளைத் தருவித்தார்.

தம்பதியின் பெண் குழந்தையை அருகழைத்தார். அதன் பெற்றோர் கொண்டு வந்திருந்த புஷ்பம், ஸ்வர்ண புஷ்பம் யாவற்றையும் அதன் புஷ்பக் கையாலேயே எடுத்து எடுத்துப் பாதுகைக்கு அர்ச்சனையாகப் போடச் சொன்னார்.

குழந்தை ஆசை ஆசையாகப் பாத பூஜை செய்தது. பெற்றோர் ஆனந்தத்துடன் அதைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

ஸ்ரீசரணர் அவர்களை நோக்கி, "நீங்கள் இருவரும் சேர்ந்து இந்தக் குழந்தை. இது பண்ணும் பூஜை நீங்களே செய்வதுதான் அதோடு உங்கள் கையால் பண்ணுவதைவிட இது குட்டிக் கையால் பண்ணும்போது நிறைய அர்ச்சனை, நிறைய நாழி நடக்கும்" என்று முகமெலாம் நகையாகத் தெலுங்கு மொழியில் கூறினார்.

அவர்களது ஆனந்தம் அப்போது ஆராத ஆனந்தமாயிற்று பூஜை முடிந்தது.

ஸ்ரீசரணர் அவர்களை அழைத்துச் சென்று வயிறார போஜனம் செய்விக்குமாறு பாரிஷதர் சிலரிடம் பணித்தார்.

@Page 72

அவர்கள் சென்றபின் உடனிருந்தோரிடம் சொல்வார் : "இந்தப் புண்ய பாரத தேசத்தில் பிறந்த ஒருவர் அந்நிய தேசம் போய் நம்முடைய ஆசாரங்களில்லாத ஜனங்களுடன் பழகி விட்டுத் திரும்பி வரும்போது அங்கே என்ன அநாசாரம் நடந்திருக்குமோ என்கிறதால் அவர்களை ரொம்பவும் சாஸ்த்ரோக்தமான கர்மாக்களில் அநுமதிப்பதில்லை. அதனால் நீலம் ராஜுவுடைய பெண் – மாப்பிள்ளை பாத பூஜை செய்கிறதற்கில்லை. சாஸ்த்ரிகளை வைத்துக் கொண்டு 'ஆசார்ய முகேன' என்று அவரிடம் அவர்கள் புஷ்பம் முதலானதைக் கொடுத்து அவர் கையால் பூஜை பண்ணியிருக்கலாம்தான்! ஆனால் அவர்களுக்கிருந்த பக்தி தாபத்தில், நேரே தாங்கள் பூஜை பண்ணாமல் ஒருத்தர் கையில் கொடுத்துப் பண்ணுவது ரொம்பவும் மனஸுக்கு ஏற்காமலே இருக்கும். அதுவே தங்கள் குழந்தை தங்களுக்காகக் பண்ணுகிறது, அதோடு நான் சொல்லிப் பண்ணுகிறது என்கிறபோது தாங்களே பண்ணுவதை விடவும் அவர்களுக்கு ஸந்துஷ்டியாயிருக்கும்.

"கடல் கடந்த தோஷம் குழந்தைக்கும் தானே இருக்கிறது என்று தோன்றலாம். அப்படியில்லை. அது புண்ய பாரத தேசத்திலிருந்து வேறே ஆசாரமுள்ள வெளியிடத்துக்குப் போகவில்லை. இந்தக் குழந்தை பிறந்ததே இங்க்லாண்டில்தான். அங்கே பிறந்த குழந்தை இந்தப் புண்ய தேசத்துக்கு வந்திருக்கிறது. அதோடு குழந்தைப் பிராயம் என்கிறதாலும் ஒரு பரிசுத்தி. அதனால்தான் சாஸ்த்ரத்துக்கு வித்யாஸமாகவும் பண்ணவேண்டாம், நல்ல பக்தி மனஸுக்காரர்களின் தாபத்தை சமனம் செய்யாமலும் இருக்க வேண்டாம் என்று அந்தக் குழந்தையை விட்டுப் பாத பூஜை பண்ணச் சொன்னது."

@Page 73

அபிஷேக தீர்த்தத்திற்குப் பதில் இளநீர் கொடுத்த அதே 'ஸாமர்த்தியம்'தானே இங்கேயும் போசுகிறது ? மூளையின் ஸாமர்த்தியத்துடன் இதயத்தின் ஒட்டுதலையும் ஒட்டிய இந்த 'யுனீக்'ஸாமர்த்தியத்தை என் சொல்ல ?

இடம் : ரிஷிவந்தியம் என்ற பெயரில் தமிழகத்திலுள்ள சில கிராமங்களில் தஞ்சை மாவட்ட ரிஷிவந்தியம் ; அக்கிராம எல்லையில் தனித்து உள்ள ஒரு பழைய வீடு. காலம் : 1930களில் ஒரு வைகறை வேளைக்குச் சிறிது முன்னர்.

"எங்கே அவன் ? எங்கே அவன் ?" என்று வாய்விட்டுக் கோபமாகச் சொல்லிக் கொண்டு ஓர் அந்தண விதவையம்மாள் தனக்கு இடது பக்கம் கண் தெரிந்த வரையில் பார்வையைச் செலுத்துகிறாள். (வலப்பக்கத்தில் கிராமம் முடிந்து விடுகிறது.)

உள்ளே சென்றவள் மறுபடி வெளியே வந்து சாணி தெளிக்கிறாள். கோமய ஜலம் நிலத்தில் தொப்புத் தொப்பு என்று விழும் ஓசையையும் மீறிக் கொண்டு பாட்டியம்மை தனக்குத் தானே பொரிந்து தள்ளிக் கொள்ளும் கோபச் சொற்கள் தொப்புத் தொப்பென்று விழுகின்றன.

"கட்டேல போறவன்! இப்படியா ஒரு பால்காரன் வாய்ப்பான் ? கெழவி, வாசக் கதவைத் தெறந்து வச்சவ, ஏதோ சித்தெ கண்ணசந்துட்டேன்னா நாலு தரம் கையைத் தட்டிக் கூப்பிட்டு எழுப்ப மாட்டான் ? என்ன திமிரு ? அவனே ஸர்வ ஸொஸந்திரமா ஆத்துக்குள்ள வந்து அடுக்களை வாசப்படி கிட்ட பாத்திரத்துல பாலை விட்டுட்டுப் போயிருக்கானே! கட்...டேல போக! எங்கேயோ போய்ட்டானே அதுக்குள்ள!"

"எங்கேயும் போகலை. பாட்டீ! இங்கேதான் இருக்கான்!" என்று சொல்லிக் கொண்டே அப்போது

@Page 74

பாட்டியம்மாளின் முன் போய் நின்றது – ஸாக்ஷாத் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வரி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்!

பாட்டியம்மை ஆடிப்போய் விட்டாள் ஆடி! அவளுக்குக் கையும் வரவில்லை, காலும் வரவில்லை, வாயும் வரவில்லை. வாயடைத்து நின்றாள். 'பெரியவாளா ? நிஜமாகவே பெரியவாள்தானா ? விடிய விடியத் தன் பொத்தல் குடிசை வாசலிலா ? அதோடு என்ன விபரீதம் ? 'க–போனவ'னாகத் தம்மையே சொல்லிக் கொள்கிறாரே! மூளை கெட்ட பாவி, மஹா அபசாரமா ஏதோ பண்ணிப்பிட்டேனா ? என்ன ?'

பதைபதைத்த பாட்டிக்கு அபயம் தரும்போதே ஸ்ரீசரணரின் திவ்ய நேத்ரங்களில் ஒரு குறும்புக் குறுகுறுப்பு! உறிதமாகச் சொல்வார் : "பயப்படாதே பாட்டீ! பால்காரன் கூப்பிட்டுக் கூப்பிட்டுத்தான் பார்த்தான்! நீ நன்னாத் தூங்கிப்பிட்டே! எழுந்தே வரலை. ஓனக்காக ஒன் மாதிரி வேஷம் போட்டுக்கிண்டு நான்தான் பாலை வாங்கி உள்ளே வெச்சேன். அவன் ஒண்ணும் தப்புப் பண்ணிடலை. நீயும் ஒண்ணும் தப்புப் பண்ணல்லை. நான்தான் திருட்டுத்தனம் பண்ணியிருக்கேன்!"

நடந்தது இதுதான். கிராமம் கிராமமாக ஸஞ்சரித்து வந்த பெரியவாள் முதல் நாள் இரவில் மேனாவில் ரிஷிவந்தியம் பக்கமாக வந்திருக்கிறார். பல்லக்குத் தூக்கும் போயிக்கள் நெடுநேரம் சுமந்து வந்து விட்டதால், இரவு இரண்டாம் ஜாமமாயிருக்கலாம், அப்போது அவர்களைக் கிராம வெளி எல்லையிலேயே ஓரமாக ஒரு மரத்தடியில் 'ஸவாரி கட்ட'ச் சொல்லிவிட்டு (அதாவது மேனாவை இறக்கி வைக்கச் சொல்லிவிட்டு) உறங்கப் போகுமாறு ஸ்ரீசரணர் பணித்தார். தாமும் வழக்கம் போலவே

@Page 75

மேனாவுக்குள் முடங்கிக் கொண்டார். பாட்டியம்மாளின் வீட்டுக்கு வலப்புறத்தில் அம் மரத்தடி இருந்தது.

விடிவதற்கு முஉறூர்த்த காலம் முன்பு பாட்டியம்மை வாசற்கதவின் பழைய தாழ்ப்பாளைத் திறக்கும் 'கிறீச் கிறீச்' கேட்டது. இரவு மூன்று – மூன்றரைக்கே துயிலெழுந்துவிடும் பெரியவாள்தான் அதை மேனாவிலிருந்தே கேட்டுக் கொண்டது. அம்மையார் வாசலில் வந்து எட்டிப் பார்த்து விட்டுப் பால்காரன் வராததால், தனக்குத்தானே பேசிக்கொள்ளும் சுபாவப்படி அவனுக்கு அஷ்டோத்தர சத அர்ச்சனை பாடிவிட்டு உள்ளே போனாள். அடுத்து வாசற்கதவின் 'கிறீச்' எழாததை, அதாவது பாட்டியம்மை, கதவைச் சாத்தவில்லை என்பதைக் கவனம் கொண்டார், எந்தச் சிறிய விஷயத்தையும் கவனிக்கத் தவறாத மேனா மேலவர். வீட்டின் பின்புறத்திலிருந்து, நிலத்தோடு பதிந்துவிட்ட உளுத்த கதவைத் திறப்பதன் 'மதுரஸ்வர'ங்களை அடுத்தாற்போல் ஸுப்ரபாத கீதமாக அம் மேலவர் கேட்டுக் கொண்டார். பாட்டியம்மை கொல்லைப்புறம் செல்வதைப் புரிந்து கொண்டார். சில நிமிஷங்கள் ஆகியும் ஸுப்ரபாதம் 'ரிபீட்' ஆகாததால் அந்தக் கதவையும் சாத்தாமலே பாட்டியம்மாள் வீட்டுக்குள் திரும்பியிருக்கிறாள் என்பதையும் கவனம் கொண்டார்.

பின்னரே பால்காரர் வந்தார். பன்முறை குரல் கொடுத்துப் பார்த்தார்.

'பாவம், பாட்டி தூங்கிப் போய்விட்டாள்' என்று ஸ்ரீசரணர் புரிந்துகொண்டார். நெஞ்சில் அருள் அரும்பியது. அதில் குறும்பும் கலந்து குதூஉறலிக்க எண்ணினார். அவருடைய சூழ்ச்சித் திட்டத்திற்கு வசதியாக மேனா மூலையில் வெள்ளைச் சால்வையொன்றிருந்தது. அதை எடுத்துத் தலையோடு கால் நன்றாக முக்காடிட்டுப் போர்த்திக் கொண்டு மேனாவிலிருந்து வெளிவந்தார்.

@Page 76

சற்றுத் தொலைவில் போயிக்கள் நித்ராதேவியின் அணைப்பிலிருந்து வெளிவராது கிடந்ததும் அவருக்கு வசதியாயிற்று. இருள் மூட்டம் விலகாத அவ் வேளையில் அடி மேல் அடி வைத்துப் பாட்டியம்மை வீட்டுப் புறக்கடை வந்து, குட்டிச்சுவர் ஏறிக் குதித்து – ஆம், திட்டு ஸம்ஸ்காரத்தில் மிச்சம் மீதி வைக்காமல்தான்! – உள்ளே தோட்டப்புறததில் இறங்கி, திறந்தேயிருந்த ஸுப்ரபாதக் கதவைத் தாண்டி வீட்டினுள்ளேயே பாதம் பதித்தார். பின்புற ரேழி வழியாக முற்றத்தண்டை வந்தார். பக்கத்தில் அடுக்களை வாசலில் காலிப் பால் பாத்திரமிருந்தது. அதை எடுத்துக் கொண்டு, கூடத்து மூலையில் இரண்டாம் தூக்கம் போட்டுக் கொண்டிருந்த பாட்டியம்மாளை 'கப்சிப்' என்று கடந்து, வஸ்திரத்தை மீண்டும் நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு வெளி வாசலுக்கு வந்தார். பால் பாத்திரத்தைத் திண்ணையில் வைத்தார்.

பாட்டாளிப் பால்காரருக்கு பால் வாங்குபவரை ஏறிட்டுப் பார்க்க எங்கே நேரமிருந்தது ? அந்த இருள் மூட்டத்தில் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஒரு ஏழைப் பாட்டியம்மையாக வேஷமிடுவார் என்று அவர் சொப்பனத்திலேனும் எண்ணியிருப்பாரா என்ன ? கொண்டு வந்திருந்த கைப் பாலைப் பாத்திரத்தில் ஒரே கவிழாகக் கவிழ்த்து விட்டு நடையைக் கட்டினார்.

போலிப் பாட்டியம்மை அடுக்களை வாயிலில் பாலை வைத்து விட்டு மீண்டும் மேனாவுக்கு ஏகி, தமது நகைச்சுவை நாடகத்திற்குப் பாட்டியம்மாள் எப்படி அடுத்த காட்சி அமைக்கப் போகிறாளென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அக்காட்சிதான் பார்த்துவிட்டோமே!

@Page 77

கண்ணன் பாலைத் திருடி விட்டுத் திட்டு வாங்கினான். இவரோ திருட்டுத்தனமாகப் பாலை வாங்கி வைத்துப் பாட்டியம்மைக்குச் சேவை

செய்துவிட்டு, அந்தக் கண்ணன் கூட வாங்காத 'க—போகிற' திட்டை வாங்கிக் கட்டிக் கொண்டு, தானே திட்டுக்கு உரிமையாளன் என்று திட்டியவளிடமும் பெருமையாகத் தெரிவித்துக் கொள்கிறார்

விஷயமறிந்த பாட்டியம்மை விலவிலத்து விட்டான். 'எப்பேர்ப்பட்ட ராஜோபசார – தேவோபசாரத்துடன் வரவேற்கப்பட வேண்டியவர், எளியராகத் தன் வீடு முழுதும் பாதம் பதித்து, ஐயோ, இந்த அவலப் பிண்டத்திற்காக பால் வாங்கி வைத்துப் போயிருக்கிறார்? அந்த தெய்வத்தை என்ன வார்த்தை சொல்லி விட்டோம்?"

மன்னிப்பு கேட்கக் கூட வராமல் உளறிக் கொட்டி, கண்ணீரைக் கொட்டிக் கொண்டு நிற்கும் பாட்டியிடம் ப்ரஸன்னமுகராக ஸ்ரீசரணர், "நீ சொன்னது திட்டேயில்லே! நெஜத்தைத்தான் சொன்னே! நான் போறது கட்டேலதானே? கட்டைப் பல்லாக்குலதானே ஊர் சுத்தறேன்? நடந்து போறச்சேயும் பாக்குறடுக் கட்டையிலேதானே போறேன்?" என்றார். அவளுடைய வசவுக்கும் மெய்ம்மை கூட்டி, பாஷ்யம் செய்தார், வைதாரையும் வாழவைக்கும் வள்ளற்பிரான்.

இன்னொரு பாட்டியம்மை நிகழ்ச்சி. ஆயின் நெகிழ்ச்சியே இறுதி உருவான நிகழ்ச்சி. நிகழ்ந்த இடம் திருச்சி தேசியக்கல்லூரி உயர்நிலைப் பள்ளியா, மதுரை ஸேதுபதி ராஜா உயர்நிலைப் பள்ளியா என்று சரியாக நினைவில்லை.

ஸ்ரீமட முகாமுக்குள்ளே ஏதோ முக்யமான ஆலோசனை நடந்ததை முன்னிட்டு வெளியே துர்சன 'க்யூ'

@Page 78

சிறிது நேரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. க்யூவிலே ஒரு பாட்டியம்மை. பாட்டிப் பாட்டி என்றே சொல்லலாம்! நூற்றுக்கு மேல் பிராயத்தளாயிருக்கலாம். டகாரமாகக் கூனிக் குறுகியவள் ஒரு கழியைப் பிடிக்க மாட்டாமல் பிடித்து நிற்கிறாள். "சங்கரா, என் சங்கரா! ஒன்னையும் பாப்பேனா, பாக்காமயே போயிடுவேனான்னு தவிச்சிண்டிருந்தேன். ஊரைத் தேடி வந்தே! வந்தியேன்னு தர்சனம் பண்ண வந்தேன். நிறுத்தி வெச்சுட்டியேடா, சங்கரா!" என்று ஆவி சோரக் கூறிக் கொண்டிருந்தாள்.

வெளியிலிருந்து முகாம் ஜாகைக்குள் போய்க் கொண்டிருந்தார் ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சாஸ்திரிகள். அவர் மஉறா பெரியவாளின் பூர்வாச்ரமத் தம்பி. அந்த ரக்த

பந்துத்வத்திற்கு ஏற்ப நல்ல இதயக் கனிவு பெற்றவர். பாட்டியின் தாபக் குரல் கேட்டதும் நடையை விரைவு படுத்தி உள்ளே சென்றார். முக்யமான ஆலோசனையிலிருந்த ஸ்ரீசரணரிடம், "வெளியிலே ஒரு பாட்டி, நூறோ, நூத்திருபதோ, என்ன வயஸிருக்குமா, பெரிவா தர்சனத்துக்காகத் தவிச்சுண்டு நிக்கறா!" என்றார்.

அவர் சொல்லி முடித்துக் கூட இருக்க மாட்டார், பெரியவாள் புறப்பட்டு விட்டார், புயலாக!

"நிறுத்தி வெச்சுட்டியேடா, சங்கரா!" – நிறுத்தாமல் சொல்லிக் கொண்டிருந்த பாட்டியிடம் சென்று அணுக்கத்திலும் அணுக்கமாக நின்று, "பாட்டீ! இதோ ஒன் சங்கரன் வந்துட்டேன், பாரு! நீ வந்திருக்கே–ன்னு தெரியாம உள்ளே கார்யமா இருந்துட்டேன். தெரிஞ்சவொடனேயே ஓடி வந்திருக்கேன்" என அன்பின் ஸார ஸாரமாக அமுத மொழி கூறினார் அருளாளர்.

"வந்துட்டியா, சங்கரா!" என்று அவர் கைகளைப் பாட்டி இறுகப் பிடித்துக் கொண்டு விட்டாள்! அவரது



பதின்மூன்றாம் பிராயத்திற்கு முன் தாய் மஉறாலக்ஷ்மியம்மாள் பிடித்த கைகளை சுமார் 55 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றுதான் இன்னொருவர் பிடித்தது!

முகத்தைத் தூக்கி ஸ்ரீசரணரின் திருமுகம் கண்ட விருத்தாம்பிகை, "எனக்கோசரம் நீ ஓடோடி வந்து எதிர்க்கே நின்னும் இந்தக் கண்ணு மங்கல்ல தெளிவாத் தெரியலையே! என்னப்பா, நீ தான் நல்ல கண்ணைக் குடுத்துக் காட்டிச தரணும்" என்றாள்.

அது நல்ல வெயிலடித்த சமயம். ஆனாலும் க்யூ வரிசைக்காரர்களுக்கு மேலே கூரை அமைக்கப்பட்டிருந்தது. பக்த பராதீனர் சட்டென்று அக்கூரைக்கு வெளியே துள்ளி சுடுவெயிலில் நின்றார். பாதுகை அணியாத பாதத்துடன்!

"இப்பத் தெரியறதோன்னா பாட்டீ ?" என்றார்.

"நன்னாத் தெரியறது, என்னப்பா, நன்னாத் தெரியறது!" என்று பாட்டி கன்னத்தில் படபடவென்று போட்டுக் கொண்டாள்.

பெரியவாள் தன் முகத்தை வெயில் படுமாறு பல கோணங்கள் தூக்கி, தழைத்து, திருப்பியெல்லாம் காட்டி, முழு உடலையே திருப்பி முதுகுப்புற தர்சனமும் தந்தார்.

என்ன சொல்கிறோமென்றே தெரியாமல் உணர்ச்சிப் பெருக்கில் மூதாட்டி குழறிக் குழறி ஏதோ சொல்லி அழுது ஆனந்தித்தாள்.

ஸ்ரீசரணர் மீண்டும் அவளை நெருங்கி வந்து, "நன்னாப் பாத்துட்டியா பாட்டி! நான் போலாமா ?" என்றார்.

"பாத்துண்டேம்பா, பாத்துண்டேன். இந்த அநாமதேயத்துக்கும் கருணாமூர்த்தி, ஒன் காட்சி குடுத்திட்டே. ஒன்னைப் பாக்கணும், பாக்கணும்னுதான் உசிரை

@Page 80

வெச்சிண்டிருந்தேன். பாத்துட்டேன். என்னை எடுத்துக்கோ, அப்பா, என்னை எடுத்துக்கோ!" என வேண்டினாள் பரம பக்தை.

"பாட்டீ! அதுக்கான ஸமயம் வரச்சே எடுத்துக்கலாம். இப்ப ஒன்னை நீ இருக்கற எடத்துல கொண்டு விடச்சொல்றேன். போய் ஸ்வாமி ஸ்மரணையாவே இருந்துண்டிரு. மறுபடி என்னைப் பாக்கணும்னு ஓடிவராதே! நான் ஒன்னை விட்டு எங்கேயும் போகாம எப்பவும் ஒன் கூடவே தான் இருந்திண்டிருப்பேன்!" என்று வாக்குதத்தம் தந்தார், க்ருபா வர்ஷர்.

தமது அடக்க குணத்தினால் பக்தர்களுக்கு அபயமளிக்கும் போதும் அடக்கமாகவே வார்த்தைகளை உபயோகிக்கும் ஸ்ரீசரணரிடம் இப்பேர்ப்பட்டதொரு வாக்கு பெற்ற பாட்டியம்மையின் பாக்யத்திற்கு ஈடேது ?

வைத்யநாதனாக அவர் செய்துள்ள அருள் லீலைகள் அனந்தம். அதுவும் ஒரே அச்சாக இல்லாமல் பல தினுசுகளில் செய்திருக்கிறார், கவியுள்ள அருளாளர். ஆயுர்வேத ரீதியிலேயே மருந்து சொல்வது ; அதிலும் மாறுபட்ட அழகோடு, கபத் தொல்லை என்று முறையிடும் இரு பக்தர்களில் ஒருவருக்குத் தேன் போட்டுத் துளஸி கஷாயம், மற்றவருக்கு அரிசித் திப்பிலியுடன் ஆடா தொடைக் கஷாயம்

என்று சொல்வது ; ஆபரேஷன் செய்தேயாக வேண்டும் என்னும் ஆபத்துக் கட்டத்திலிருப்பவருக்கு லேசாக ஒரு 'வேண்டாம்' சொல்லியே மாயமாய் குணப்படுத்துவது ; இன்னொருவருக்கு ஏதோ வழிபாடு, ஹோமம் என்று விதிப்பது ; மருத்துவ சிகித்சையையே தொடரச் செய்து, அதுநாள் வரை பலிக்காத மருந்துகளே அதற்குப் பின் அதிவிரைவுடன் சொஸ்தப்படுத்துமாறு செய்வது – என்றிப்படிப் பல தினுசு.

@Page 81

சில நோயாளிகளிடமோ, "எனக்கும் ஒடம்பு ஸரியாயில்லை" என்று கூறி நிறுத்திக்கொள்வார். அநேகமாக அவர்கள் அந்த நோயுடனேயே, ஆனாலும் அது முற்றி ஆயுளுக்குக் குந்தகம் விளைவிக்காமல், காலம் தள்ளுமாறு இருக்கும்.

அகக் கண்ணைத் திறந்து வைப்பவரே குருநாதர். நம் குருநாதன் புறக் கண்ணை குணப்படுத்திய ஒரு நிகழ்ச்சி பார்ப்போம்.

பாணியம் ஸிமென்ட்ஸைச் சேர்ந்த ப்ரஸாத ராவ் ஒரு நல்ல பக்தர். அவருடைய குழந்தைக்குப் பிறந்த நாள் தொட்டுக் கண்ணிலிருந்து நீர் வந்து கொண்டேயிருந்தது. எத்தனை வைத்தியம் செய்தும் பயனில்லை. குழந்தையை அழைத்து வந்து பெரியவாளிடம் காட்டினார்.

அருள் நயனம் குழந்தையைப் பார்த்தது.

குழந்தையின் கண்களும் பெரியவாளைப் பார்த்தன. ஆம், பார்க்கவே செய்தன, நீர்த்திரையின் இடையீடில்லாமல்!

வற்றாத ஊற்றாக அன்றுவரை பெருகிக் கொண்டிருந்த தாரை அநுக்ரஉற தாரையின் அநாயாஸ ஆற்றலில் கையால் பிடித்து நிறுத்தினாற்போல் நின்றுவிட்டது!

குழந்தையின் ஓயாக் கண்ணீரைக் கண்டு தாங்களும் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்த பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

இதற்குக் காரணமான அந்த அருட்கங்கையில் தீபாவளி ஸ்நானம் திளைத்தாடுவோம்!

@Page 82

# 4

# காஞ்சி சந்திரசேகரரும் சிருங்கேரி சந்திரசேகரரும்*

இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிற்பாடு, அதாவது 1994–ல் வரும் வைசாக (வைகாசி) அநுஷத்தன்றுதான், ஸ்ரீ காஞ்சி மஉறா பெரியவர்களுக்கு நூறாண்டு பூர்த்தியாகிறதெனினும் அவர் தொண்ணூற்றொன்பது தொடங்கியதிலிருந்து சதாப்தி விழாவுக்கு சுருதி சேர்த்துவிட்டோம். இச் சமயத்தில், நிகழ் தீபாவளிக்கு நான்கு நாள் முன்பு, ஆச்வின (ஐப்பசி) மாதம் ஏகாதசி திதியும் மக நக்ஷத்ரமும் கூடிய நன்னாளில் (22.10.1992) நூறாண்டினை வாஸ்தவமாகவே நிறைவு செய்த மற்றொரு மஉறா பெரியவர்களையும் நினைத்து அஞ்ஜலி செலுத்தி இரு மடங்கு புண்யசாலிகளாவோம்.

அந்த மஉறாபெரியவர்களின் துறவறத் திருநாமமும் 'சந்திரசேகர' என்றே இருப்பது ஆச்சரியமான பொருத்தமாகும். காஞ்சி ஸ்ரீ சங்கர மடத்தில் பெரியவர்களான ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வரி ஸ்வாமிகளின் ஞானாட்சி நடந்த காலத்திலேயே நாற்பத்திரண்டு ஆண்டுகள் சிருங்கேரி ஸ்ரீ சங்கர மடத்தில் அதே திவ்வியப் பணி

---

1. 1992 'கல்கி' தீபாவளி மலரில் வெளியான கட்டுரை



ஆற்றிய ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள்தாம் அந்த மஉறா பெரியவர்.

'சூரிய சந்திரர்கள் போல' என்ற பழமொழியை மாற்றி, 'ஏக காலத்தில் இரண்டு சந்திரர்களாக' இவ்விரு வரும் 1912லிருந்து 1954 வரையிலான நாற்பத்திரண்டு ஆண்டுகள் இரு பெரும் குரு பீடங்களில் அதிபர்களாக இருந்து ஞானத்தையும், பக்தியையும், சாஸ்திர தர்மங்களையும் அற்புதமாக உபதேசித்துப் பரப்பி வந்தனர். உபதேசம் என்பது அவ்விருவர் விஷயத்திலுமே வாய்மொழியாக மாத்திரமின்றி உயிர் கொண்ட வாழ்க்கை உதாரணமாகவும் இருந்ததால் அவ் வாய்மொழி, மந்திர சக்தி பொருந்தியதாக இருந்தது ; இருவருமே மஉறா புருஷர்கள், தெய்வ புருஷர்கள் என்ற ஏற்றத்தினைப் பெற்றனர்.

பாபம் புரிந்து, சாபம் பெற்றுத் தேய்ந்த சந்திரன் பரமேசனிடம் மன்னிப்பு வேண்டிப் பணிந்தான். அளப்பருங் கருணையில் ஐயன் அவனை அள்ளியெடுத்துத் தன் முடி மீதே சூடிக்கொண்டு சந்திரசேகரனானான். மன்னிப்பு வேண்டாமலே பாபத்தில் மேன்மேலும் ஆழ்ந்து கொண்டிருக்கும் உலகுக்கு நல்வழி காட்டும் பொறுப்பைத் 'தலை மேல் தாங்கி' நடத்திய இரு ஆசார்ய மூர்த்திகளுக்கு அத் திருப்பெயரே அமைந்தது!

இரு பீடங்களிலும் இருந்துள்ள குரு பரம்பரையினரின் பெயர்களில் சந்திரசேகர நாமம்தான் இரண்டிற்கும் பொதுவாக உள்ள ஒன்றே ஒன்று. மஉறா பெரியவாள் காஞ்சி பீடத்தின் சந்திரசேகரர்களில் ஏழாமவர். அந்த இன்னொரு மஉறா பெரியவர் சிருங்கேரி பீடித்தின் சந்திரசேகரர்களில் மூன்றாமவர், அல்லது நான்காமவர். காஞ்சியில் 61–வது பீடாதிபதியிலிருந்து 67–வது பீடாதிபதி வரை 'மஉறாதேவ', 'சந்திரசேகர' என்ற

@Page 84

இரு பெயர்களே மாறி மாறி வந்திருப்பதால் 68–வது பீடாதிபதியான மஉறா பெரியவாள் சந்திரசேகரரானதில் விசேஷமில்லை. விசேஷம் எதில் என்றால், அவர் பீடமேறி ஐந்தாண்டுகளுக்குப் பிறகு சிருங்கேரி பீடமேறியவர் அப்பீடத்தில் பதினேழு தலைமுறை முந்தி, நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பீடாதிபதியாயிருந்தவர் பெற்றிருந்த சந்திரசேகரத் திருநாமத்தையே தாமும் பெற்றதுதான்! ஒரே லக்ஷயத்தில் பதிந்த இரு கண்களே இவ்விரு பீடங்களும் என்று காட்டவே பராசக்தியின் திட்டத்தில் இவ்வாறு சம கால ஆசார்யர் இருவருக்கு ஒரே பெயர் ஏற்பட்டதோ ?

இன்னொரு ஒற்றுமை கூட! சங்கர மரப்புக்குரிய 'தச நாமம்' எனும் பத்துத் துறவறப் பட்டங்களில் (இந்திர) ஸரஸ்வதி பட்டத்தைக் காஞ்சி பீடத்தினர் தரிக்கிறார்கள். சிருங்கேரியில் பாரதி, தீர்த்த, அரண்ய என்று பல விதப்பட்டங்களைத் தரிக்கிறார்கள். இவற்றில் அந்த இன்னொரு மஉறா பெரியவர் தரித்த பாரதி என்ற பட்டந்தான் ஸரஸ்வதியின் பெயராகவே இருக்கிறது! சாரதா பீடம் என்னும் சிருங்கேரியில் சந்திரசேகர பாரதியும், சாரதா மடம் என்னும் காஞ்சியில் சந்திரசேகர ஸரஸ்வதியும் எழுந்தருளியிருந்தார்கள்.

வெப்பமும், கண் கூசும் ஒளியும் கொண்ட சூரிய தேஜஸைக் குளுமையும் இதவொளியும் கொண்ட நிலவாக மாற்றிப் பொழியும் சந்திரன் போல ஞான அத்வைத ஜ்வாலையை இனிதாக்கி நானிலத்திற்குப் பொழிந்த இரு சந்திரர்கள்! அவர்களது

தபோ காந்தியே தாப சாந்தி தரும் சந்திரிகையாகி அடியார்களை ஆற்றித் தேற்றி உய்வித்தது.

இருவரும் 'ஒப்பில்லாதவர்' எனத் தக்கவர். அப்படிச் சொல்வதாலேயே அவர்கள் பரஸ்பரம் ஒப்பானவர்

@Page 85

என்றும் ஆகி விடுகிறதல்லவா ? அத்வைத ஞானத்தை அநுபவத்தில் பெற்றவர்கள் ; தெய்விகமான அநுக்கிரஉற சக்தி வாய்ந்தவர்கள் ; அரும் புலவர்களையும் அயர வைக்கும் அறிவுக் கூர்மை வாய்ந்தவர்கள் ; அதே போதில் பாமரரையும் ஈர்க்கும் விதத்தில் பரம தத்வங்களை எளிதாக்கி உபதேசிப்பதில் வல்லவர்கள் ; தளும்பாத நிறைகுடமாக அடங்கி, அடக்கப் பெட்டகமாக இருந்தவர்கள் ; உயிர்க்குலம் முழுதிடமும் உள்ளன்பு பூண்டவர்கள் ; முற்றிலும் மாறான திசையில் காலம் கொண்ட (அலங்) கோலத்திலும் தர்ம சாஸ்திர நெறிமுறைகளையே தளராது பின்பற்றி எதிர்நீச்சிட்ட தீரர்கள் ; ஜகத்குருத்வத்தின் ஜாஜ்வல்யத்தில் மங்காதது மட்டுமன்றி, தீராப்பொறியே என்றே அதனைப் பொறுத்துக் கொண்டிருந்த ஸத்தியமான ஸந்நியாஸ சீலர்கள் – என்றிப்படிப் பல அம்சங்களில் இருவரும் 'அன்யோன்ய ஸத்ருசர்' என்பார்களே, அப்படி ஒருவருக்கொருவர் ஒப்பாக இருந்தவர்கள். நுட்பமான நகைச்சுவை, எவருடனும் இதயம் திறந்து கலந்து உரையாடும் ஸௌலப்யத்தில் மற்றவரை நயமாகப் பரிஉறஸித்து, தம்மையுமே பரிஉறஸித்துக் கொள்வது ஆகியவற்றில் கூட இருவரும் ஒரே போல் இருந்திருக்கிறார்கள்!

தமிழ்நாட்டிலுள்ள காஞ்சி மடத் தலைவரின் தாய்மொழி கன்னடம் எனில், கன்னட நாட்டிலுள்ள சிருங்கேரி மடத் தலைவரின் தாய்மொழி தெலுங்காக இருந்ததில் கூட ஒருவிதமான ஒற்றுமை!

ஸ்தூலத்தில் குரு முகமாக உபதேசம் பெறாமல், குருவின் ஸங்கல்பத்தின் மீதே துறவறமும் பீடாதிபத்தியமும் ஏற்றதிலும் அல்லவா இருவருக்கும் ஒற்றுமை! தங்கள் விஷயத்தில் இவ்வாறிருந்தபோதிலும், பொதுவாக

@Page 86

உலகினருக்கு ஸ்தூல குரு மிகவும் தேவையே என்றுணர்ந்து அவ்வாறே வலியுறுத்தியதிலுங் கூட இருவரும் ஒன்றாயிருந்தார்கள்.

ஆயினும் பராசக்தி நாடகத்தில் இரு முக்யமான பாத்திரங்கள் ஒரே அச்சாக இருந்தால் அந்த வித வித ரஸ ரஸிகைக்குச் சரிப்படுமா ? அதனால் சில அம்சங்களில் இவர்களிடையே வேற்றுமையும் விளைவித்து விளையாடினாள். ஒருவிதத்தில் அந்த வேற்றுமையே ஒற்றுமையைத் தூக்கிக் காட்டும் பகைப்புலமாகவும் இருந்து வேற்றுமையில் ஒற்றுமை எனும் தத்துவத்தை நாட்டியது.

(அவர்களிடையே வேற்றுமை என்பதை 'ஒருவருக்கொருவர் மன வேற்றுமை' என்று பொருள் கொண்டோமாயின் அதை விட அபசாரம், அபராதம் இருக்கமுடியாது. இவ் விஷயத்திற்கு அப்புறம் வருவோம்.)

உள்ளாழத்தில் இருவரும் ஒன்றாகவே இருந்தாலும், வெளி உலகினருக்குத் தெரிவது வெளி நடக்கைகள்தாமே ? இவற்றில் ஒரு சந்திரசேகரர்களிடையில் அழுத்தமானதொரு பெரிய மாறுபாடு தெரிந்தது. அது என்ன ? காஞ்சி சந்திரசேகரர் ஆன்ம ஞானியே எனினும் வெளியுலக நடப்புக்களில் வெகு நுண்ணிய கவனம் செலுத்தி, அதனை சாஸ்திரீயமாகத் திருப்பி விடவே முக்யமாகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்து விதவிதமான திட்டங்கள் வகுத்து வந்தவர். சிருங்கேரி சந்திரசேகரரோ உலகை சாஸ்திர வழியில் செலுத்துவதில் அக்கறை பூண்டவர் தாமெனினும் மிகப் பெரும்பாலும் ஏகாந்தத்தில் தனித்திருந்து ஆன்மாநுபவங்களிலேயே, அதன் முடிவான ஏக அநுபூதியிலேயே, திளைத்திருந்தவர்.

இதன் உபாங்கம் என்றே சொல்லக்கூடிய இன்னொரு மாறுபாடு. மனம் வைத்தார் எந்தத்

@Page 87

துறையிலும் தேர்ச்சி பெற வல்லவராயினும் பாரதி ஸ்வாமிகள், ஆன்ம–சமய–தர்ம சாஸ்திரங்கள் தவிர மற்ற விஷயங்களில் தமது அறிவைச் செலுத்த விரும்பாதது மட்டுமின்றி, தமதடியார்களுக்கும் அவ்வித அறிவாராய்ச்சிகளில் விசேஷமாக ஊக்கம் தந்ததில்லை. சமய விஷயமாகவே சரித்திர ரீதியில், இலக்கிய ரீதியில் சர்ச்சைகள் செய்து முடிவு காண முயல்வதற்கோ அடியோடு ஆதரவு தர மறுத்தார். சங்கரர் எந்தக் காலத்தில் இருந்தார், இன்ன இன்ன நூல்கள் அவர் எழுதியவைதானா, வித்யாரண்யருக்கு இரண்டு குருமார் உண்டா என்பது போன்ற கேள்விகள் எழுந்தால், "நாம் ஆத்மாபிவிருத்தி அடைவதற்கும் இந்த விஷயங்களில் எது உண்மை என்று கண்டுபிடிப்பதற்கும் ஏதாவது ஸம்பந்தமுண்டா ?" என்று ஒரே போடாகப் போட்டு முடித்துவிடுவார். காஞ்சிப் பெரியவர்களோ நவீன ஸயன்ஸுகள் உள்பட அறிவுத் துறைகள் அனைத்திலும் ஆழ முழுகி ஆராய்ந்து விதவித முத்தும்

பவளமும் சங்கும் கிளிஞ்சலும் கொணர்ந்து கொடுப்பவர். உண்மை காணும் முனைப்போடு எந்தத் துறையில் தீர்க்கமாக, ஒருமுக ஆராய்ச்சி செய்தாலும் அது அறிவைத் தீட்டித் தீட்டி சுத்தம் செய்து ஒரே உண்மையை நாட வைக்கிற ஆன்மியத்தில் சேர்க்க உதவுமென்பது அவரது கருத்தாகையால் மற்றவர்களது பல்துறை அலசர், ஆராய்ச்சிகளுக்கும் ஊக்கமளிக்கிறார்.

இவற்றைக் குறித்து உலகம் பலவிதமாக விமரிசித்தது. ஜகத்குரு என்ற கடமையைக் காஞ்சியார்தான் செம்மையாக ஆற்றுகிறார் என்றனர் சிலர். அநுபூதிமான், ஜீவன் முக்தர் என்றால் அது சிருங்கேரியார்தான் என்றனர் சிலர். காஞ்சியாரே ஜகத் குருவாகப் பிராபல்யம் பெற்றுவிடுகிறாரே என்று சிருங்கேரியாரையும் அவ்வழியில் திருப்பிவிட முயன்று தோற்றவர்கள்கூட உண்டு! ஞானப்

@Page 88

பிச்சேறி, பக்திப் பிச்சூறி அவர் உலகினருக்குப் புரியாத நிலைகளில் உலாவந்த காலங்களில் அவரைப் பித்தரென்றே கூறியவர்களும் உண்டு. அவ்விருவரோ ஈதொன்றையும் பொருட்படுத்தாமல், தத்தமக்குப் பராசக்தி தந்திருந்த பாத்திரத்தையே பாங்குற நடித்தனர்! நீர் மட்டத்தை நோக்காமல் வானையே நோக்கி வாழும் தாமரை மலர் போல் ஒருவர் இருந்தார் – உலகப் பொறுப்புகள் யாவற்றையும் விஞ்சியெழும் ஆன்ம வேட்கையின் ஆராத சக்திக்கு உதாரணமாயிருந்தார். தாமரை இலைத் தண்ணீர் என்பதற்குச் சான்றாக மற்றவர் இருந்தார் – உத்தம ஞானி உலக நலனையும் பேணி ஆற்றக்கூடிய அனவரத நிஷ்காம்ய கர்மயோக சக்திக்கு உதாரணம் படைத்தார்.

இரு சந்திரசேகரர்களும் அந்தந்த ஸ்ரீ மடங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட குடும்பங்களில் உதித்தவர்கள்.

காஞ்சி மடத்தின் முந்தைய பட்டத்தினர் சிலர் மஉறாபெரியவாளின் குல பூர்விகர்களே ஆவர். அவரது பாட்டனார் காஞ்சி ஸ்ரீமடத்தின் மானேஜராகப் பல்லாண்டுகள் இருந்து அரும்பணி ஆற்றியவர்.

பாரதி ஸ்வாமிகளின் பாட்டனார், தகப்பனார் ஆகியோர் சிருங்கேரி மடத்தில் பண்டிதர்களாக இருந்தவர்கள், அவருக்கு முந்தைய இரு ஆசாரியர்களுக்கு நரஸிம்உற பாரதி, ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்உற பாரதி என்று பெயர் இருந்ததால்தான் அவருக்கே நரஸிம்உறன் என்று இயற்பெயர் இடப்பட்டது.

பிறந்தவுடனேயே அவர் மடத்திற்கு 'ஸ்வீகாரம்' தரப்பட்டாரென்று கூடச் சொல்லலாம். பெற்றோர்களுக்கு அவர் பதிநாலாவது சேய். முன் பிறந்த பதின்மூவரையும் பாலப்

@Page 89

பருவத்திலேயே பறிகொடுத்துப் பரிதவித்த பெற்றோர், தங்களுடைய துரதிருஷ்டம் தீண்டாமல் இம் மகவாவது மடத்தின் குழந்தையாக வாழட்டுமெனக் கருதி அம்மடத்தின் முக்கியப் பொறுப்பாளரான ஏஜெண்ட் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் குழந்தையை ஒப்புக் கொடுத்தனர். ஆகையார் அதிபால்யத்திலேயே அவர் முந்தைய பீடாதிபதிகளான ஸ்ரீ சிவாபிநவ நரஸிம்உற ஸ்வாமிகளின் திருக்கண் பாலிப்பில் வந்து விட்டார்.

பொதுப் பள்ளிக்கூடத்தில் ஒரு சில ஆண்டுகள் படித்து நரஸிம்உறன் முதல் மாணவனாகத் தேர்ச்சி கண்டவுடன் பூர்வாசாரியரின் ஆணைப்படி அவரது உலகியல் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு அவர் மடத்துப் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். நமது மத சாஸ்திரங்களில் அங்கு தேர்ச்சி பெற்றபின் பெங்களூரிலிருந்த மடத்தின் வித்யா சாலையில் பண்டித சிம்மங்களிடம் மேலும் விரிவாகவும் ஆழமாகவும் கற்று வித்வான் ஆனார். அப்போதுதான், 1912–ல், அவர் பீடத்தின் அடுத்த வாரிசாக நியமனம் பெற்றது. இருபது வயதினராக இருந்த அவர் அப்போதே சாஸ்திர தத்வங்கள், ஸமயா நுஷ்டானங்கள் ஆகியவற்றில் சிறப்பான பரிசயம் பெற்றிருந்ததோடு பக்தி, ஞான, வைராக்கியங்களிலும் முதிர்ச்சி பெற்றிருந்தார்.

பிற்காலத்தில் காஞ்சி சந்திரசேகரரான பாலன் ஸ்வாமிநாதனின் தந்தையோ வைதிகரல்ல. லௌகிகமாக உத்தியோகம் வகித்தவர்தாம். எனவே இவர் விசேஷமான சாஸ்திரீய சூழலில் வளர்ந்தவரல்ல. அவர் படித்ததும் நம் எல்லோரையும் போல் லௌகிகமான பள்ளிகளில்தான். பன்னிரண்டு வயதளவில் அவர் முந்தைய காஞ்சி பீடாதிபதிகளின் அசாதாரண அருள் நோக்கினைப் பெற்று, அவர்பால் கொண்ட ஈர்ப்பினால் வீட்டினருக்குத் தெரியாமலே அவரிடம் ஓடியதுண்டு. அப்போதே

@Page 90

பூர்வாசாரியர் இவரைத்தான் தமது வாரிசாக சங்கல்பித்தாரென்றும் நம்பப்படுகிறது. ஆயினும் அடுத்த ஆண்டே அவ்வாசாரியர் மஉறா நிர்வாணம் எய்தி விட, ஸ்ரீ

மடத்திலேயே கைங்கரியம் செய்து வந்தவரும், பூர்ணமாக ரிக்வேத அத்யயனம் செய்தவருமான லக்ஷ்மி நரஸிம்மன் என்ற இளைஞர்தாம் (இவர் ஸ்வாமிநாதனுடைய பெரியம்மாவின் புதல்வர்) அடுத்த பட்டம் பெற்றார். பராசக்தியின் விந்தை லீலையில் இந்தப் புது வாரிசும் ஒரே வாரத்தில் குருநாதர் போன வழியைப் பின்பற்றி விட, பதின்மூன்று வயசுப் பிஞ்சு ஸ்வாமிநாதன் ஆசாரியத்தவிசில் ஆரோஉறணிக்க நேர்ந்தது. வேதமா, சாஸ்திரமா ஏதும் தெரியாத அந்தப் பிஞ்சு, வேதப் பழமாக, சாஸ்திரக்கனியாக சடுதியில் பரிணாமம் பெற்றது கதையிலும் விநோதமான பிரத்தியக்ஷ உண்மை.

இரு சந்திரசேகரர்களுமே முந்தைய பீடாதிபதியின் அந்திம காலத்தில் அருகிலில்லாமல், பிற்பாடே வந்து ஸ்தூலமான குரு தீக்ஷை இன்றி ஆசிரம ஸ்வீகாரம் பெற்றனர். ஸ்தூலத்தில் குருவின் காப்பு இல்லாமலே இருவரும் பரம புருஷார்த்தமான ஆன்ம பூர்ணத்துவம் எய்தியதையும், மடாதிபதி என்ற முறையில் ஸகல மரபுகளையும் காத்து அற்புதமான நிர்வாகத் திறன் காட்டியதையும் என்னென்பது? குருவின் ஸ்தூலமான காப்புக் கவசம் இல்லாததாலேயே கூடுதலான கவனத்தோடு தங்களைத் தாங்களே பார்த்துப் பார்த்துச் செம்மை செய்து கொண்டார்கள். சூக்ஷ்மமான திரு அருள் தங்களில் பாய்ந்து பாலிப்பு அளிப்பதற்காக அவர்கள் செய்த பூர்ண சரணாகதி ஸ்தூல குருவிடம் கூட ஒரு சிஷ்யர் செய்ய முடியுமா என்பது சந்தேகமே!

காஞ்சி சந்திரசேகரர் பீடமேறியதும் முற்றிலும் மாறான ஒரு சூழ்நிலைக்குத் தகுந்த அதிசயப் பரிணாமம்

@Page 91

பெற்றாரெனில் சிருங்கேரி சந்திரசேகரர் விஷயமாகவும் ஓர் அதிசயம் உண்டு. ராஜாங்கமாகவே கொடிகட்டிப் பறந்தது சிருங்கேரி ஸ்ரீமடம். கம்பீர புருஷர்களான முன்னிரு ஆசாரியர்கள் பாரத தேசம் முழுவதிலும் மடத்தின் கீர்த்தியை ஓங்கச் செய்திருந்தார்கள். தர்பார் என்றே பெயர் கொடுத்து ஆட்சி நடத்தும் மாட்சி பொருந்திய அப்படிப்பட்ட ஒரு மடத்தின் சூழலிலே வளர்ந்து பட்டத்திற்கு வந்தவர் அந்த ஜொலிப்பை அதமபக்ஷமாகக் குறைத்துத் தன்னைத் தானே கட்டியாளும் ஏகாந்த உள் வாழ்விலேயே மிகப் பெரும்பாலும் ஒடுங்கியது அதிசயந்தானே? உபதேச ஆற்றலும், நிர்வாகத் திறனும் அபாரமாக இருந்தும் ஒடுங்கினார், ஒதுங்கினார் என்பதைக் கவனிக்க வேண்டும்.

அவருக்குமாகச் சேர்த்து தர்மப் பிரசாரம் செய்யும் சக்தித் தேக்கமாகக் காஞ்சி சந்திரசேகரரை உருவாக்கிய 'மேலிட'த்தின் லீலையே லீலை!

இருவரும் அஸாதாரண வியக்திகள். ஆனால் இருவரையும் சேர்ந்த சிஷ்ய ஜனங்களோ ஸாதாரண வியக்திகள்தானே? அதனால்தான் முன்னே குறிப்பிட்டாற்போல பரஸ்பர மனமாறுபாட்டில் விதவித விமரிசனங்கள் செய்தார்கள். ஆயினும் இருவரது திவ்யப் பிரேம சக்தியின் காரணமாக, மாறுபட்டு நின்றவர்கள் மக்கட் தொகையில் மிகக் குறைவாகவே இருந்தனர். இரு மஉறான்களையும் ஒரே போன்ற பக்தியுடன் வழிபட்டவர்களே அதிகம் இருந்தனர். சநாதன தர்மத்தின் இரு கண்களாகவே இருவரையும் போற்றி ஏனையோருக்கும் எடுத்துரைத்த பெரும்புள்ளிகளான சான்றோர் பலர் உண்டு. உதாரணமாக, தேதியூர் சாஸ்திரிகள், அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள், ஏ.வி.கோபாலாசாரியர் ஆகிய சாஸ்திர விற்பன்னர்களும், கே.எஸ்.ராமஸ்வாமி சாஸ்திரிகள், கே.பாலஸுப்ரமணிய

@Page 92

அய்யர், ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யர் ஆகிய பிரமுகர்களும் இவ்விரு மஉறான்களைச் சற்றும் ஏற்றத்தாழ்வின்றிப் பூஜித்து பூஷிக்குமாறு ஆஸ்திக உலகுக்குக் கூறி வந்திருக்கிறார்கள்.

இவ்விரு மஉறா புருஷரிடை பரஸ்பரம் நிலவிய அன்பும், மதிப்புணர்ச்சியுமோ – அதைப் பரம புனிதமான அமுத காவியமென்று சொல்ல வேண்டும். இரு பீடங்களிலும் மகிமை வாய்ந்த ஆசாரியர்கள் முன் பட்டங்களாக இருந்தபோதிலும் ஏனோ சோதனையாக வேதனையாக இரு தரப்பாரிடையே நல்லுணர்ச்சி இல்லாமலே இருந்தது. அப்படிப்பட்ட சூழலில், இவ்விரு சந்திரசேகரர்களும் தொடக்கத்திலிருந்தே ஒருவர் பெருமையை மற்றவர் உணர்ந்து, அன்புத் தொடர்பில் ஐக்கியப்பட்டிருந்தது அக்கால ஆஸ்திக உலகம் பெற்றிருந்த அரும்பெரும் பாக்கியம்.

பரமஉறம்ஸ ராமகிருஷ்ணர் ஒரு கதை சொல்வார். ஒரு சமயம் சிவனாரும் திருமாலும் சந்தித்து அந்தரங்கமாக அளவளாவிக் கொண்டிருந்தார்களாம். அப்போது வெளியேயிருந்து பயங்கரமான கூச்சலும் கோஷமும் கேட்டதாம். "இதென்னவோ கூச்சர் கேட்கிறதே!" என்று சிவபெருமான் கேட்க, மாயாவிப் பரந்தாமன், "வேறொன்றுமில்லை! வெளியே இருக்கும் என்னுடைய பரிவாரத்தினர் நான்தான் உயர்ந்தவனென்றும், உங்களுடைய பரிவாரத்தினர் நீங்கள் தான் உயர்ந்தவரென்றும் சண்டை பிடித்துக் கொள்கிறார்கள்" என்றானாம்! அப்படிப்பட்ட 'வீர' பக்தர்கள் இப்போதும் இல்லாமலில்லை! ஆயினும் இரு சந்திரசேகரர்களுமோ ஏகமாக

இணைந்த சங்கர நாராயண விக்கிரஉறம் போல் அன்பில் ஒன்றுபட்டுத்தான் இருந்தனர். நேரில் அவர்கள் சந்தியாவிடினும் இதய மட்டத்தில் இணைந்தே இருந்தனர்.

@Page 93

பலவிதங்களில் பிளவுபட்டிருந்த உறிந்து சமுதாயத்தை நாஸ்திகமும், நவீனப் போக்குகளும், நல்லெண்ணத்திலேயே உருவான சீர்திருத்தங்களில் சிலவும் மேலும் நலிவு செய்து வந்த இடர்ப்பாடானதொரு சூழ்நிலையில் பட்டமேறிய இரு பெரியவர்களும் சாஸ்திர வழியில் இச் சமுதாயத்தை ஒரே அன்புக் குடும்பமாகப் பின்னி வைக்க வேண்டியதே தங்களது தலையாய பொறுப்பு எனக் கண்டதால் அதற்கு மைய இருசாக முதலில் தாங்களிருவரும் ஒற்றுமையில் இணைந்து வழிகாட்டினர்.

சமுதாரயத்தின் சாஸ்தீரியமான மேம்பாட்டை சிருங்கேரிப் பெரியவர்களும் முக்கியமாகக் கருதினாரெனினும் ஆத்ம சாந்தம் என்ற காந்தம் அவரை ஏகாந்தத்திற்கே அதிகமாக இழுத்தது. எனவே சமுதாய நலத் திட்டங்கள் தீட்டும் பொறுப்பை காஞ்சிப் பெரியவர்களே அதிகமாக மேற்கொண்டார்.

பெரிய அளவில் எந்தத் திட்டம் வகுத்தாலும், முதற்காரியமாக அது குறித்து சிருங்கேரிப் பெரியவர்களின் கருத்தை அறிந்து வருவதற்குப் பிரதிநிதிகளை அனுப்பி வைப்பது காஞ்சிப் பெரியவர்களின் வழக்கம்.

இவ்வாறு சென்றவர்களில் கே.பாலஸுப்ரமணிய ஐயர், எல்.எஸ்.பார்த்தஸாரதி ஐயர், தற்போது நம்மிடையேயுள்ள அக்னிஉேறாத்ரம் ராமாநுஜ தாதாசாரிய ஸ்வாமிகள் ஆகியோர் ஏறக்குறைய ஒரே குரலில் கூறியுள்ள விவரங்களைக் கேட்டு அகம் குளிரும் பேறு இக் கட்டுரையாளனுக்குக் கிடைத்திருக்கிறது.

சிருங்கேரிப் பெரியவர்கள் வெளியுலகத் தொடர்பேயில்லாமல் அந்தர்முகமாக ஆழ்ந்திருப்பதாகச் செய்தி வரும் சமயங்களிலும் காஞ்சிப் பெரியவர்கள் பிரதி

@Page 94

நிதிகளை அனுப்பி வைத்ததுண்டாம். அவர் ஆணையிடும் போதே அப் பிரதிநிதிகள், "அவரைப் பார்க்கவே முடியாது, ஒரே அந்தர்முகமாக இருக்கிறார் என்கிறார்களே!" என்று இழுப்பார்களாம். மஉறா பெரியவர்களோ, "போய்ப் பாருங்களேன்!" என்று சொல்லி அனுப்பி வைப்பாராம். ஆனால், அவரும் சரியாக அன்றோ, முதல் தினமோ வெளிமுகப்பட்டிருப்பாராம்! இவர்களுக்கு மனமார வரவேற்புக் கூறி அழைத்து வைத்துக் கொள்வாராம்.

"பெரியவா சாதுர்மாஸ்ம் மத்யார்ஜுனத்திலா?" என்பது போல காஞ்சி ஸ்வாமிகள் விஷயமாக இதயமாரக் கேட்டுவிட்டுத்தான் உரையாடலைத் தொடங்குவாராம்.

இவர்கள் தாங்கள் வந்த காரியத்தைச் சொல்லி மஉறா பெரியவாள் எடுத்துக் கொண்டுள்ள பணி பற்றி விவரிக்க, அவர் தமது தேஜோமுக மண்டலம் மேலும் பிரஸன்னமாக, வெகு கவனமாகக் கேட்டுக் கொண்டு, நடுநடுவே ஆமோதன மொழிகளைக் கூறுவாராம்.

முடிவாகச் சொல்வாராம் : "அவாளாலேதான் ஆத்ம நிஷ்டாளாகவும் இருந்து கொண்டு, வெளி லோகத்துக்கும் எதெது எப்படிப் பண்ணணுமோ அப்படிப் பக்குவமாக யோஜனை செய்து, கிரியாம்சையில் நடத்திக் காட்ட முடிகிறது. சாஸ்திரத்தை விட்டே கொடுக்காமல், அதே ஸமயம் நவீனர்களையும் ஆகர்ஷிக்கிற விதத்தில், ஜன ஸமுதாயத்தின் மனஸை ஸூக்ஷ்மமாகப் புரிந்து கொண்டு திட்டங்கள் போடுகிறா. இங்கே (தம்மைக் குறிப்பிட்டுக் கொள்கிறார்). 'ஆசார்ய ஸ்தானம் இருக்கே, அதற்கானபடி லோகத்துக்குச் செய்யணுமே' என்று தெரிந்தாலும், வேறே விதமாகவே போகிறது. தாங்களாகத் தேடிக் கொண்டு வருகிறவர்களுக்கு ஓரளவுக்குச் சொல்வதற்குத்தான் இங்கே முடிகிறது. அவாதான் டேக் கொண்டு போய் நல்லது பண்ணுகிறா, எங்களுக்காகவும் சேர்த்து அவாளே

@Page 95

பண்ணுகிறா. எங்கள் அப்ப்பிராயம் என்னவென்று அவா கேட்கணுமென்றே இல்லை. செய்ய வேண்டியது அவாளுக்கே தெரியும். அதற்குப் பரிபூர்ண ஸம்மதம் தவிர இங்கே சொல்ல வேண்டியது ஒன்றுதான் – க்ருதஜ்ஞதை (நன்றி)!" என்பாராம்.

நிர்மல வானம் போல எப்படி உள்ளம் திறந்து பேசியிருக்கிறார்!

காஞ்சி மடப் பிரதிநிதிகளுக்குச் சிறந்த கௌரவங்களும் உபசரணைகளும் செய்வித்து, தமது பிரதிநிதி ஒருவரோடு அவர்களைத் தமது மடத்தின் ஆதரவிலுள்ள இதர மடங்களுக்கெல்லாம் அனுப்பி வைத்து, அம்மடாதிபதிகள் அனைவருடைய ஒப்புதலையும் ஒத்துழைப்பையும் காஞ்சி பீடாதிபதிகளின் திட்டங்களுக்குப் பெற்றுக் கொடுப்பாராம்.

இவர்கள் மஉறா பெரியவாளிடம் திரும்பி வந்தால் அவர் தாமே தேசு வீசும் திவ்ய மூர்த்தியாகப் பொலிந்து கொண்டு, "அப்படி ஒரு தேஜஸ்வி எங்கேயாவது பார்த்திருக்கேளோ ? அத்தனை தபஸ், நிஷ்டை, உசந்த பாரம்பர்யம் – பூர்வாச்ரம பாரம்பர்யம், ஆச்ரம பாரம்பர்யம் இரண்டுமே!" என்பாராம். (சிருங்கேரிப் பெரியவர்களின் பூர்வாச்ரம பிதா, பாட்டனார் முதலியோரது உயர்வையும், அவருக்கு முந்தைய ஆசார்யர்களின் உயர்வையும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.)

அவரது க்ருதஜ்ஞதையைப் பிரதிநிதிகள் இவருக்குத் தெரிவித்தால் உடனே, "நம்மைக் கார்யம் பண்ண விட்டு விட்டு, அவர் என்ன விருதாவாகவா பொழுது போக்குகிறார் ? நிஷ்டையில்தானே போய்க் கொண்டிருக்கிறார் ? ஒரு ஞானியுடைய 'ரேடியேஷன்' தானாகவே லோகம் பூராவுக்கும் நல்லது பண்ணிக் கொண்டுதான் இருக்கும்.

@Page 96

அதனாலே நாமுந்தான் அவருக்கு க்ருதஜ்ஞதை சொல்லணும்" என்பாராம்.

ஆரம்ப காலத்திலிருந்தே இரு பெரியவர்களும் தத்தம் அணுக்க பக்தர்களிடம் ஐக்கியப் பான்மையை நாட்டி வந்ததற்குச் சான்று பல :

1914–ல் காஞ்சி ஸ்ரீ மடத்தின் பத்திரிகையாக "ஆர்ய தர்மம்" என்ற ஏட்டினை மஉறா பெரியவர்கள் தொடங்கி வைத்தார். சிருங்கேரி ஸ்ரீ மடத்தின் அத்தியந்த அடியாராக இருந்து அவ்வாசாரியரிடமிருந்து 'குருபக்த சிகாமணி'ப் பட்டம் பெற்ற டி.கே.பாலஸுப்ரமணிய அய்யர் ஸ்ரீரங்கத்தில் நடத்தி வந்த வாணி விலாஸ அச்சகமும், 'உறிண்டு மெஸ்ஸேஜ்' ஏடும் அந்த மடத்தின் பணிக்கே அர்ப்பணமானவை. அதே டி.கே.பி. 'ஆர்யதர்ம'த்தின் ஆசிரியர் குழுவிலும் ஒருவராக இருந்தார். மஉறா பெரியவாள் பணிக்கும் எந்தப் பிரசுரத்தையும் உடனே தமது அச்சகத்தின் மூலம் அவர் முடித்துக் கொடுப்பார். 1923–ல் காஞ்சிப் பெரியவர் அகிலாண்டேச்வரிக்குச் செய்த தாடங்கப் பிரதிஷ்டையைப் பற்றி 'உறிண்டு மெஸ்ஸே'ஜில் அவர் பக்கம் பக்கமாக பரவச நடையில் போற்றி எழுதியிருக்கிறார் –

இந்தத் தாடங்கப் பிரதிஷ்டை விஷயமாகவே முந்தைய நூற்றாண்டில் இரு மடத்தாரிடையும் மிக்க மனக்கசப்பளிக்கும் நிகழ்ச்சிகள் ஏற்பட்டுங்கூட என்பது குறிப்பிடத்தக்கது.

1919-ல் வேப்பத்தூர் மஉறா ஜனங்கள் காஞ்சிப் பெரியவாளின் நவராத்ரி பூஜையை எவ்வளவு விமரிசையாக நடத்தினர் என்று அக்காலப் பெரியவர்கள் கூறுவர். ஆனால் அந்த நவராத்ரியை அடுத்து வந்த 'ஆர்ய தர்ம' இதழிலோ மஉறா பெரியவாள் இதுபற்றிக் கட்டுரை வெளியிட அனுமதிக்கவில்லை. சிருங்கேரியில் பாரதி ஸ்வாமிகள் நடத்திய நவராத்ரி குறித்தே ஏழு பக்கங்கள் விரிவாகக் கட்டுரை வெளியிடப் பணித்தார்.

@Page 97

'ஆர்ய தர்ம'த்தின் துந்துபி ஆண்டு (1922) நான்காம் இதழுக்காக எம்.என்.ஸுப்ரமணிய சாஸ்திரி எழுதியிருந்த கட்டுரையில் நான்காண்டுகளாகக் காஞ்சிப் பெரியவாள் கிராமம் தோறும் சென்று வேத நெறிக்குப் புத்துயிரூட்டி வருவதைப் போற்றி எழுதியிருந்தார். அதோடு நில்லாமல் மறைமுகமாக – ஆயினும் வாசகர் யாவரும் ஊகித்து விடும் விதத்தில் – பெயர் குறிப்பிடாமலே சிருங்கேரிப் பெரியவர்கள் – பெயர் குறிப்பிடாமலே சிருங்கேரிப் பெரியவர்கள் இவ்வாறு "லோகத்திற்காகப் பாடுபடுவதாகத் தெரியவில்லை" என்றும், இதே ரீதியில் வேறு சிலவும் எழுதியிருந்தார். இதில் மஉறா பெரியவாளின் தொண்டைக் குறிக்கும் பகுதிகளை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றவரைப் பற்றிய மாற்றுக் கருத்தை நீக்கி விட்டுப் பிரசுரிக்கலாமாவென்று பத்திரிகாசிரியர் பெரியவாளைக் கேட்டார்.

பெரியவாளின் மறுமொழி அவரைத் தூக்கிவாரிப் போட்டது. தமது தொண்டு குறித்த பகுதிகளை நீக்கிவிட்டு, மற்றவர் பற்றிய மாற்றுக் கருத்தை மாத்திரம் பிரசுரிப்பதே சிலாக்யம் என்றாராம் பெரியவாள்!

பேசுவது பெரியவாள்தானா என்று வாயடைத்து நின்ற ஆசிரியரிடம் குறும்பு நகையுடன் குருநாதர் தொடர்ந்தார். "இவர் ஒருத்தர்தான் இப்படி எழுத்தில் அபிப்ராயம் தெரிவித்திருக்கிறாரென்றால் மனஸுக்குள் இதே அபிப்ராயமாக இருக்கிறவர்கள் ரொம்பப் பேர். அதனால் நாம் அந்த அபிப்ராயத்தைப் போட்டு, கூடவே அதற்குப் பதிலும் கொடுத்துவிட வேண்டும்" என்றார்.

என்ன பதில், அதை எப்படிச் சேர்ப்பது என்று தெரியாமல் கட்டுரையை ஆசிரியர் ஆசாரியர்களின் பார்வைக்கே வைத்து விட்டார்.

@Page 98

அதில் கண்ணை ஒட்டிச் சென்ற பெரியவாள், "இவ்விதமே (பெரியவாள் செய்யும் விதமே) ஒவ்வொரு மடாதிபதிகளும் கிளம்பி ஆங்காங்கு கார்யம் செய்ய வாரம்பித்து விட்டால் நமது சீர்திருத்தக்காரப் பெரியவர்கள் இருந்தவிடம் தெரியாமற் பஞ்சாய்ப் பறந்து விடுவார்கள்" என்று மறைமுக விமரிசனம் முடிந்திருந்ததை அடுத்து, "அப்படிக்கு ஈசுவர சம்மதமில்லாததால் அவர்கள் நிஷ்டையிலிருந்து கொண்டிருக்கிறார்கள்" என்று தாமே சேர்த்து விட்டார்.

இதில் இரண்டு சிறப்புகள். மானுடத் திட்டங்களுக்கு மேம்பட்ட, மானுட அறிவுக்குப் புரியாத ஈச்வர சங்கற்பத்தால் நேர்ந்த ஒன்றுக்கு எவரையும் குறை கூறுலாகாது எனக் காட்டியது ஒன்று. மற்றது, குறை கூறலுக்கு ஆளானவரின் செயலின்மை சோம்பலாலோ திறமையின்மையாலோ ஏற்படாமல் செயல் கடந்த நிஷ்டையாலேயே ஏற்பட்டது என அறிவுறுத்தியது.

மஉறா பெரியவாளைப் போல பாரதி ஸ்வாமிகளும் நிறைய ஸஞ்சாரங்கள் செய்தும், ஸந்தேசங்கள் விடுவித்தும், திட்டங்கள் வகுத்தும் பணிபுரிய வேண்டுமென்று அவரிடமே வற்புறுத்தியவர்கள் உண்டு. அப்போது அவர் அளித்த மறுமொழியான மணிமொழியைக் கேளுங்கள் : "நானும் காஞ்சி பீடாதிபதிகளும் இக்காலத்தில் ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் பிரதிநிதிகள். அவர் செய்யும் நல்ல காரியங்கள் யாவும் நானும் சேர்ந்து செய்வதையே என்றே வைத்துக் கொள்ளுங்கள். அவர் அடையும் கீர்த்தியும் அதே போல என்னையும் சேர்வதாகத் தெரிந்து கொள்ளுங்கள்.*"

---

ஆதாரம் : "ஸ்ரீ காஞ்சி காமகோடி ப்ரதீபம், 16.11.65 இதழில் கே.பாலஸுப்ரமணிய ஐயர் எழுதிய 'மடங்களின் ஒற்றுமை' என்ற கட்டுரை

@Page 99

நாட்டுக்காகச் செய்வது மட்டுமின்றி தனி நபர்களுக்குச் செய்வதில் கூட ஒருவரே இருவருக்குமாகச் செய்வதாக பாரதி ஸ்வாமிகள் கூறியுள்ள நெகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகளுண்டு. உதாஉறரணமாக :

1927–ல் மஉறா பெரியவாள் பாலக்காட்டில் பல்லாவூரில் முகாமிட்டிருந்த போது டி.எம்.கிருஷ்ணஸ்வாமி ஐயர் திருப்புகழ் பஜ8ன செய்து மகிழ்வித்தார். டி.எம்.என்ற இனிஷியல்களுக்கு ஏற்கப் பெரியவாள் அவருக்குத் "திருப்புகழ் மணி" என்ற விருதினைச் சூட்டினார்! ஐயர் அங்கிருந்து நேரே கோவை சென்று பாரதி ஸ்வாமிகளின் திரு முன் திருப்புகழ் இசைத்தார். உடன் வந்தவர்கள் மஉறா பெரியவாள் விருதளித்தது பற்றி அவரிடம் கூறினார்கள். அவரும் ஏதேனும் பட்டம் சூட்டக்கூடும் என்றும் அவர்கள் எதிர்பார்த்தார்களாம். ஆனால் அவரோ, "நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து கொடுத்ததாக வைச்சுக்கோங்கோ!" என்றாராம்!

தேதியூர் சாஸ்திரிகளிடமும் ஒரு ஸந்தர்ப்பத்தில், "அவா பண்ணினா நாம பண்ணினாப் போலத்தானே ?" என்று வெகு இயற்கையாகக் கேட்டிருக்கிறாராம்.

பாலக்காடு செல்லுமுன் மஉறா பெரியவாளும் கோவை விஜயம் செய்திருந்தார். அங்கே அவர் முகாமிட்டிருந்ததே அங்குள்ள சிருங்கேரி மடத்தில்தான்.

1925–ல் ராமநாதபுரப் பகுதிகளில் இரு பெரியவர்களும் ஒருவருக்கொருவர் வெகு அருகில் முகாமிட்டிருக்கிறார்கள். மஉறா சாதுர்மாஸ்ய விரதமிருந்த போது பத்து கிலோ மீட்டருக்குள் குன்றத்தூரில் பாரதி ஸ்வாமிகள் அவ்விரதம் காத்தார். எள்ளளவும் வித்தியாஸமின்றி இருமடங்களுக்கும் வித்வான்கள் வந்து சாஸ்திரார்த்த விசாரம்



செய்வார்கள். அவர்களிடமிருந்து பரஸ்பரம் இரு ஸ்வாமிகளும் மற்றவரது வியாக்யானங்களைக் கேட்டறிந்து வெகுவாக சிலாகிப்பார்கள்.

பள்ளத்தூரில் முகாம் முடித்து பாரதி ஸ்வாமிகள் கிளம்பும் போது, அடுத்தே மஉறா பெரியவாள் அங்கு வருவதாகத் தெரியவந்தது. எல்லைகள் வகுக்கும் 'வீர' பக்தர்கள் காஞ்சி பீடாதிபதிகள் அங்கு கோலாஉறலமாக பட்டணம் பவனி வரலாமா எனத் தொனிக்கப் பேசினார்கள். பாரதி ஸ்வாமிகளோ மந்தஉறாஸம் செய்து, "அவாளுக்கு நன்னா மரியாதை பண்ணி பவனி நடத்துங்கோ. நம்ப போயிகளையே (பல்லக்குத் தூக்கும் பணியாட்களையே) அவாளை ஊர்வலம் எடுத்துக் கொண்டு வர அனுப்புகிறதாக இருக்கிறோம்" என்று சொல்லி அவ்விதமே அனுப்பி வைத்தார்! சிருங்கேரி கிங்கரர்கள் தூக்கி வர காமகோடி பீடாதிபதிகள் சிவிகையேறி வந்தது தேனாய் இனினை சொரியும் நிகழ்ச்சிதானே ?

"பெரியவா அப்படி உறாங், உறாங்னு பொருமி நர்வேறெப்போதும் பார்த்ததில்லை" என்று கூறி காஞ்சி மட மானேஜர் விச்வநாதையர் ஒரு சம்பவம் நினைவு கூர்வார். பாரதி ஸ்வாமிகள் அவதூதராக, ஆடிப்பாடி, அழுது சிரித்துக் கொண்டு அதீத நிலைகளிலிருந்த சமயங்களில் ஒன்றாம். அதைப் பற்றி ஓர் அடியார் மஉறா பெரியவாளிடம், "அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதாம்!" என்றாராம். அவ்வளவுதான்! பெரியவாள் காதில் நாராசம் பாய்ந்தாற்போல, "சிவ சிவா! சிவ சிவா! சிவ சிவா!" என்று ஏறக்குறைய அலறியே விட்டு, முன்பின் எப்போதுமில்லாதபடி பொருமித் தீர்த்து விட்டாராம்! "ஏண்டா, பைத்தியம் என்ன, சரியாயிருக்கிறது என்னன்னு நீதான் ஸகலமும் கண்டுட்டியோ ? என்னமாடா சொல்லுவே அந்த வார்த்தை ?" என்று வெகு நேரம் பொரிந்து தள்ளி விட்டு,

@Page 101

"ஸந்நிதிக்குப் போய் சந்திரமௌளீச்வரர்கிட்டே மன்னிப்புக் கேட்டுக்கோ!" என்று முடித்தாராம்.

மஉறா பெரியவாள் 1935—ல் கல்கத்தாவுக்கு எழுந்தருளி நவராத்ரி வழிபாடு நடத்தினார். அவ் வழிபாட்டுக்கான நிர்வாகக் குழு உறுப்பினர்களில் சிருங்கேரி பீடத்துப் பரம பக்தரான மந்திரேச்வர சர்மா ஒருவர். நவராத்ரி முதல் நான்கு நாள் — சதுர்த்தி வரை — பூஜைகளில் தொண்டு செய்த அவருக்கு அதற்கு மேல் பொருந்தவில்லை. 'என்ன இருந்தாலும் நம் சிருங்கேரி பந்ததியில் நம் சிருங்கேரி ஆசார்யாள் செய்யும் பூஜை போல் ஆகுமா ?' என்று தோன்றி, இருப்புக் கொள்ளாமல், ஆயிரம் காவதம் கடந்து சிருங்கேரி வந்து சேர்ந்தார்.

ஆனால் பாரதி ஸ்வாமிகளோ தம்மியல்புக்கு மாறாக அசாத்தியக் கடுமையுடன் அவரை நோக்கினார். "நாங்க ரெண்டு பேரும் வேறென்னு நீர் வித்யாஸம் பாராட்டிண்டு அங்கே பாதி பூஜையில் விட்டுட்டு வந்தது மஉறா தப்பு. க்ஷணங்கூட இங்கே நிற்காதேயும்! போம் அங்கேயே!" என்று நிர்தாக்ஷிண்யமாகச் சொல்லி விட்டார்.

சர்மா பக்குவியாதலால் பாடம் பெற்றார் ; பாவனா சுத்தி பெற்றார்.

இன்று போல் பிரயாண வசதிகளில்லாத அந் நாளில் எப்பாடோ பட்டு சரியாக விஜயதசமியன்று கல்கத்தா சேர்ந்து மஉறா பெரியவாளின் காலில் விழுந்தார். பாரதி ஸ்வாமிகள் கூறியதைச் சொல்லி, தமது பேத எண்ணம் பேதிக்கப்பட்டதைத்

தெரிவித்துக் கொண்டார். மஉறா பெரியவாள் ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டு அவருக்குத் தாராளமாக நவராத்ரிப் பிரஸாதங்கள் அளித்தார்.

1966 பிப்ரவரி, மஉறா பெரியவாள் மயிலையில் முகாமிட்டிருந்தார். ஸ்ரீமடம் குறித்து ஆக்ஷேபக் கருத்துத்

@Page 102

தெரிவித்து ஆர்.கிருஷ்ணஸ்வாமி ஐயர் எழுதியிருந்த நூலோ, கட்டுரையோ, கடிதமோ பற்றி கி.சந்திரசேகரன் பெரியவாளிடம் வருத்தம் தெரிவித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

பெரியவாளோ, "என்ன 'க்ளாரிடி' பார்த்தியோ ?" என்று ஸ்ரீமடத்தின் மீதான தாக்குதலறிக்கையில் இருந்த 'தெளிவை' மெச்சினார்! ஞானியின் ஸமதர்சனம் எப்படிப் பட்டதென வியந்தேன்.

பெரியவாள் என்னைப் பார்த்து, "இந்த (குஸ்தி போடுவது போல் கையால் அபிநயித்து( ஸமாசாரமெல்லாம் நீ 'ஃபாலோ' பண்றியோ ?" என்றார்.

" 'ஃபாலோ' பண்ணணும்னு 'இன்ட்ரெஸ்ட்' எடுத்துண்டு பண்ணலை. ஆனாலும் போலகம் சாஸ்திரிகள் 'ப்ரதீப'த்தில் எழுதிண்டு வரதுகளைப் படிக்கிறதிலேருந்து விவரங்கள் ஒரு மாதிரி தெரியறது. வேதனையாத்தான் இருக்கு" என்றேன்.

"வேதனையா மட்டுந்தான் இருக்கா ? க்ருஷ்ண ஸ்வாமி ஐயர் மேலே ஒனக்குக் கோ(ப)ம் வரது – இல்லே ?" என்று பெரியவாள் 'குடைந்தார்'.

'கோபம்' என்ற வார்த்தையைக் குழந்தை மழலையில் 'கோம்' என்று சொன்னதிலேயே இந்தச் சண்டை சர்ச்சைகள் எத்தனை குழந்தைப்பிள்ளைத்தனமானவை என்பது நிதரிசனமாயிற்று!

வாஸ்தவமாகவே அந்த மனிதரின் மேல் எனக்குக் கோபம் இருக்கத்தான் செய்தது – ஆத்மிகத்திற்கு அணுவளவும் உதவி செய்யாத விஷயத்தில் ஆஸ்திகர்களின் கவனத்தைத் திருப்பி விட்டுக் கொண்டு பேதங்கள் வளரச் செய்வானேனென்று. காஞ்சி மடத் தரப்பின் 'வீரர்'கள் பற்றியும் அடியேனுக்கு அதே அப்ப்ராயந்தான்.

@Page 103

"ஆமாம். கோபந்தான் வருகிறது" என்று அந்த ஸத்வ மூர்த்தியிடம் சொல்ல வெட்கிப் போசாமலே இருந்தேன்.

பெரியவாளே பேசினார். குழந்தையும் தெய்வமும் ஒன்றாகிப் பேசினார். "என் ஆயுள் பரியந்தம் இந்தச் சண்டை தீரப் போறதில்லே ; என்னால தீர்த்து வைக்க முடியும்னு தோணலை. அதனால அந்த விஷயத்திலே நீ மனஸை ஒழப்பிண்டு ப்ரயோஜனமில்லே. இப்ப ஒனக்கு க்ருஷ்ண ஸ்வாமி ஐயர்கிட்ட இருக்கிற கோபம் தீரணும்னு எனக்கு இருக்கு. அதை என்னால தீர்க்க முடியும்னும் தோண்றது. ஒரு கார்யம் பண்றியா ? 'The Saint of Sringeri'–ன்னு அவர் புஸ்தகம் எழுதியிருக்கார். மொதக்காரியமா அதை வாங்கிப் படி. என்ன படிக்கிறியா ?"

மீற முடியாத உத்தரவாகவே பிறப்பித்து விட்டபின் கீழ்ப் படியாதிருக்க முடியுமா ?

இப்படியாகத்தானே கி.சந்திரசேகரன் புண்யத்தில் காஞ்சி சந்திரசேகரர் 'ஸெயின்ட் ஆ்ஃப் சிருங்கேரி'யாகிய அந்த இன்னொரு சந்திரசேகரரிடம் என்னை ஈடுபத்தினார்.

அற்புதமாக எழுதப்பட்டிருந்த அந்த நூலைப் படித்தபின் எனக்கு அதன் ஆசிரியரிடமிருந்து 'கோம்' போயே விட்டது! இப்பேர்ப்பட்ட குரு பக்தியும், சாஸ்திராபிமானமும், வித்வத்தும், அநுஷ்டானமுமுள்ள ஒரு பெரியவர் சர்ச்சைக்குரிய விஷயங்களில் ஈடுபட்டிருக்கிறாரென்றால் அது அந்த மஉறா அம்மா மஉறாமாயையின் கைவரிசைதான் என்ற தெளிவு பிறந்தது.

அது ஒரு புறமிருக்க, நூல் நாயகரிடம் பக்தி உண்டாயிற்று. நூலில் பல இடங்களில் காஞ்சிப் பெரியவாளைப் பற்றியே படிப்பது போன்ற பிரமிப்பு உண்டாயிற்று.

@Page 104

அப்புறம் பெரியவாளை தரிசித்த போது 'கோம்' நீங்கியதாகச் சொன்னேன். அதோடு "பெரியவாளையே பத்திப் படிக்கிறாப்பல தோணித்து" என்றும் சொல்லிவிட்டேன்.

அப்போதுதான் அந்த குழந்தை – தெய்வம் சொன்னதை எண்ணினால் இப்போதும் நெஞ்சு குழைகிறது. "அப்படியா தோணித்து ? ஒங்கிட்ட அந்தப் புஸ்தகம் படிக்கச் சொல்லிவிட்டு நான் பயந்…துண்டு இருந்தேன். படிச்சுட்டு, 'ப்ரத்யகாத்மாவிலேயே ஸதாவும் த்ருஷ்டியாயிருக்கிற இவரும் ஸ்வாமிகள், under the sun ஒரு விஷயம் பாக்கியில்லாம எல்லாத்தையும் ஓழக்கால அளந்துண்டிருக்கற அந்தப் பராக்குச் சாமியாரும் ஸ்வாமிகளா'–ன்னு நெனச்சுடப் போறயேன்னு பயந்…துண்டு இருந்தேன்.* என்னைப் பத்திப் படிக்கறாப்பலயா ஒனக்குத் தோணித்து ?" என்று கேட்டார்.

'அடி காமாக்ஷி! என்ன வேஷம் காட்டி விளையாடுகிறாயடி ?' என்று கண்களில் நீர் முட்டி வந்தது.

ப்ரத்யங்முக ஸ்வாமிகள், பராக்குச் சாமியார் விஷயமாகச் சிந்தனை படர்ந்தது. அவர் பாரதி ; இவர் ஸரஸ்வதி . பாரதி என்றால் ஒளியில் களிப்பவள். ஞான ஒளி ஆடாது, அசையாது, பிசிறின்றி, கூராக ஒருமுகப்பட்டு நிற்பதான ஆன்மக் களிப்பு. அப்படித்தான் பாரதி ஸ்வாமிகள் உள்நோக்கி ஒரேமுகப்பட்டிருந்தார். ஸரஸ்–வதி என்றால் நீர் நிலையில் நித்யவாஸம் செய்பவள். நீர் நிலை நானா திசையிலும் பாய்ந்து பயிரும் உயிரும் தழைக்கச் செய்யத்தானே இருக்கிறது ? அப்படியே

---

*உள்முகமாக இருப்பதை 'ப்ரத்யங்முகம்' என்றும் வெளிமுகமாக இருப்பதை 'பராங்முகம்' என்றும் சொல்வார்கள். 'பராங்முகம் என்பதிலிருந்துதான் 'பராக்குப் பார்ப்பது' என்ற சொற்றொடர் வந்தது.



ஸரஸ்வதி ஸ்வாமிகள் நானா துறைகளிலும் பிரவேசித்து பிரவஉறித்துப் பல்வகை மாந்தருக்கும் அறிவூட்டுகிறார்.

இதனைப் பெரியவாளிடம் வாய்மொழியாகச் சொல்லக் கூச்சமாக இருந்ததால் கடிதமாக எழுதி அனுப்பினேன்.

அடுத்த முறை – ஒரு காலை வேளை – பெரியவாளின் தரிசதனத்திற்குப் போகும் போது கடிதம் பற்றி அவர் என்ன சொல்வாரென்பதே நினைப்பாக இருந்தது.

முகாமில் பெரியவாள் இல்லை. சுற்றுப்புறங்களுக்கு விஜயம் செய்யச் சென்றிருப்பதாகத் தெரிந்தது. அவரது திரும்புகைக்காக ஆவலுடன் காத்திருந்தேன்.

நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது. நண்பகலும் வந்துவிட்டது. எனக்கோ அதற்கு மேல் காத்திருக்க முடியாமல் அலுவலகம் திரும்ப வேண்டிய நிர்பந்தம்.

அயனான கட்டத்தில் பெரியவாள் வந்து சேர்ந்தார். போன இடத்தில் விழுப்புப் பட்டு விட்டதோ என்னவோ, நேரே கிணற்றடிக்குச் சென்றார்.

கிங்கரர் கடத்தைக் கயிற்றில் சுருக்கிட்டுக் கிணற்றில் விட்டார்.

"உச்சி ஸூர்யன் கிணத்துல தெரியறதா ? பாரு!" என்று அவரிடம் பெரியவாள் கூறினார்.

"தெரியறது."

பெரியவாள் என்னைப் பார்த்தார். "ஏதாவது தோண்றதா ?" என்று கேட்டார்.

அத்வைத சாஸ்திரத்தில் இரண்டு விதமான கொள்கைகள். ஒரே ஸூரியன் பல நீர்த்துளிகளில் ஒவ்வொன்றுள்ளும் பிரதிபலிப்பது போல, ஏக சைதன்யமே அநேக ஜீவ அந்தஃகரணங்களுள்ளும் பிரதிபலிக்கிறது



என்று ஒரு கொள்கை – 'ப்ரதிபிம்ப வாதம்' என்பது. பிரதிபலிப்பு என்பது சரியல்ல, அந்த சைதன்யமொன்றே தான் அஸலாக அனைத்து ஜீவர்களின் உள்ளும் உறைவது எனக் கருதும் மாற்றுக் கொள்கைக்காரர்கள் அதற்கும் உவமை கூறுவார்கள். எங்கும் விரித்த ஆகாசமேதான் சாக்ஷாத்தாக அநேகக் காலி கடங்களுக்குள்ளும் இருப்பது போல ;  கிணற்றுக்குள்ளேயே கடத்தை முழுக்கும் போது அஸல் அந்த நீரேதான் கடத்துக்குள் இருப்பது போல என்பார்கள். இக் கொள்கை 'அவச்சேத வாதம்' எனப்படும்.

இங்கே கிணற்றில் ஸூரியனின் பிரதிபிம்பம் ; கிங்கரர் கடத்தைக் காட்டி இறக்குகிறார்.

டக்கென்று புத்தியில் பொறி தட்ட, "ப்ரதிபிம்பவாதம், அவச்சேத வாதம் இரண்டுக்கும் திருஷ்டாந்தம் தெரிகிறது" என்றேன்.

"அது இல்லை' என்னும் பாவணையில் பெரியவாள் தலையசைத்தார்.

கிணற்றைப் பார்த்தார், ஸூரியனைப் பார்த்தார். என்னைக் குறுகுறு என்று பார்த்து, "ஸரஸலே பா!" என்றார்.

அப்படியே ஸ்நானத்திற்குப் போய்விட்டார்.

ரோமாஞ்சமடைந்தேன். மஉறா பெரியவாள் எனும் கருணாஸரஸுக்குள் பிம்பமிட்டுப் பிரகாசிக்கும் ஞானபா(னு)வாகவே பாரதி ஸ்வாமிகளை உணர்ந்தேன்.

மறுபாதி – அந்த ஞான ஜோதியுள்ளும் இந்தக் கருணைக் கசிவு உண்டென்பது – தன்னால் மனத்தில் மேலியது.

ஆம், இரு சந்திரசேகரர்களும் சங்கரநாராயண மூர்த்ததைப் பொய்கையார் மெய்ம்மையால் பாடியவாறு,

இருவரங் கத்தால் திரிவரே லும்ஒருவன்
ஒருவன்அங் கத்தென்றும் உளன்!

@Page 107

# 5

# தடுத்தாட் கொண்ட புராணம்!*

"நாயேன் பல நாளுநினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்து எய்த்தேன் ; பெறலாகா அருள்பெற்றேன்!"

1957 மத்தி, அப்போதுதான் ஸ்ரீசரணர்களின் முதல் தர்சனம் பெற்றது. ஆனால் 'தர்சனம்' என்ற பக்தி பாவத்துடனா போனேன்? இல்லவேயில்லை. வேண்டா வெறுப்பாகப் போனேன்.

குழந்தைப் பிராயத்திலிருந்து இருந்து வந்த தெய்வ ஈடுபாடும் மதாசார நம்பிக்கையும் இதற்கு ஒன்பது வருஷத்திற்கு முன்பிருந்து, அதாவது என்

பதின்மூன்றாம் வயதிலிருந்து ஏதோ, எப்படியோ சுவறியோ போய்விட்டன! ஜே.கே. பெயர் கூடக் கேள்விப்பட்டிராத காலமென நினைக்கிறேன். ஆயினும் அவருடைய கருத்தாகப் பின்னாளில் நான் அறியவந்த மத–மரபு–மறுப்பு அப்போது தன்னால் கொழுந்துவிட்டு எழுந்து முந்தைய ஈடுபாடுகளையும் நம்பிக்கைகளையும் வற்றடித்து

---

ஸ்ரீ மஉறா பெரியவாளின் நூற்றாண்டு மலரான Hundred Years of Light–ல் எழுதிய கட்டுரை (1994)

@Page 108

விட்டது. உயிர்த் தத்வமாக ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது என்ற உறுதி மட்டுமே வலுவாக நின்றது. ஆனால் அதற்குக் கடவுள் என்று பெயர் கொடுக்கக்கூடப் பிடிக்கவில்லை. 'அந்த ஒரு தத்வத்தில் அடங்கிவிட்டால் அதுவே எல்லாம்', என்று தெரிந்தாலும், 'அதற்காக பக்தி என்றோ, ஞானம் என்றோ ஒரு ஸாதனை மண்ணாங்கட்டியும் வேண்டாம். அதுவாகவே பிடித்து அடக்கிக் கொண்டால்தான் உண்டு' என்ற விசித்திரமான கொள்கை, விசித்ரமாகவே தோன்றாமல் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் அந்த ஒன்றைப் பல நாம ரூபங்களில் தெய்வங்களாக வழிபடுவதை ஏற்கவே முடியவில்லை.

ஞானம், பக்திகளே இப்படிப் பறந்து போன சூறாவளியில் கர்மத்தைப் பற்றிக் கேட்பானேன் ? 'ஒன்றேயான உயிர்த் தத்வத்தின் ஏகப் பெருவாழ்வுக்கும் நம்முடைய சின்னஞ்சிறு வாழ்வுகளுக்கும் ஒரு ஸம்பந்தமுமில்லை. இச்சிறு வாழ்வுக்கான ஒழுங்கு முறைகள் என்ற பெயரில் கட்டிப் போடும் கர்ம மார்க்கம் என்பது மார்க்கமேயில்லை. ஸாதனையென்று ஏதேனுமொன்று இருக்குமாயினுங்கூட அந்தப் பெயரைப் பெற இதற்கு லாயக்கில்லை' என்பதே தீர்மானமாயிற்று. இந்த மார்க்கத்தில் கையோடு கையாக வரும் தர்ம சாஸ்திர ஆசார விதிகளோ அடியோடு கரித்தன. 'வேறெந்த நாட்டுக்குமில்லாமல் இங்கே மட்டும் என்ன இத்தனாயிரம் ஸமூஉற வித்யாஸங்கள் ?' என்று கடுத்தது. பொதுவாக மதம் என்பதே பேதைமை என்றால், இந்த வைதிக ஆசாரங்களோ முழு முட்டாள்தனம் என்பதே தீர்ந்த அப்ப்ராயமாயிற்று. 'தானே முளைத்துத் தழைத்த' இந்த ஸநாதன ஸம்பிரதாய எதிர்ப்புக்குச் சுதந்திரப் போராட்ட காலத்திலிருந்தே வெகுவாகப் பரவி வந்த ஸமத்வம் எனப்படுகிற அடிப்படையிலான சீர்திருத்த வாதம் உரமூட்டியது.

@Page 109

ஆயினும் வீட்டிலோ வெளியிலோ என் புரட்சிக் கருத்துக்களைக் காட்டிக்

கொள்ளாமல், அதே சமயம் குறிப்பிடத்தக்க மதாசரணைகளும் இன்றிக் காலம் கடத்தி வந்தேன்.

அப்போதிருந்த பொதுவான மனநிலையைச் சொன்னேன். ஆனால் அதிலேயே விலக்காகச் சில 'அன்ய ஸ்வர'ச்சாயல்கள் எட்டிப் பார்ப்பதும், அவற்றையும் நான் இந்தப் பொது 'மேள'த்திலேயே அமுக்குவதும் நடைபெற்றுத்தான் வந்தன. அவற்றை விளக்கப் புகுந்தால் இந்த ஸ்வய புராணம் அவசியமில்லாமல் நீளும். புராணம் காணாப் பூரணரின் சரிதத் தொடர்பாக இவ்வளவு சொன்னது போதும்.

மொத்தத்தில், அந்த 57 மத்தியில் ஓரிக்கை எனும் ஓரிரவிருக்கையில் என் பெற்றோருடன் ஸ்ரீசரணர்களை முதன் முறை தர்சிக்கச் சென்ற போது, 'தர்சனம்' என்ற எண்ணமின்றி, 'பார்த்துத் தீர வேண்டியிருக்கிறதே' என்ற 'திவ்ய'மான எண்ணத்தோடயே சென்றேன். 'சொல்வது அத்வைதம். அப்படிப்பட்டவர்களுக்கு மடமாம்! அது போதாதென்று, அங்கே அத்வைத வாடையேயில்லாத பூஜைதான் முக்யமான காரியமாம்! அதையும் விட மோசம், ஆயிரத்தெட்டு வித்யாஸங்களைக் கட்டியழும் ஆசாரங்களைக் 'கொந்தி'க் கொண்டிருப்பது! இவர்களை ஆதரிக்கும் வரையில் உலகம் உருப்படாது. நல்லவேளை, பெரும்பாலான மக்கள் இவர்களை அதிகம் கண்டு கொள்ளாமலிருக்கிறார்கள்' என்ற 'தேர்ந்த, தெளிந்த' சிந்தனையோடு ஸ்ரீசரணர்களின் முகாம் சென்றடைந்தேன்.

அப்போது மாலை ஐந்து மணியிருக்கும். தர்சனம் முடித்து நாங்கள் ஸ்ரீபெரும்புதூர் திரும்பி (அப்போது அங்குதான் வாஸம்) எங்களுக்குக் கார் உதவியிருந்த அன்பருக்கு

@Page 110

அதை ஏழு மணிக்குள் திருப்பியனுப்ப வேண்டியிருந்ததால் அரை மணிக்குமேல் அங்கிருப்பதற்கில்லாமலிருந்தது. வழியில் காமாக்ஷி ஆலயத்தில் தாமதமானதால் இப்படியாயிற்று. அதில் தந்தையாருக்கு மிகவும் வருத்தம்.

ஸ்ரீசரணர்கள் குழந்தைப் பிராயத்தில் விழுப்புரத்திலிருந்தபோது அவருடைய தோழர்களில் ஒருவர் பிறகாலத்தில் தென்னார்காட்டில் பிரபல வழக்குரைஞரான ஸ்ரீ சிதம்பரய்யர் ; எம்.எல்.ஏ–யும் ஆனவர். அந்த ஆதி நாளில் என் பெரிய பாட்டனாரும், எங்கள் குலதேவியுடன் ப்ரத்யக்ஷமாக உரையாடக்கூடிய புனிதருமான துரைப்பா (அ)ண்ணா எனப்பட்ட துரைஸ்வாமி சாஸ்திரி என்ற இல்லறத் துறவி விழுப்புரத்தில்தான் ரெவின்யூ அதிகாரியாயிருந்தார். இல்லறத் துறவிக்கு

மகப்பேறில்லாவிட்டாலும், அக்கால அவிபக்த குடும்பமாதலால் வீட்டில் தாயாதிக் குழந்தைகள் புழக்கம் உண்டு. அவர்களில் ராஜா என்ற பிள்ளை தமக்கும், குட்டி ஸ்ரீசரணர்களுக்கும் ஸ்நேஉறம் என்றும், தாமும் குட்டி ஸ்ரீசரணர்களும் ராஜாவோடு கூட எங்களகத்தில் முப்பாட்டி ஒருத்தி பிசைந்து போட்ட 'பழையது' உண்டதுண்டு என்றும் சிதம்பரய்யர் கூறியிருந்ததை முடியுமாயின் ஸ்ரீசரணர்களின் காதில் போட்டு உறுதி பெற வேண்டுமென்று தந்தையாருக்கு ஆசை. இது போல் விஷயம் பேச மிகவும் தயங்கும் பரம பவ்ய பக்தர்தானவர். ஆனாலும் அன்று பகல் நாங்கள் காஞ்சி வந்தபோது ஸ்ரீசரணர்கள் அன்றைக்கு உத்ஸாஉறமாக ஊர்க் கதைகள் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரியவந்ததால், நாங்களும் அவருடன் ஸாவகாசமாகப் பொழுதைச் செலவிட்டு, மனத்திலிருப்பதைக் கேட்கலாமென்று எண்ணினார். எனினும் பிற்பாடு மாலை நான்கு மணிக்கு காமாக்ஷி ஆலயம் திறந்தபின் அங்கே அர்ச்சனை முடித்தே ஒரிக்கை செல்ல வேண்டி நேரிட்டுவிட்டதால், அங்கே அரை மணிக்கு மேல் இருப்பதற்கில்லாமலாயிற்று.

@Page 111

இப்படி நிர்ப்பந்தமாச்சே என்று தகப்பனார் நொந்து கொள்ள, எனக்கோ 'பந்தப் படுத்தும் இந்தப் புழுக்கச் சூழலில் அரை மணிக்கு மேல் அவதிப்பட வேண்டாமே' என்று கொஞ்சத்தில் கொஞ்சம் ஆறுதலாயிருந்தது.

ஸ்ரீமடத்தின் முகாமாயிருந்த பழைய ஓட்டுக் கட்டிடம். அங்கே குடியிருந்த கூடியிருந்த பஞ்சகச்ச குடுமிப் 'பத்தாம் பசலிகள்', மடிசார் மாமிகள், முக்காட்டுக் கைம்பெண்டிர், "பெரியவா, பெரியவா" என்ற அடித் தொண்டை பக்திச் கிசுகிசுப்பு யாவும் என் எதிர்மறை உணர்ச்சிக்குத் தூபம் போட்டன.

சட்டையைக் கழற்றி விட்டுத்தான் முகாமுக்குள் போக வேண்டும் என்று தெரிந்தபோது எதிர்ப்பு எரிச்சலாகவே 'உயர்' பரிணாமம் கண்டது! 'நல்ல அத்வைதம்! இப்படியொரு ஆசார்யர்! இப்படியொரு கேள்வியே கேட்கத் தெரியாத அஜக்கூட்ட சிஷ்யகணம்!' என்று மனசு பொருமியது.

நாலு பேர் பார்க்கச் சட்டையைக் கழற்றிவிட்டு நிற்க, நான் பட்டபாடு உண்டே! 'ஏண்டா வந்து தொலைத்தோம்?' என்றே நெஞ்சாழத்தில் கோப வேதனை குமுறியது. (இதற்கு மாற்றுப் படலம் பிறந்த பின்னுங்கூடச் சிலகாலம் சட்டையை மட்டும் அசட்டை செய்ய முடியாமலேதான் சிரமப்பட்டேன். அன்பர் 'பரணீதர'னுக்கும் ஆரம்ப நாட்களில் இதே 'காம்ப்ளெக்ஸ்' இருந்ததென்று படிக்க ஆச்சர்யமாகவும், ஆச்வாஸமாகவுங்கூட இருந்தது.)

முகாம் கட்டிடத்துள் பார்த்தபோது எங்களுக்கு முன்னதாகச் சென்றவர்கள் முற்றத்தில் நமஸ்கரிப்பது தெரிந்தது. இந்த ஸாஷ்டாங்க நமஸ்கார ஸமாசாரம் அன்றைய ஸ்வதந்திர விறைப்புக் குணத்திற்கு அடியோடு ஏற்காத ஒன்றாக இருந்தது! இப்பேர்ப்பட்ட விறைப்பு

@Page 112

வீரனுக்கு தனக்கு இஷ்டமில்லாத ஒருவர் முன் அப்படி விழத்தான் வேண்டுமென்பது சொல்லி முடியாத மானபங்க உணர்ச்சியை ஏற்படுத்தியது. 'யாரோ கிழவர் நம்மைச் சிறுமைப்படுத்துகிறாரே!' என்பதில் அந்த ஒருவர் மீது ஒருவரை பொதுவாக இருந்த மாற்று மனப்பான்மை சொந்த ஊேறாதாவில் – ஊேறாதா சரிவதில் – ஓங்கி வளர்ந்தது!

ஆக, பக்தி ச்ரத்தைகளை ஸமூலம் துடைத்துப் போட்ட மனநிலையிலாக்கும் ஸ்ரீ சரணர்களின் முதற்காட்சி பெற உள்ளே நுழைந்தேன்!

முற்றத்தை அடுத்த கூடத்தில், வெளிச்சம் போதாத ஒரு மூலையில் அவர் அமர்ந்திருந்தார். விபூதி, ருத்ராக்ஷம் எதுவுமின்றி, ஒரு சாயம் போன காவித்துணி 'பேருக்கு' அவர் மேல் தொற்றிக் கொண்டிருக்க அமர்ந்திருந்தார். மங்கல்தான் எனக்குத் தெரிந்தது. மங்கள மூலம் என்ற விழிப்பு ஏற்படவில்லை. நீறு பூத்த நெருப்பு என்று காணாமல் வெறும் நீற்றை மட்டுமே–திருநீறாகத் தெரியாத வெறும் சாம்பலையே கண்டேன். ஆம். அந்த உருவம் இந்த விறைப்பு – வீராப்புக்காரனை கொஞ்சங் கூட 'இம்ப்ரெஸ்' செய்யவில்லை! அவர் எப்படித் தெரிந்தாரென்றார்...

இதுவரை எழுதி வந்திருப்பதைப் படிக்கும் போதே பக்த கோடிகளில் சிலருக்கு என்னை அடித்தாலென்ன என்று தோன்றியிருக்கலாம். அடுத்து எழுதியிருப்பதைக் குறித்தோ இன்றைய எனக்கே அன்றைய என்னை ஒரு போடு போட்டாலென்ன என்று தோன்றுகிறது.

அன்று அவர் எப்படித் தெரிந்தாரென்றால், கோவில் வாசலில் கப்பரையை வைத்துத் கொண்டு ஆண்டிப் பட்டாளம் உட்கார்ந்திருக்குமே, அதிலிருந்து பிரித்துச் சொல்லமுடியாத ஓர் அநாமதேயமாகத்தான்!

@Page 113

பொதுவாக உருவத்தைப் பார்த்தபின் முகத்தைப் பார்த்தேன்.

அவரும் பார்த்தார்.

'குறுகுறு' என்றிருந்தது.

கண்களைத் தாழ்த்திக் கொண்டேன்.

என்ன வெட்கம்? அந்த ஒரு பார்வையே மின் வெட்டாக உள்ளே புகுந்து என்னுடைய விறைப்பு – வீராப்பு மனப்பான்மைக்காக என்னை வெட்க வைத்து விட்டதா, என்ன? இல்லை, இல்லை! அப்படியெல்லாம் அசாதாரணமாக ஒன்றும் நடந்து விடவில்லை! ஆனாலும் அவர் பார்ப்பதில் வெட்கம் ஏற்படவே செய்தது. வெற்றுடம்பைப் பார்க்கிறாரே என்பதாலா? சொல்லத் தெரியவில்லை.

எங்களுக்கு 'ஜஸ்ட்' முன்னால் உள்ளே சென்ற, ஒரு முக்காட்டுப் பாட்டி பாத்திரத்தில் கொண்டு வந்திருந்த சீடை, முறுக்குகளை ஒரு பிரப்பந்த தமுக்கில் காலி பண்ணி, தமுக்கை ஸ்ரீசரணர்களுக்கு முன் அதி விநயமாகக் கூனிக் குறிகிக் கொண்டு ஸமர்ப்பித்து விட்டு முற்றத்தில் நமஸ்கரித்தாள்.

கல்லு கல்லாகத் தெரிந்த அந்தச் சீடை, முறுக்குகளைப் பார்க்கவே சிரிப்பு வந்தது. அதோடு பரிதாபமாகவுமிருந்தது. 'பெரியவா, பெரியவா என்று இந்த மாதிரி அசட்டுப் பாட்டிகள் ஏதோ பெரிதாக நினைத்துக் கொண்டு, தங்கள் இல்லாமையிலும் பக்ஷணம், பணியாரம் என்று அடுப்படியில் வெந்து கொண்டு பண்ணி எடுத்து வருகிறார்களே? என்று, போனால் போகிறதென்று ஸ்ரீசரணர்களிடம பரிதாபப்பட்டேன். இம்மாதிரியான 'பக்ஷண பயங்கர'ங்களைச் சாப்பிடுகிறாரே என்று! அவருடைய கடும் ஆஉறார நியமம் அறிந்திராத எனக்கு

@ Page 114

அந்த பக்ஷண வகைகள் பரிஜனங்களுக்கே போகுமென்பது தெரியவில்லை. அவரே அசட்டு பக்தைகள் கொண்டு வந்து கொடுக்கும் மூன்றாந்தர பக்ஷணங்களை மொக்கிக் கொண்டு தாமும் ஒரு சங்காரச்சார்யார் என்று பேர் பண்ணி வருவதாக நினைத்தேன். நமஸ்கரித்தெழுந்த பாட்டி ஒடுங்கி, ஒதுங்கி நின்றாள். அவளைப் பற்றி ஸ்ரீசரணர்களுடனிருந்த பாரிஷதர் அவரிடம் ஏதோ சொன்னார். என்ன பதில் சொல்லப் போகிறாரென்று ஸ்ரீசரணர்களின் முகத்தைப் பார்த்தேன்.

அவர் ஏதும் பதில் சொல்லவில்லை.

என்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

எனக்கு வெட்கமாக இருந்தது. கண்ணைத் தாழ்த்திக் கொண்டேன். ஆனாலும் அவர் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறாரென்று உள் மனத்துக்குத் தெரிந்தது. அது மட்டுமில்லை, இன்னும் உள்..ள் மனத்துக்குத் தெரிந்தது, 'நான் உள்ளே நுழைந்ததும் முதலில் பார்த்தாரே, அதிலிருந்த அந்தப் பார்வை என்னை விட்டு நகரவில்லை' என்று!

சிறிது போது நகர்ந்தது. பதிலேதும் வராததால் பாட்டி ஓரத்துக்கு ஒதுங்கிவிட்டாள்.

எங்கள் 'டர்ன்' வந்தது.

தகப்பனார் எண் சாணுடம்பு நாலு சாணாக, கையுறையை ஸமர்ப்பித்தார்.

அவர் முன்பே சொல்லியிருந்தபடி, அவர், என் தாயார், நான் மூவரும் சேர்ந்து ஏக காலத்தில் நமஸ்கரித்தெழுந்தோம்.

'ஸென்ஸிடிவ்' உடம்பானதால் அந்த முற்றம் முழுதும் பரப்பி வைக்கப்பட்டிருந்த வைக்கோலின் ஸ்பரிசத்தில் சுணையெடுத்தது. ஸ்ரீசரணர்களின்

@Page 115

பார்வையோ 'ஸென்ஸிடிவ்' உள்ளத்தில் சுணையெடுக்கச் செய்தது.

ஆம், இன்னமும் அவர் பார்வையை என் மேலிருந்து அகற்றவில்லை.

நான் திருட்டுத்தனமாகக் கண்களை லேசாக உயர்த்தி அவரைப் பார்ப்பதும், அவரும் பார்க்கிறார். பார்க்கிறார், பார்த்துக் கொண்டேயிருக்கறாரென்பதில் தாழ்த்திக் கொள்வதுமாக இருந்தேன்.

நமஸ்கரித்தெழுந்த பிதா ஒன்றும் சொல்லாமல் நின்றார். அதிகாரப் போக்கும் தன் முனைப்புமே அவரது பொது இயல்பெனினும் ஸ்ரீசரணர்கள் என்றால் ஸப்த நாடியும் ஒடுங்கி நிற்பார். அப்படித்தான் இப்போதும் நின்றார். ஸாத்வீயான அம்மாவோ அங்கே வாய் திறப்பாள் என்று நினைப்பதற்கே இடமில்லை.

ஆனால் மற்றவர் வாய் திறந்தாலும் திறக்காவிட்டாலும் தாமே பேசி, 'ம்ருது பூர்வ பாஷி'யாக முன்சொல், இன்சொல் பேசி, அவர்களையும் பேச வைப்பவரென்றும், அவர்களுடைய பூர்வீகம் பற்றிய விருத்தாந்தங்களைக் குடைந்து குடைந்து கேட்டு அவர்களுக்கே புதுப் புதுப் பழைய தகவல்கள் தருபவரென்றும் புகழ் கொண்ட ஸ்ரீசரணர்களும் அன்று வாய் திறந்தாரில்லை.

பாரிஷதரே 'யார் ? என்ன ? எங்கேயிருந்து' இத்யாதி கேட்டு என் தகப்பனாரை வாய் திறக்க வைத்தார், 'டு தெபாயிண்ட்' மட்டுமே.

அந்நாளில் (அதன் பின் பல்லாண்டுகள் கூட) இடை மனிதரின்றி ஸ்ரீ சரணர்களே கேட்டுக் கொள்வார்கள். அன்றோ கேட்டுக் கொண்டார்களா, இல்லையா என்றே தெரியவில்லை. காது திறந்திருந்ததோ, இல்லையோ, வாய்

@Page 116

நிச்சயமாகத் திறக்கவில்லை ; மறுமொழி கூறவில்லை. கண்திறந்திருந்தது ; ஆனால் என்னொருத்தன் மேலேயே இருந்தது.

மௌனமாகப் போயிற்று, நெடுங்காலமாகத் தோன்றிய சில நிமிஷங்கள்.

பொறுத்துப் பார்த்த பாரிஷதர் இன்னும் தர்சனத்திற்கு அடியார்களிருந்ததால் என் தந்தையாரிடம் முடிவாக "ஏதாவது விஞ்ஞாபனம் இருந்தா பண்ணிக்கலாம்" என்றார்.

'அநுக்ரஉறம் இருக்கணும்!' என்று சொல்வதாக நினைத்து, நாத் தழுதழுத்து ஏதோ குழறினார் தந்தை.

பாரிஷதர் ப்ரஸாத மடக்கை ஸ்ரீசரணர்களின் முன் நகர்த்தினார். அவர்கள் அப்போதும் திருஷ்டியைப் பெயர்க்காமலே விரல்களால் மடக்கைத் தீண்டி எங்களிடம் கை ஜாடை காட்டினார்கள். மூவருமாகச் சேர்ந்து அதை எடுத்துக் கொண்டோம்.

ஸ்ரீசரணர்களிடம் துரைப்பாண்ணா அகத்துப் பழையது பற்றித்தான் கேட்க முடியவில்லை என்றில்லாமல், எதுவுமே பேசுவதற்கில்லாமல் ஆக, தந்தையார் தாழ்வாரக் குறட்டுக்கு ஒதுங்கினார். அம்மாவும் நானும் அவரைத் தொடர்ந்தோம்.

அந்த ஓரமும் தூரமில்லை என்று ஸ்ரீசரணர்களின் த்ருஷ்டியும் என் மேலேயே தொடர்ந்து படர்ந்தது.

அடுத்து, எங்களோடு வந்த என் பெரிய சிற்றப்பாவின் மைத்துனர் ஸ்ரீசரணர்களை நமஸ்கரித்தார். அவரை 'எங்களோடு வந்த' என்பதை விட "எங்களையே அங்கு வரச் செய்த" என்பதுதான் பொருத்தமாயிருக்கும். அப்போது காஞ்சீபுரத்தில் கோயில்களின் கணக்குத்

@ Page 117

தணிக்கை அலுவலில் இருந்த அவருடைய அழைப்பின் மேல்தான் நாங்கள் அந்தப் பயணம் மேற்கொண்டதே.

கோயில் ஆடிட்டிலிருந்த தம்மிடம் ஸ்ரீசரணர்கள் நிறையப் பேசுவாரென்று அவர் எதிர்பார்த்திருந்தார். ஆனால் அவருக்கு ஏமாற்றமே கிட்டிற்று. ஸ்ரீசரணர்களின் அதே மௌனத்தோடு அதே குறிமாறப் பார்வையோடுதான் அமர்ந்திருந்தார்.

பாரிஷதரின் 'அநுக்ரஉற'த்தில் ப்ரஸாதம் பெற்று சிற்றப்பா மைத்துனர் எங்களோடு சேர்ந்து கொள்ள, இனி அங்கு நிற்பதில் காரியமில்லை என்று புறப்பட்டுவிட்டோம். அரைமணிதான் அங்கிருக்க முடியுமென்று நினைத்தவர்கள் கால் மணியிலேயே புறப்பட்டிருப்போமென்று நினைக்கிறேன். 'ஆனால் ஒரு வேற்று மனிதரின் இடைவிடாத பார்வையிலிருப்பதென்றால் அந்தக் கால் மணிக்கே கால் யுகத்துச் சுமை ஏற்படுந்தானே ?'

'அப்…பாடா!' என்று நான் நிம்மதிப் பொருமூச்செறிய, வெளியே வந்து சேர்ந்தோம்.

அங்கேயிருந்தவர்களெல்லாம் ஸ்ரீசரணர்கள் என் மேல் செலுத்திய கால் மணி நேர 'நான்–ஸ்டாப்' கடாக்ஷத்தையே பேசி வியந்தார்கள். இப்படியொரு 'பாக்யம்' பெற்ற என்னைப் பாராட்டினார்கள்.

"சித்தே முந்தி வரை கூட பெரியவா பந்தாடிண்டிருந்தாளாம். அதென்ன, உங்க பிள்ளையைப் பார்த்துலேயிருந்து அப்படியே மாறிப்போய் அதுமேலேயே வெச்ச கண் வாங்காம சமைஞ்சுட்டா ? இப்படியொரு கடாக்ஷம் கெடக்கறத்துக்கு மஉறா பாக்யம் பண்ணியிருக்கணும். கொழந்தை ஆனாலும் பூஞ்சையா புல் தடுக்கியா

இருக்கோன்னோ? அதான் ஒடம்பு நன்னா ஆகணும்னு த்ருஷ்டியாலேயே ஆரோக்யத்தை இன்ஜெக்ஷன் பண்ணி

@ Page 118

யிருக்கா" என்று சீடை – முறுக்கு பாட்டி, தன்னை ஸ்ரீசரணர்கள் கவனிக்காதரையும் பொருட்படுத்தாமல், என் பெற்றோரிடம் மனஸாரச் சொன்னாள்.

நான் உள்ள அசடும் வழித்து கொண்டு நின்றிருக்க வேண்டும்! அவர்கள் சொன்ன 'பாக்ய'த்தின் ஸங்கேதமாக உள்ளே ஒரு உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கவில்லையே! ஸ்ரீசரணர்களைப் போன்ற ஸ்தானத்திலுள்ள ஒருவர் கால் மணி நேரம் மற்ற எல்லாக் கார்யங்களையும் நிறுத்திவிட்டு விடாமல் பார்ப்பது என்றால், அது ஸாதாரண விஷயமல்லதானெனினும் அப்போது அப்படித் தெரியவேயில்லை! 'அப்படியொன்றும் இன்ஜெக்ஷனாகவோ, கவிகள் சொல்லும் பார்வைக் கணையாகவோ அந்தப் பார்வை துளைத்துக் கொண்டு உள்ளே போய்விடவில்லையே! அல்லது பூச்சொரியலாக மென்மை கூட்டவோ, அம்ருத கடாக்ஷம் என்பதாக இனித்துக் குளிர்ந்து உள்ளே பாயவோ இல்லையே! கிழவர் என்னவோ பார்த்தாராக்கும்!' என்றே லேசாக நினைத்தேன்.

என் பெற்றோருக்கு அவர்களை ஸ்ரீசரணர்கள் கண்டுகொள்ளாவிட்டாலும் என்னை இப்படி ஏகமாகக் 'கண்டு கொண்டதில்' திருப்தியும் ஸந்தோஷமும். அடிநாளிலிருந்தே நோஞ்சான், நாலைந்து வருஷம் முன்பு கவலைக்கிடமாகப் படுத்துப் பிழைத்தாலும் ஓவர் டோஸாலேயே நலிவு கண்டவன், அவர் கண்டு கொண்டதில் வலிவு காண்பேனென்று ஊருக்குத் திரும்பும் வழியில் அவர்கள் பேசிக் கொண்டார்கள். உணர்ச்சிக் கூத்துக்களுக்கு இடம் கொடாதவர்களாதலால் இதை ஓவர்டோஸாகப் பேசாமல் விட்டும் விட்டார்கள். (அதனாலேயே பிற்பாடு நான் நல்லாரோக்கியம் பெறாமல் இருந்ததில் ஸ்ரீசரணர்களிடம் ஏமாற்றமடையாமலும் இருந்தார்கள்!)

@ Page 119

என்னைப் பொறுத்தமட்டிலோ அந்த ஒரிக்கை நிகழ்ச்சியும், அதன் நடுநாயகரும் 'ரைட் ஆஃப்' செய்யப்படவேண்டிய விஷயங்களாகவே தோன்றின. அன்றிரவு படுக்கு முன்பே தன்னியல்பாக 'ரைட் ஆஃப்' ஆகியும்விட்டன.

மறுநாள் காலை எழுந்திருக்கும் போது – ஸ்ரீசரணர்கள் நினைவுதான்!

தொடர்ந்தும் அதே நினைவு!

அவரை நினைக்கிறேன் என்பது எனக்கே தெரியாமல், ஆனாலும் அவர் நினைவாகவே இருக்கிறேன் – நாள் முழுவதும், மறுநாளும், மூன்றாம், நாலாம் நாளும் கூட!

'ஓ, அவரையா நினைக்கிறோம்?' என்று தெரிகிற அபூர்வமான சில சமயங்களில், 'எதற்காக நினைக்கிறோம்? அந்தக் கிழவருக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?' என்ற கேள்வியும் எழுகிறது.

ஆனாலும் அந்த நினைவு மஉறா ப்ரவாஉறம் சிற்றலையான கேள்வியை உடனுக்குடனே விழுங்கியும் விடுகிறது.

அவரை நினைப்பதைத் தவிர வேறெதுவும் செய்யத் தெரியவில்லை ; செய்ய முடியவில்லை.

'ஏன் நினைக்க வேண்டுமென்று காரணம் தேடுவானேன்? ஏன் நினைக்காமலிருக்க வேண்டும்? நெஞ்சத்திற்கு இத்தனை ரஞ்ஜகமாக உள்ள ஒன்றை ஏன் நினைக்காலிருக்க வேண்டுமாம்? அப்படிச் சொன்னால் கூடப் போதாது ; போதவே போதாது. அவரை நினைப்பதற்குத் தான் நினைப்பு உறுப்பாக இந்த அந்தஃகரணமே நமக்கு இருக்கிறது. அவரை நினைக்காவிட்டால்....?'

@ Page 120

ஆம், உணர்வு அந்த அளவுக்கு ஓங்கியிருந்தது – 'அவரை நினையாவிட்டால் உயிர் தரிக்க முடியாது!'

"மறப்பேன் அலேன் உன்னை, ஓர் கணமேனும்
மறக்கில் அன்றே இறப்பேன் ;
இது சத்தியம், சத்தியம், சத்தியம்!"

என்று வள்ளலார் சொல்வதாக்கும் அன்று என் அநுபவ நிலையாயிருந்தது!

இந்த அதிசய மாற்றம் எப்படி நடந்தது? "மாற்றாரை மாற்றழிக்க வல்லான்" இந்த மாற்றானை அழிக்காமல் இவனுடைய மாற்று மனப்போக்கை மாத்திரம் அழித்து

இவனை வாழ்வித்தது எப்படி ? அதுவும் மாறாக இருந்ததற்காக இவன் குற்றவுணர்ச்சி கொள்ளாமல், மன்னிப்புக்கு மன்றாடாமல் இத்தனை இயல்பாக, ரம்யமாக ?

அன்று படுக்கு முன் அவரை 'ரைட் ஆஃப்' செய்தேனே, அல்லது அப்படி நினைத்தேனே! அப்புறம் அந்த இரவு இவனுடைய உள் நினைப்பில் அவர் தங்கி, 'ஓரிரவு இருக்கை' கொண்டு, என்ன செய்தார் ? நேரிலே 'இம்ப்ரெஸ்' செய்யாதவர் நித்திரையிலே எப்படி ஆழ 'இம்ப்ரெஸ்' பதித்தார் ? விடியும் போது இவன் வாழ்வுக்கே விடிவாக உள்ளுக்கும் உள்ளிதயத்தில் ஸதாகால இருக்கை கொண்டார் ? (அந்த நாலு நாளுக்குப் பின் ஸதாகால நினைப்பு நலியத்தான் ஆரம்பித்து விட்டாலும், மூன்று மாமாங்க காலத்திற்குப் பின் இன்று இதை எழுதும் பொழுதும் இதயத்திலகும் மெய்ப் பொருளின் மூர்த்தமே அவர் என்பது நிச்சயமாகிவிட்ட உண்மையாகத்தானே தெரிகிறது ? அவரில்லையேர் இவனே 'ரைட் ஆஃப்' ஆக வேண்டியதுதான் என்று எப்படி ஆக்கினார் ? இன்ஜெக்ஷன் போட்டதாகவோ, அம்பு எய்ததாகவோ, மலர் சொரிந்ததாகவோ, அமுதம் ஊட்டியதாகவோ

@ Page 121

ஒன்றும் தெரியவில்லை என்றேன். ஆனால் லேட் ஆக்ஷன் மருந்து என்பார்களே அப்படி, அந்த மருந்து வேலை செய்வதும் தெரியாமலே, இத்தனையும் அந்த இரவு செய்திருக்கிறார்! சித்த நோய்க்கு இன்ஜெக்ஷன் ; முன்வினைக்கு அம்படி; முள்ளான எதிர்ப்புணர்ச்சியே இசைவுணர்வான மென்மலராயிருக்கிறது ; ப்ரேம அம்ருத ஊட்டும் அமோகமே நடந்திருக்கிறது! அவரை இன்னவென்று 'புரிந்து' கொண்டு ஒன்றினேன் என்பதில்லை. உண்மையான கவிதையெனில் அதன் பொருள் அறிவுக்குப் புரியுமுன்னரே, ஸாரம் உள்ளத்துள் இறங்கிவிட வேண்டுமென்று டி.எஸ்.எலியட் சொன்னது போல அவர் 'இன்ன' என்று புரியுமுன்பே 'என்ன'வோ அந்த ஸாரமாக உள்ளே புகுந்து விட்டார்! போகப் போக, புரியக்கூடிய அளவுக்குப் புரியவும் செய்தது. ஒன்றேயான உயிர்த் தத்வம் என்று நான் கருதி வந்ததன் ஸாக்ஷாத் உருவமே அவரென்று புரிந்தது. அநாமதேயப் பட்டாளத்தில் ஒருவர் என்று நான் எண்ணியவர் வாஸ்தவத்தில் அந்த அநாமதேய ஏகத்தின் நாம–ரூபச் சின்னமே என்று புரிந்தது.

அவராக உள்ள அவரே ஸத்தியம் என்றுணர்ந்ததன் உபாங்கமாக, அவர் சொல்வதே சட்டம், அவர் செய்து காட்டுவதே உய்வழி என்றும் தீர்மானமாகிவிட்டது. என் நூதனக் கொள்கை, புரட்சிக் கருத்து யாவும் மாயமே மறைந்தொழிந்தன! இதுவும் முதலில் அந்தரான்மாவில் தன்னியல்பாகப் பிறந்த உறுதியேயாகும். பிற்பாடுதான்

அவருடைய உபதேசத்தாலும், அருட் சக்தியாலும் இது அறிவு பூர்வமாகப் புரிந்தது!

முக்கியமாக என்ன புரிந்ததென்று சுருக்கமாகச் சொன்னால் – ஒன்றேயான உயிர்த் தத்வம் குணம், குறி இல்லாமலிருப்பது மட்டுமின்றி ஒரு நிலையில் அலகிலா

@Page 122

லீலா நாட்ட – க்ருபா நாட்டங்களோடும் இருப்பது. லீலா நாட்டத்தில் ஏகப் பெருவாழ்வான தன்னை ஏகப்பட்ட சிறுவாழ்வினராக்கி, சிறிய சிறிய தனி மனங்களைக் கொண்டு அவர்கள் கர்மத்திலும் கர்ம பலனிலும், அதன் விளைவான ஜன்மச் சூழலிலும் சிக்குமாறு செய்கிறது. இது அப்படியே முடிந்து போகாமல் க்ருபா நாட்டத்தால் அவர்களை இவற்றினின்று மெல்ல மெல்ல மீட்டுத் தன் ஏகப் பெருவாழ்வில் ஐக்யமுற்று உயிர்த் தத்வமாகவே நிற்கவும் வழிகாட்டுகிறது. இங்கேயும் லீலை தொடர்வதால் அச்சிறு வாழ்வினதே ஸ்வதந்திரத் தேர்வும் ஸ்வய ப்ரயத்னமும் செய்வது போலத்தான் காட்டி, அதற்கேற்பவே தன் க்ருபையை ஸூக்ஷ்மமாகப் பொழிந்து மேலே மேலே நடத்திச் செல்கிறது. இப்படிப்பட்ட ப்ரயத்னமாக ஸாதனை என்றும் அதனை ஸாதனை 'க்ரமம்' என்று ஆக்கும் பல மார்க்கங்களும் நிச்சயம் இருப்பதாகவே வியவஉறாரத்தில் காட்டுகிறது. முற் கர்மாவைக் கழித்துக் கொள்ள உபாயமாகப் பற்றற் கர்மாவையே மார்க்கமாக வைத்திருப்பது பரம ஸத்தியமே. சிறிய தனி மனத்தைக் கழித்துக் காட்டுவதற்குப் பூர்வாங்கமாகச் சலனமயமான அதனை ஒருமுகப்படுத்த பக்தி மார்க்கத்தையும் அவசியமானதாக வைத்திருக்கிறது. மனமே மனிதன் என்றுள்ள நிலையில் மனங்கடந்த உயிர்த் தத்வத்தை எப்படிப் பிடிக்க முடியும்? அதனால் அம் மனோதீதமே மனத்திற்குப் பிடிபடும் ஸகுண ஈச்வரனாகிறது. அது மட்டுமின்றி, லீலா ருசியில் அந்த ஒரே ஈஸ்வரன் பல்வேறு மனப்பான்மையினரைக் கவரும் வகையில் பல தெய்வ வடிவங்களாகவும், அவதார – ஆசார்ய மூர்த்தங்களாகவும் ஆகி, மாந்தரை பக்தி மார்க்கமெனும் அன்பு வழியில் ஈர்த்து அவர்தம் மனத்தைத் தன்னில் ஒருமுகப்படுத்துகிறான். ஒருமுகப்

@Page 123

பட்ட பின்பே மனம் புத்துருப் பெற்று, தன்னையே கடக்கும் ஸூக்ஷ்ம தத்வத்தில் பிரவேசித்துத் தன்னை அடியோடு கரைத்துக் கொள்ள முடியும். இதற்கு உபாயமாகவே ஞானமார்க்கம் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் மெய் நாட்டத்துடன் முயன்றவனுக்கு க்ருபா சக்தியின் இறுதிக் கொடையாக சிறு மனம் சிதைந்து, சிறு வாழ்வு பெரு வாழ்வாகி, சிற்றுயிரே ஏக உயிர்த் தத்வமாக நிற்கிறது.

இம் மார்க்கங்களை விவரமான ஒழுங்கு விதிகளாக வகுத்துத் தர அப்பேருயிரேதான் பென்னம் பெரியோர் மூலம் ச்ருதி, ஸ்மிருதிகளான வேத தர்ம சாஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறது. அவற்றில், குறிப்பாக, அடித்தளமான கர்ம மார்க்கத்தின் ஆசார அநுஷ்டானங்களில் ஏன் இத்தனை வித வித்யாஸங்களென்றால், முற் கர்மா யாவருக்கும் ஸமமாயில்லாமல் விதவிதமாக வித்யாஸப்பட்டு அதற்கேற்பவே மறு பிறவி வாய்ப்பதால்தான். எப்பிறவியானாலும் அதற்கான குணத்தையும் கர்மத்தையும் செவ்வை செய்ய அநுகூலமாகவே விதிகள் உள்ளன. வேறெந்த நாட்டிலுமின்றி இங்கு மட்டும் இப்படி இருப்பானேன் என்பதற்கு விடை இந்த சாஸ்திரப்படியே நமது ஸமூஉறம் ஒழுகி வந்த வரையில் மட்டுமில்லாமல், அந்த ஒழுகுமுறை பாதிக்கப்பட்டும் பழைய 'பெடல்' வேகம் தேயாமலிருக்கும் இன்றைக்குங்கூட, இங்கேதான் மற்ற எல்லா நாடுகளையும் விட அதிகமாக ஞானியரும், யோகியரும், பக்தரும், ஸித்தரும் வாழையடி வாழையாகத் தோன்றி, அந்தப் பிற நாட்டினரும், 'ஆன்மியத்திற்கு பாரதமே!' என்று கொண்டாடுவதிலேயே இருக்கிறது.

இப்படிப் புட்டுப் புட்டு தெரிந்து கொள்ளு முன்பே 'இவர்தான் ஜகத்குரு. இவர் காட்டும் பாதையே ஜகத்திற்ஹ

@Page 124

கானது' என்று ஆவி அறிந்து கொண்டது. 'இவர் வழி போனால் உலகு உருப்படாது. நல்ல வேளை, பெரும்பாலான மக்கள் அப்படிப் போகவில்லை' என்று எண்ணியவன் 'உலகு உருப்பட வேண்டுமானால் இவரின்றி வழியில்லை. அனைத்து மக்களும் இவர் காட்டுவதே கதி என்று சேர மாட்டார்களா ?' என்று எண்ணலானேன்!

உலகத்தின் கதியும் கதையும் இருக்கட்டும், சிறியேனான நான் ஏன் அதுபற்றி அதிகம் சொல்ல வேண்டும் ? என் கதை என்னவாயிற்று, சொல்கிறேன்.

கதை 180 பாகையும் திரும்பி விட்டதாக அந்த நான்கு நாட்களில் தோன்றினாலும் அப்புறம் அந்தத் தீவிரம் சிறுகச் சிறுகக் குறையத்தான் செய்தது. கர்ம அதியை க்ருபாகதி ஒரே வீச்சில் நசிப்பித்து விடுவதில்லையே! ஆனால் க்ருபா வீச்சு என்று ஒன்று பரம உன்னதமாக இருப்பது தெரிந்தே விட்டது! க்ருபா சக்தி என்பது மெயய்லும் மெய்யாக நம் ஸ்ரீசரணர்கள் என்ற ரூபத்தில் தாற்காலிகமாகவேனும் 'காட்டாதனவெலாம் காட்டி,' அப்படிக் காட்டியதாலேயே கண்டதை நிரந்தரமாக ஸித்தியாக்கிக் கொள்ள வேண்டும் என்ற விழைவுக்கு வித்திட்டு விட்டது. விழைவை

விளைவாக்கிக் கொள்வதற்கு ஸாதனை முறையையும் காட்டிக் கொடுத்து, கூடவே துணை நின்று தூண்டிக் கொடுத்து, அவ்வப்போது தன்னுடைய அதிசய வீச்சையும் காட்டி, மற்றப் போதுகளிலுங்கூட இவன் பாஸ் மார்க்குக்கு கீழே விழாமல் ரக்ஷித்து வருகிறது. இதில் 'ஸ்வய' ஸாதனை என்பது 'உள உளாக்கட்டை'க்குத்தான். ஸாதிப்பது அவருடைய, அல்லது அவராகிய, க்ருபா சக்திதான்! அதனால்தான் துணிவாகப் பாஸ் மார்க் கோட்டுக் கொண்டது! "யௌவனத்தின் அகராதியில் ஃ

@Page 125

'ஃபெயில்' என்ற வார்த்தை கிடையாது," என்று ஓர் ஆங்கிலக் கவி சொன்னான். க்ருபையின் அகராதியில் கிடையவே கிடையாது!

'தடுத்தாட்கொண்ட புராணம்' என்று தலைப் பிட்டிருக்கிறேன். ஆயினும் அவ்வாறு ஒரேயடியாக ஆட்கொள்ளப்பட்டவனின் சரணாகத் பாங்குக்கு எட்டவே நின்று வந்திருக்கிறேன். அப்படியும் அவர் க்ருபை புரிந்து கொண்டே வந்திருப்பதில்தான் அவரது அருமை மேலும் ஓங்கித் தெரிகிறது! 'இத்தனை செய்தவர் இனியும் செய்ய வேண்டியதைச் செய்யாது விடாமாட்டார். சுதந்திர யுகத்தின் அசல் பிரதிநிதியாயிருந்த விறைப்பு வீராப்புக் காரனுக்குப் பணிவும் கட்டுப்பாடுமின்றி நிஜ சுதந்திரமான ஆத்ம சுதந்திரத்திற்கு வழியில்லை என்று உணர்வித்த அந்த விநயவிக்ரஉறர் மனத்தின் முனைப்பே அற்றுப் போன சரணாகதப் பாங்கையும் புரிவிப்பார்,' என்று நம்புகிறேன். 'ஏண்டா வந்து தொலைத்தோம்?' என்று முதல் நாள் மாலை எண்ணியவனை மறுநாட் காலையே 'எங்கேடா அந்த மனப்பான்மையைத் தொலைத்தோம்?' என்று தேட வைத்தவராயிற்றே! அவரால் மனத்தையே தொலைக்கச் செய்து அதற்கு அதீதமான ஆத்மாவில் சாச்வதமாகச் சேர்ப்பிக்க மட்டும் முடியாதா, என்ன?

நடக்கப் போவதைப் பற்றி இப்போது என்ன? நடத்துபவர் அவர் என்னும் போது அதைப் பற்றி என்ன சிந்தனை? இப்போதைக்கு, இதுவரை நடத்திக் கொடுத்திருக்கிறாரே, தகுதி பாராமல் வாரிக் கொடுத்திருக்கிறாரே, அதற்கு நன்றி, நன்றி, நன்றி. சரணாகதி செய்யாத போதும் அரணாகக் காக்கும் அந்த ஸ்ரீசரணர்களின் சீரார் சரணங்களில் நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

சரணம் பவித்ரம் விததம் புராணம்
யேந பூதஸ் – தரதி துஷ்க்ருதாநி
தேந பவித்ரேண சுத்தேந பூதா
அதி பாப்மாநம் அராதிம் தரேம

–மஉறா நாராயணோபநிஷத்

"பவித்திரமான சரணம். எங்கும் பரவியது, எதற்கும் முந்தையது. அதனால் ஜீவன் தூயோனாகித் தீவினை கடக்கிறான். அத்தகு பவித்திரமான, பரிசுத்தமான சரணத்தால் புனிதராகிப் பாபத்தையும் பகையையும் கடப்போமாக!"

சுபம்.